www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

UK PRICE 90 P

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

ஜூலை.02-ஜூலை.08,1995

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 108

## பிரபா சந்திக்கும் புதிய நெருக்கடிகள்!

## வடக்கிலிருந்து புதிய தகவல்கள்



எக்ஸ்ரே ரிப்போர்ட்

கதறியழுத இந்திய மக்கள்

அற்புதன் எழுதும் அரசியல் தொடர்

சிக்கென்ற உடலுக்கு சுலபமான ஒரு பயிற்சி!

ஆணுக்கும்-பெண்ணுக்கும் அசத்தலான யோசனைகள்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## விஷம் தூவும் விவாதங்கள்

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

தென்னிலங்கையில் மெல்ல
மறுபடியும் விழித்துவரும்
இனவாதம் பற்றி
முன்பே முரசு சுட்டிக்காட்டியிருக்கிறது.

சிறு சம்பவங்கள்தானே என்று
அலட்சியமாக இருக்கலாகாது.
சிறு துளி பெருவெள்ளம்.

வெள்ளம் தலைக்கு மேலே
வந்தபின்னர், விழுந்தடித்துக்கொண்டு
வியாக்கியானங்கள் சொல்வதுதான்
தவறான மரபாக தொடர்கிறது.

அந்த மரபை உடைத்தாலென்ன?
உடைக்கும் பொறுப்பு
அரசியல் தலைவர்களின் கைகளில் மட்டுமல்ல
சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும்
அதிகாரிகள் கையிலும் இருக்கிறது.

அதிகாரிகளின் அலட்சியத்திற்கு
காலிக் கலவரம் ஒரு சான்று.
வேலிகளில் உறுதி இல்லையானால்
காலிகளின் கொடி பறக்கத் தொடங்கிவிடும்.

கவனிக்க வேண்டிய முக்கிய விடயம்
'செய்திச் சுதந்திரம்' என்ற பெயரில்
தொலைக்காட்சி நிறுவனங்கள் சில
இனவாத விஷம் துப்புதல்களுக்கு
இடம் கொடுத்து வருகின்றன.

'செய்திச் சுதந்திரம்'
வரவேற்கப்படவேண்டிய விடயம்.
ஆனால் எந்தவொரு சுதந்திரமும்
எரியும் பிரச்சனைகளுக்கு
மேலும் எண்ணெய் ஊற்றுவதாக
மாறிவிட அனுமதிக்கலாகாது.

வைத்தியரின் கரத்தில் இருக்கும்
கத்திக்கும்,
கசாப்பு கடைக்காரரின் கத்திக்கும்
இடையே வித்தியாசம் இருக்கிறது.

'செய்திச் சுதந்திரமும்' அப்படித்தான்.
பொறுப்புணர்வு இல்லாதவர்கள்
செய்திச் சுதந்திரத்தை பயன்படுத்தும்போது
விவாதங்கள், கலந்துரையாடல்கள்
என்ற ஜனநாயக அணுகுமுறைகளில்
இனவாதம் ஒரு பாரமாகி விடுகின்றது.
அதனால் பக்கச் சார்பும் ஏற்பட்டுவிடுகிறது.

மாற்றுக் கருத்துக்கு
இடமளிக்கிறோம் அல்லவா
தவறான கருத்துக்களை மறுக்கலாமே
என்று கேட்கலாம்.

ஒரு கருத்து பரவி
அந்தக் கருத்து மறுக்கப்படுவதற்கிடையில்
ஏற்படும் வெறுப்புணர்வுகள்-
விபரீதங்கள் பற்றி சிந்திக்க வேண்டாமா?

நோய்க்கு மருந்து இருக்கிறது
என்பதற்காக-
தடுப்பூசியே தேவை இல்லை
என்று எவர்தான் சொல்வார்கள்?

ஒழிந்துபோன பிளேக் நோய்க்கும்தான்
மருந்திருக்கிறது; வைத்தியமிருக்கிறது.
ஆனால் அதுவே திடீரென்று பரவியதால்
வைத்தியர்களே திணறிப் போனார்களே?

இனவாத கருத்துக்கள் பரவுவதும்
பிளேக் நோய் மாதிரித்தான்.
முன்னெச்சரிக்கை தேவை.
குறிப்பாகவும், சிறப்பாகவும்
வெகுஜன தொடர்பு சாதனங்களில்
விஷம் பரப்பும் விதமான விவாதங்கள்
ஆபத்தானவை. ஆரோக்கியமற்றவை.

தமிழர்களுக்கு ஒரு வரலாறே கிடையாது
என்று பேசுமளவுக்கு-தனியார்
தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில்
தாராள சுதந்திரம் தழும்புகிறது.

படை நடவடிக்கைகள் விடயத்தில்
செய்திகள் வெளியிடுவதில் மட்டும்
தனியார் வானொலி, தொலைக்காட்சிகளில்
செய்திச் சுதந்திரம்
அடக்கியே வாசிக்கப்படுகிறது
என்பதையும் கவனிக்க முடிகிறது.

'செய்திச் சுதந்திரம்' என்று
சொல்லப்பட்டாலும் அதற்கும்
சில வரையறைகள் உண்டல்லவா?
வரையறைகளும் இருக்கத்தானே செய்கின்றன.

அப்படியான வரையறைகளில் ஒன்றாக
இனங்களை அவமதிக்கும்-
சுய கௌரவங்களை சுரண்டும்-
வரலாறுகள் மீது வம்புகளை தொடுக்கும்-
நிகழ்ச்சிகள் எந்த உருவிலும்
இடம்பெறாமல் தடுத்தால் என்ன?
அரசு யோசிக்க வேண்டும்.
வெள்ளம் வர முன்னர் அணை தேவை!

□□

மீண்டும் மறு மடலில்
வந்து கலக்கும்வரை.

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## அன்பு! அன்பு!! அன்பு!!

தேவன் தம்முடைய ஒரே மைந்தனாகிய இயேசுவை இவ்வுலகில் தந்து இவ்வளவாய் நம்மில் அன்பு கூர்ந்தார் என யோவான் 3:16ல் எழுதப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல அவர் மனித குலத்தின் அன்புக்காக ஏங்குகிறார். யோவான் 21:15 ல் சீமோன் பேதுரு எனப்படும் சீடன் ஒருவனைப்பார்த்துக் கேட்ட மூன்று கேள்விகளிலிருந்து இயேசுவின் அன்பின் தாகம் புலப்படுகிறது.

முதலாவது-நீ இவர்களிலும் அதிகமாய் என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? எனக்கேட்டார். ஆம்! நீர் என் நண்பனாக இருப்பதால் உம்மை விரும்புகிறேன் எனபது மனிதன் பதில். உனது அன்பு தன்பால் மட்டுமே செலுத்தப்பட விரும்பி அவர் கேட்கும் கேள்விதான் இது. ஒருவேளை சுலபமாகத் தெரியலாம். உண்மைதான். உனது அன்புக்காகவே ஏங்குவதால்தான் இவர்களிலும் அதிகமாய் என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா எனக் கேட்கிறார்.

இரண்டாவதாக-நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? இது உனக்குத் தரப்படும் தனிப்பட்ட கேள்வி. நீங்கள் யாரையாவது நேசிக்கலாம். இது உங்களைத் திருப்திப்படுத்துகிறதா? உங்களுக்காக சிலுவையில் தொங்கி நமது பாவங்களுக்காக மரித்து, நம்மை இரட்சிக்க உயிர்த்தெழுந்த இயேசுவினிடத்தில் கூறும்வரை அப்படி இருக்கவே முடியாது. தம்மையே முழுமையாக அர்ப்பணித்தவரிடத்தில் அன்பு கூராவிட்டால் யாரிடத்தில் அன்பு கூருவீர்கள்? உங்கள் காணிக்கைகள், செயல்களைப் பார்க்கிலும் உங்கள் அன்பு ஒன்றையே இயேசு நாடுகிறார்.

போதகர்.ரி.ஏ.ஜே.அதிசயராஜ்-வத்தளை.

## ஆன்மீகம்



### அல்லாஹ்வின் கடிதமே அருள் மறை திருக் குர்ஆன்

அல்லாஹ்வின் அருள் மறை திருக்குர்ஆனை ஒரு கட்டளைக் கடிதமாகவே உணவேண்டும்.

"அடியானே! உனக்குத் தெளிவில்லையா? உனது நண்பன்ஒருவனிடமிருந்து ஒரு கடிதம் வருமாயின் நீ வழிநடந்து கொண்டிருந்தாலும் உடனே நின்றுவிடுகிறாய்."

"ஒரு பக்கமாக ஒதுங்கிப் போய் அதன் ஒவ்வொரு சொல்லையும் படிக்கிறாய்."

"இந்த வேதமோ நீ நன்கு விளங்கி அமல் செய்யும் பொருட்டு நான் உனக்கு அருளிய கடிதமாகும்."

"ஆனால் இதை நீ அலட்சியம் செய்கிறாய். இதன்படி நீ செயல்படுவதுமில்லை. சில சமயம் நீ இதை ஓதினாலும் இதன் கருத்தை நீ சரிவர உணர்ந்து கொள்வதில்லை." என்று ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு அருளச் செய்த தௌராத் வேதத்தில் அல்லாஹ் கூறியுள்ளான்.

எம்.சி.கலீல்-கல்முனை – 05

## கவிதைப்போட்டி இல–105

### பரிசுக்குரிய கவிதை

### அங்கலாய்ப்பு

ஆயுதப் போரில் இன்று ஆனதென்ன?
அண்ணன் அழிந்தானோ?
அக்கா அமிழ்ந்தாளோ?
ஆறு மணிச் செய்தி கேட்க
அங்கலாயக்கும் பிஞ்சுயிது!

சி.தங்கவடிவேல்-மட்டக்களப்பு.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### கோபாவேசம்?!...

வானொலியின்-சத்தம்
ஒரு பக்கம்!
கடிகாரத்தின்-கத்தல்
மறுபக்கம்!
அடச்சே!...
ஹாயாக
தூங்க முடியவில்லையே?!...

ஷிபான்.எம்.ஹுஸைர்-அக்குறணை.

### ஓய்வு கொள்!

கொஞ்சம் புளுகு-கொஞ்சம் விளம்பரம்
கொஞ்சம் பேச்சு-கொஞ்சம் பாட்டு
கூடிவருவது உனது குரல்
வேண்டாம் ஓய்வுகொள!

சிவ ஹரேந்திரன்-மட்டக்களப்பு

### இயக்க முடியாதோ?

அழகாய் வடிவமைத்து
ஆறடி மேல்வைத்தால்
இதை என்னால்-என்ன
இயக்க முடியாதோ?

எஸ்.ஏ.ராஜா-எல்ல.

### பழகலாமோ?

பழைய ரேடியோ தான்
பழகச் சரிபோல...!

முரளிதரன் மயூரன்-திருமலை.

### "என்னவா...!"

எட்டமாட்டேன் என்ற
எண்ணத்திலா எட்டா
இடத்தில் வைத்தீர்?
எட்டியறிய வேண்டியவை
எவ்வளவோ எனக்கிருக்க
இதுவுமொரு எட்டமோ
என்னவா முயற்சிக்கு?

மாதிஹா யாஸீன்-நெஹிவளை.

### 'எச்சரிக்கை'

தனிமையில் என்னை விட்டால்
தாங்குமோ எனது மனம்?
இனிமையில் இருப்பதற்கு
இது ஒரு முயற்சி தானே?
இனியும் எனை அடைத்து வைத்தால்
இப்படித்தான் எச்சரிப்பேன்.

அம்பிளாந்துறையூர்-அரியரன்.

### வாழாதே பாப்பா

பொய் கேட்கக் கூடாது பாப்பா-மனம்
புண்ணாகிப் புலம்பாதே பாப்பா
நெய்கின்ற துணி யில்லா நாட்டில்-நீ
நெஞ்சுரமின்றி வாழாதே பாப்பா!

ச.மகாலிங்கம்-வெலிமடை.



### ஆசை

பின்னழகைக் காட்டிக்கொண்டு
வியக்கவைக்கும் விந்தையிதோ? -உன்
முன்னழகைக்காட்டிவிடு
முகத்தழகைப் பார்த்துவிட

திருமதி.எஸ்.ரட்ணமணி-கட்டுபுலா

### வியப்பு

அம்மா அயர்ந்து விட்டாள்
ஆத்தா அடுக்களையில்
அப்பாவோ ஆபிசில்
ஆனால் நான் மட்டும்
விஞ்ஞானம் விழித்தெனக்கு
வேண்டுவன தரனும் என்று
வேண்டுகின்றேன் அதனிடமே!


திகந்திக்கா கனகசிங்கம்-மட்டக்களப்பு.

### எத்தனை பேர்?

இன்றைக்கு
பொஸ்னியாவில் செச்னியாவில்
பொசுங்கியோர் எத்தனைபேர்?
காஸாவில் காஷ்மீரில்
கரியானோர் எத்தனைபேர்?
செய்தியினைச் செவி மடுக்க உடனே
ஆவியினை முடுக்கிவிடு மகனே!

ரேணுகா நிபாய்தீன்-ஏறாவூர்-02.

## கவிதைப் போட்டி இல-108



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 08.07.1995

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 108
தினமுரசு வாரமலர்
த.பெ.இல–1772,
கொழும்பு.

### தொலைந்த தேசம் எது?

செல்லடியில் செத்த மாமாவும்
பொல்லடியில் போனமாமியும்
தேடிச் சென்ற சித்தாவும்
தேம்பி அழும் சித்தியும்
தொலைந்த தேசம் சொல்லுமோ...?

பொகவந்தலாவை-எஸ்.கோடீஸ்வரன்.

### அறிதல்

உயிருள்ள பொம்மையொன்று-உலகில்
உயிர் தொலைத்தவர் கணக்கறிய
உயரம் வைத்தேறித் திருகியதோ?

இரா.கலைவேந்தன்-மட்டக்களப்பு.

## வாசகர் சாலை

தினமுரசு ஆசிரியருக்கு:

கனடாவாழ் இலங்கைத் தமிழ் மாணவியான நான், சித்திரை 30ம் திகதி வெளிவந்த தினமுரசு என்ற வாரப்பத்திரிகையை படித்தேன். அதையிட்டு எனக்கு தினமுரசு பத்திரிகையில் மிகவும் ஆர்வமுண்டாயிற்று. அதுமட்டுமன்றி நான் சிறுகதைகள், கவிதைகள் ஆகியனவற்றை இப்பத்திரிகையில் வெளியிட ஆசைப்படுகின்றேன். அவ்வாறு நான் உங்கள் பத்திரிகையில் என் கதைகளை வெளியிட வேண்டுமெனில் எப்படி-எங்கே அனுப்ப வேண்டும் என்பதை எனக்கு விபரமாக பதில் எழுதி மேலுள்ள விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். நன்றி.

உதயா ஆறுமுகம்- கனடா

*உங்கள் ஆர்வம் நன்று. முரசின் தபால் பெட்டி இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள். தரமானதாயின் நிச்சயம் பிரசுரமாகும்.*

ஆர்.



நான் தினமுரசு பிரியன்,

என் அன்பு முரசே, எனக்கு ஒரு உதவி வேண்டும். வாரம் ஒரு நாடு என்ற தலைப்பில் ஜெர்மன் நாட்டைப் பற்றி அறிய வேண்டும். தயவு செய்து எனக்கு ஜெர்மன் நாட்டைப்பற்றி தனிப்பட்ட முறையில் சரி முரசு மூலம் சரி எனக்கு அறியத்தரவும்.

கே.எம்.பதுர்டீன் – குவைட்

*'வாரம் ஒரு நாடு' என்னும் பகுதியில் ஜெர்மன் நாடும் விரைவில் இடம்பெறும்*

ஆர்.

என் அற்புத மலரே
தினமுரசே
உனது அம்சங்கள்
அத்தனையும்
வரவேற்கத்தக்கது.
உனது சேவை வளர
எனது வாழ்த்துக்கள்.

திருமதி.லதா பத்மநாதன் -குவைட்

"கிளைடர்" என்ற வார்த்தையை மாத்திரமே! நினைக்க முடிந்த எங்களுக்கு "கிளைடரின்" அற்புத படத்தையும் எங்கள் கண்முன் நிறுத்திய "தினமுரசுக்கு" ஒரு அற்புத பேஷ்!!!

கிண்ணியா-எம்.எம். ஸன்பர்.

வீரமக்கள் தின கவிதைப் போட்டி?

சுவிஸிலுள்ள ஐக்கியத்தை வலியுறுத்துவோர் அமரர் உமாம கேஸ்வரனின் நினைவு தினத்தை யொட்டி முரசு மூலம் நடத்திய மேற்படி கவிதைப் போட்டியில் நானும் கலந்து கொண்டேன்.

ஐநூறு ரூபாவுடன் நினைவுப் பரிசுகள் பெறும் 10 பேரில் ஏழாவதாக நான் தெரிவு செய்யப்பட்டதை முரசின் 79 வது இதழ் மூலம் அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.

இருப்பினும் இதுவரை எதுவித பரிசுப் பொருள்களோ பணமோ வந்து கிடைக்கவில்லை என்பதை தயவாய் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிரமத்திற்கு மன்னிக்கவும்.

பா.பானுசந்தர்-அக்கரைப்பற்று 07

*உங்களைப் போலவே பலரும் கடிதம் அனுப்பியுள்ளார்கள். அந்தக் கவிதைப் போட்டி முரசால் நடத்தப்பட்டதல்ல. ஆயினும் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளோம். விரைவில் இது பற்றிய முடிவு உங்களுக்கு தெரியப்படுத்தப்படும்.*

ஆர்.

என் இனிய முரசே, இளம் உள்ளங்கள் மட்டுமில்லாமல் முதியோரும் சிறுவர்களும் கூட உன்னைப் படித்துச் சுவைக்கிறார்கள். இன்றேபோல் என்றும் உன் சேவை வளர என் வாழ்த்துக்கள் கோடி பல.

கே.கௌரி-கொழும்பு 06

www.padippakam.com

# யுத்தத்தில் வெல்லும் வரை போர் தொடரும்!

## தனியரசுக்கு குறைந்த சமரசம் கிடையாது!

## — வடக்கில் புலிகள் தீவிர பிரசாரம். பிரபா அழைப்பு ! —

(நமது நிருபர்)

வடபகுதியில் பாரிய யுத்தத் தயாரிப்புக்களில் ஈடுபட்டுவரும் புலிகள் அமைப்பினர் ஆட்திரட்டலில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். போர் தவிர்ப்பு நேரத்தில் கிழக்கில் புலிகளால் திரட்டப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு வடக்கில் வழங்கப்பட்ட பயிற்சிகள் பூர்த்தியாகி விட்டதாக தகவல் ஒன்று தெரிவிக்கிறது. பயிற்சி முடித்தவர்கள் கிழக்குக்கு அனுப்பப்படக்கூடும் என்று நம்பப்படுகிறது. அவ்வாறு கிழக்குக்கு அனுப்பப்பட்டால் புலிகளின் தாக்குதல்கள் கிழக்கில் மேலும் விரிவாக்கப்படும் என்று நம்பப்படுகிறது.

### பிரபா அழைப்பு

"இப்போது நாங்கள் விழிப்புடன் செயற்படத் தவறினால் நாம் செய்த தியாகங்கள், நாம் புரிந்த சாதனைகள், நாம் அடைந்த வெற்றிகள், நாம் அனுபவித்த துன்ப துயரங்கள், நாம் கொடுத்த உயிர் விலைகள், பொருள் இழப்புக்கள் அனைத்தும் அர்த்த மற்றவையாகிப் போகும்.

நாம் மீண்டும் அடிமை வாழ்வுக்குள் தள்ளப்பட நேரலாம். எனவேதான் எல்லோரும் ஆயுதமேந்தத் தயாராகுங்கள்! போர்க்களத்தில் குதியுங்கள்."

இவ்வாறு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கூறியுள்ளார்.

தற்போது புலிகள் அமைப்பினால் நடைபெற்றுவரும் ஆட்திரட்டல் நடவடிக்கைகளை முன்னிட்டே பிரபாகரனின் மேற்கண்ட வேண்டுகோள் வெளியிடப்பட்டுள்ளது.

"தேசத்தின் குடிமக்களுக்கோர் பகிரங்க அறைகூவல்" என்ற பெயரில் புலிகளால் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"தேசத்தின் இளம் புதல்வர்களே! மண்ணின் புதிய சந்ததியே!

எங்களுடைய நாட்கள், வரலாற்றின் மிக முக்கியமான ஒரு காலகட்டம். தமிழரின் சரித்திரத்திலேயே அதி சிறப்புவாய்ந்த ஒரு காலப்பகுதி இது.

தமிழினத்துக்கு ஒரு தனி இராச்சியத்தை நிர்மாணிக்கும் வரப்பிரசாதத்தை-வரலாற்றுப் பணியை எமது சந்ததிதான் பெற்றுள்ளது. இது சாதாரண விடயமல்ல.

எமது விடுதலைப் போராட்டத்தின் பளுவை அடுத்த சந்ததிமீதும் நாம் சுமத்த வேண்டாம். மாறாக, எமது கடின உழைப்பின் பலனை அவர்கள் அனுபவிக்கட்டும்.

எனவே தான் அத்தனை பேரும் யுத்தத்திற்காகப் புறப்படுங்கள்.

### சமரசம் கிடையாது.

சிங்கள அரசு ஒருபோதும் எமக்கு உரிமைகளைத் தந்துவிடப்போவதில்லை, எனவே எது நடந்தாலும் யுத்தத்தில் வெல்லும் வரையும் நாங்கள் போராடுவோம். இரத்தச் சகதியின் மீதெனினும் நாம் தமிழீழ தனியரசை பிரகடனம் செய்வோம்.

எங்களது இலட்சியம் தமிழீழம்தான். சிறீலங்கா அரசுடன் சமரசம் அல்ல.

எங்கள் நோக்கம் தனி அரசுதான். சிங்கள ஆட்சிக்கு கீழ் ஒரு சிற்றரசு அல்ல.

எம்மிடம் அதிநவீன ஆயுதங்கள் இருந்தாலும் மிகச்சிறந்த தந்திரோபாயங்கள் இருந்தாலும் ஆட்கள் இல்லாத அவற்றால் ஏது பயன்? அவை தாங்களாக சண்டை பிடிக்க மாட்டா என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எமக்காக போராடுவோம், எம் பெற்றோருக்காகப் போராடுவோம். எம் சகோதரர்களுக்காகப் போராடுவோம். தன்னைத்தானே ஆளுகின்ற தலைகுனியாத் தமிழீழத்திற்காகப் போராடுவோம்.

தமிழீழம் கனவல்ல. நாளைய் நம் நாடு."

இவ்வாறு புலிகள் தமது அவசர வேண்டுகோள் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆட்பலத்தை அதிகப்படுத்துவதில் புலிகள் காட்டிவரும் தீவிரத்தை அவர்களின் பிரசாரங்கள் வெளிப்படுத்தி வருகின்றன.

# மட்டக்களப்பு விவசாயிகள் அவதி!

## மாலை ஐந்து மணிவரை விவசாயம் செய்ய அனுமதி

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனைப் பகுதியின் நெற்செய்கைக் கண்டங்களான பூலாக்காடு, காட்டுக் கட்டு, சோலையாமடு, பெரியமுன்மாரி ஆகிய பகுதிகளின் சுமார் 2500 ஏக்கர் செய்கை பண்ணப்பட்ட நெல்வயல்களை அறுவடை செய்ய முடியாத சிக்கலான சூழ்நிலை தோன்றியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

இது விடயமாக மட்டு மாவட்ட விவசாயிகள் சம்மேளனம், கிரான் கமநலசேவைக்குழு, மற்றும் கே.துரைராஜசிங்கம் பா.உவும் பலமுறை எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் பயனாக விவசாயிகள் தமது வயல்களுக்குச் சென்று நெல் அறுவடை செய்ய சற்றுக் கூடியநேர அனுமதி படையினரால் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை வயலுக்குச் சென்றுவர அனுமதியிருந்ததாகவும் இவ்வனுமதி தற்சமயம் காலை 6 மணிமுதல் மாலை 5 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் கிரான் பெரும்பாக உத்தியோகத்தர் திரு.கே. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

எனினும் விவசாயிகள் இரவில் வயல் வாடிகளில் தங்கி நின்று விலங்குகளின் அழிவிலிருந்து வயல்களைக் காவல் செய்ய அனுமதியில்லை. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். விவசாயிகளின் பிரச்சனை தொடர்பாக தாம் கமநலச் சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர், அரசாங்க அதிபர், மாவட்ட பிரிகேடியர் ஆகியோரைச் சந்தித்திருந்ததாகவும் இறுதியாக வாழைச்சேனை இராணுவ கேர்ணல் ரட்ணசபாபதியைச் சந்தித்த பொழுதே விவசாயிகளுக்குப் புதிய நேர அனுமதி கிடைத்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

விவசாயிகள் தமது பெயர் விபரங்களை இராணுவ முகாமில் பதிவு செய்து அடையாள அட்டைகளை ஒப்படைத்து விட்டு வயலுக்குச் சென்று திரும்பும்போது அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இப்பகுதிகளில் எதிரும் புதிருமாக இருதரப்பினரும் நடமாடுவதால் தாம் என்ன செய்வதென்றே தெரியாது விழிப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

# வெளிநாடுகள் புலிகள் மீது அழுத்தம்

## அதனை முறியடிக்கவே ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்!

### ● புலிகளின் சர்வதேச செயலகம் தெரிவிப்பு! ●

வெளிநாடுகளில் புலிகள் அமைப்பினர் ஊர்வலங்களை நடத்தி வருவது தெரிந்ததே.

இந்த ஊர்வலங்களின் நோக்கம் குறித்து விடுதலைப் புலிகளின் சர்வதேச செயலகம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது- அதில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"சிறீலங்கா அரசின் பொய் பிரசாரத்தால் கவரப்பட்ட சில நாடுகள் எம்மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முற்பட்டுள்ளன.

இவ்வழுத்தங்களை எமது மக்களின் பூரண அணிதிரளல் மூலம் எதிர்கொள்ள முடியும். விடுதலைப் போராட்டத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் பகிரங்க ஆதரவை வெளிப்படுத்துவது மூலமே இதனைச் சாதிக்கலாம்.

எமது மக்களின் பாதுகாப்பு, கௌரவம், முன்னேற்றம் ஆகியவற்றை நிரந்தரமாக நிலைத்துச் செய்வதற்கு எமது அரசியல் விடு தலை ஒரு முன் நிபந்தனையாகின்றது. இதுவே நிரந்தரமானதும் நியாயமானதுமான சமாதானத்தை ஏற்படுத்தும்.

இவ்விலக்கை நோக்கிய எமது விடுதலைப் போராட்டத்தை அனைத்துலக அங்கீகாரம் பெறவைக்க நாமெல்லாம் அணிதிரள வேண்டும். இவ்வாறு வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு விடுதலைப் புலிகளின் சர்வதேச செயலகம் அழைப்பு விடுத்துள்ளது.

### பாம்புக்கு தலை, மீனுக்கு வால்.

## கூட்டணி மீது யாழ் தினசரி சாட்டை!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சமீபகால அரசியல் நடவடிக்கைகள் வழக்கம் போல அதன் பழைய பாணியில் அமைந்துள்ளதாக வடக்கில் வெளியாகும் பத்திரிகைகள் விமர்சனம் வெளியிட்டு வருகின்றன.

சமீபத்தில் கொழும்பில் கூட்டணியின் மத்திய குழு கூடியது. அவசரகால சட்டத்தை எதிர்க்கப்போவதில்லை என்றும், ஆனால் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலை வகிப்பதாகவும் கூட்டணி முடிவெடுத்திருந்தது.

அவசர கால சட்டம் தமிழர்களுக்கு எதிரானது என்று கூட்டணி கருதினால் அதனை எதிர்த்து வாக்களிப்பதில் என்ன தடை இருக்க முடியும். எதிர்த்து வாக்களித்தால் அரசிடம் பெற்றுவரும் சலுகைகள் கிடைக்காமல் போகும் என்று கூட்டணித் தலைவர்கள் நினைக்கிறார்கள்.

ஆதரித்தால் புலிகளால் பிரச்சனை, எதிர்ப்பு தெரிவித்தால் அரசின் அதிருப்தியை சந்திக்க வேண்டிவரும் என்பதால் நடுநிலை என்று சொல்லிக் கொள்கிறார்கள் என்பதே கூட்டணிமீது வைக்கப்படும் விமர்சனமாகும்.

இது தொடர்பாக யாழ்பாணத்திலிருந்து வெளிவரும் ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

22.6.95 அன்று வெளியான அந்த ஆசிரியர் தலையங்கத்தில் கூட்டணியின் தற்போதைய நிலைப்பாடு பற்றி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

பாம்புக்கு தலையும், மீனுக்கு வாலும் காட்டுவதே கூட்டணியின் நிலைப்பாடு. இது அவர்களுக்கு கைவந்த கலையாகும். என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவசரகால சட்டத்துக்கு ஆதரவளிக்கும் தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும் ஈழநாடு பத்திரிகை கண்டனம் தெரிவித்துள்ளது.

# அறுபது வயது அப்புவுக்கும் புலிகள் அழைப்பு!

## மாணவிகளுக்கும் போரில் சேர அறிவுரை!

கல்விக்கு தாம் எதிரானவர்களல்ல என்று புலிகள் அமைப்பினர் கூறிவருகின்றனர். அதே வேளையில் மாணவர்களை போருக்கு திரட்டுவதிலும் உணர்ச்சிமயமான பிரசாரங்களை புலிகள் மேற்கொண்டு வருகின்றனர். புலிகளின் ஆஸ்த்தான கவிஞர் எனப்படும் புதுவை இரத்தினதுரை 'வியாசன்' என்ற பெயரில் எழுதியுள்ள கவிதை 'ஈழநாதம்' பத்திரிகையில் வெளியாகியுள்ளது. அதிலிருந்து சில பகுதிகள்:

"தங்கையே!
எங்கே போகிறாய்?
ரியூட்டரிக்கா?
சந்தோசம்.
நன்றாகப் படித்து டாக்டராகு.
நல்ல மதிப்பு வரும்.
புண்ணுக்கு மருந்திடுதல் புனிதம்
ரணப்பட்ட
மண்ணுக்கு மருந்திடவும் வேண்டும்
மறக்காதே!
பல்லக்குத் தூக்குதற்குப் படிப்பெதற்கு?
அடிமைக்கு அறிவிருந்தும் ஆவதென்ன?
தன்மானம் வேண்டுமடி தங்கச்சி.
போராடிக்கொண்டு படி!
படித்துக் கொண்டு போராடு!

நில்லடா தம்பி!
உன்னை நிறுத்து விற்றாலும்கூட
நல்ல விலைக்கு நாளைக்கே விற்கலாம்.
பத்து பனைமரத்தைக் கட்டி இழுத்துக்
கொத்தியடுக்கவல்ல, கொளுத்த பருவத்தில்
சும்மா திரிகின்றாய்!
முகத்திலும், நெஞ்சிலும் உனக்கு
மயிர் முளைத்தது ஏன்?
வேண்டுமடா தம்பி வீரம்!
போ! நீயே! புயல்!
எழுந்து போராடு!

அறுபது வயது அப்புவுக்கு
இது அழைப்பு!
போர் முரசம் கேட்கும் பொழுதில்...இது என்ன
சுருட்டா? தூக்கி எறி.
கூச்சம் உனக்கெதற்கு?
காணி உறுதிகளை பேரனிடம் கையளித்து
நானிறந்தால் நீயென்று நாலுபேரும்
கேட்கச் சொல்."

இவ்வாறு அக்கவிதையில் புலிகளின் ஆஸ்த்தான கவிஞர் சொல்லியுள்ளார். வயதானவர்களையும் புலிகள் 'துணைப்படை' என்ற பெயரால் திரட்டிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

# திருமலையில் காணாமல் போன 9 தமிழர்கள்!

## இனம் தெரியாதவரால் தொடரும் கைதுகள்!

### ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வருகிறார் யாழ் எம்.பி.

திருக்கோணமலை மாவட்டத்தில் இனம் தெரியாதோரால் நடைபெற்றுவரும் கைதுகள் குறித்து பீதி நிலவிவருகிறது.

கடந்த இரண்டு மாதங்களுக்குள் திருக்கோணமலையில் 9 தமிழர்கள் காணாமல் போயுள்ளனர். இவர்கள் அனைவரும் தம்மை யாரென்று அடையாளம் காட்டாதவர்களால் கைது செய்யப்பட்டவர்கள்.

திருமலையில் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ள தமிழர்களும், அவர்கள் கைது செய்யப்பட்ட தினங்களும் கீழே தரப்படுகின்றன:

01. சதாசிவம் தங்கராசா-வயது 45, முகவரி- யூ.என்.எச்.சி.ஆர்.. அகதிமுகாம், அலஸ் தோட்டம், கைது செய்யப்பட்ட திகதி-26.04.95; 02. மகேந்திரன் ரமேஷ், வயது, 18, முகவரி-559, சீனன்குடா, திருக்கோணமலை, கைது செய்யப்பட்ட திகதி-30.04.95; 03. ஆசிர்வாதம் மரியதாஸ், வயது, 29, முகவரி-வெள்ளைமணல், சீனன்குடா, கைது செய்யப்பட்ட திகதி-02.05.95; 04. வேலாயுதம் சிவலிங்கம், வயது 33, வெள்ளைமணல், சீனன்குடா. கைது செய்யப்பட்ட திகதி-02.05.95; 05. கிருஷ்ண பிள்ளை சௌந்தரராஜன், வயது 30, சிலோன் ஜெட்டி, சீனன்குடா, திருமலை. கைது செய்யப்பட்ட திகதி-14.05.95; 06. பாக்கியராசா ரவீந்திரன், வயது 23, முகவரி- 3ம் வட்டாரம் சம்பூர், மூதூர், கைது செய்யப்பட்ட திகதி-20.05.95; 07. சுப்பிரமணியம் சித்திரவேல், வயது- 45, 4ம் வட்டாரம், கட்டப்பறிச்சான், மூதூர், கைது- 04.06.95; 08. சின்னத்துரை ஜெயக்குமார், வயது 17, 110/11 கோவில் வளவு, திருக்கோணமலை, கைது- 17.06.95; 09. செல்லையா நாகராசா, வயது, 56, இருதயபுரம் அகதிகள் முகாம், மூதூர், கைது செய்யப்பட்ட திகதி-20.05.95.

திருக்கோணமலையில் இனம்தெரியாதோரால் நடைபெற்றுவரும் கைதுகள் குறித்து தாம் ஏற்கெனவே பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளதாகவும், தற்போது காணாமல் போயுள்ள ஒன்பது தமிழர்கள் விடயமாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளதாகவும் ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் 'முரசு'க்கு தெரிவித்தார்.

# ஊர்காவல் படை தேடுதல் நடத்தாது!

## பொலிஸ் பொறுப்பதிகாரி பொதுமக்களுக்கு உறுதி

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான் குடிப் பகுதி மக்களுக்கு எச்சரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டதாக கிளம்பிய புரளியைத் தொடர்ந்து ஏறாவூரில் ஊர்காவல் படையினர் சேர்க்கப்பட்டனர்.

இதனையடுத்து ஏறாவூர் பகுதியைச் சுற்றியுள்ள தமிழ்க் கிராமங்களில் ஏற்பட்ட பதற்ற நிலைகாரணமாக ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரியான திரு.கருணாரட்ன ஏறாவூர் 5ம் குறிச்சியில் பொதுக் கூட்ட மொன்றை ஏற்பாடு செய்து பொது மக்களின் பீதியை நீக்கிப் பாதுகாப்பு உறுதி வழங்கினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், "இப்பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலையையும் பொதுமக்களாகிய உங்களின் அச்ச உணர்வையும் நானறிவேன். உங்களின் பூரண ஒத்துழைப்பிருந்தால் இப்பகுதியில் எதுவித அத்துமீறல்களும், அடாவடித்தனங்களும் இடம்பெற வழியில்லை. உங்களின் வேண்டுகோளுக்கிணங்க இனிமேல் ஏறாவூர் தமிழ் பகுதிகளில் முஸ்லிம் ஊர்காவல் படையினரோ அல்லது முஸ்லிம் பொலிசாரோ ரோந்து நடவடிக்கைகளிலும், சோதனையிடுதலிலும் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் இடம்பெற மாட்டாது. எனவே நீங்கள் அஞ்ச வேண்டாம்." என்றார். ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலாளர் என்.ஸ்ரீசங்கர் தனதுரையில், இக்கூட்டம் பக்கத்தில் வாழும் முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிரானதல்ல. இப்பகுதிகளில் பதற்றத்துடன் வாழும் தமிழ் மக்களின் சுய பாதுகாப்புக் கருதியே நடத்தப்படுகிறது என்றார். அக் கூட்டத்தில் 400க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

காத்தான்குடி புரளிக் கடிதம் கிளப்பிவிட்ட புரளியினால் இப்பகுதிகளில் காணப்பட்ட பதற்ற நிலை புலிகளின் மறுப்பறிக்கையின் பின்னர் மாயமாய் மறைந்து விட்டது.

# ஒரு புலி பலி

மட்டக்களப்பு காயாங்கேணி பாலத்தின் அருகே இருந்த இராணுவமுகாம் ஒன்று 26.05.95 அன்று புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது.

இத் தாக்குதல் குறித்து புலிகள் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தமது தரப்பில் ஒருவர் மட்டுமே பலியானதாக அறிவித்துள்ளனர். 2ம் லெப்டினன்ட் குணசீலன் (காசிநாதன் தவயோகம் மட்டக்களப்பு) என்பவரே பலியான உறுப்பினராவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

30 நிமிட கெரில்லாத் தாக்குதலில் படையினரிடமிருந்து ஆயுதங்களை கைப்பற்றியிருப்பதாகவும் புலிகள் கூறியுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

# உதவாத நிலையில் உபகரணங்கள் பாழ்பட்டுப் போகும் பயிற்சி நெறி

(ஏறாவூர் நிருபர்)


ஏறாவூர் இளைஞர் கழக சம்மேளனம் பிரதேச இளைஞர் யுவதிகளுக்கு கைத்தறி நெசவுப் பயிற்சியை வழங்குவதற்காக கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஏறாவூருக்குக் கொண்டு வந்த இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான 20 கைத்தறி நெசவு இயந்திர உபகரணத் தொகுதிகள் பயிற்சி தொடங்கப்படாமலேயே இப்பொழுது கவனிப்பாரற்று -விறகுக்கும் உதவாத நிலையில் உக்கிப் போய் கிடப்பதாக ஏறாவூர் இளைஞர் வள நிலையத்தின் தலைவர் ஜனாப் எம்.எஸ். எம். நஸீர் தினமுரசுக்கு தெரிவித்தார்.

இவ்வுபகரணத் தொகுதிகள் கொள்வனவு செய்யப்படும் போதே அவை பாவிப்பதற்கு உதவாதவையாக இருந்தது தெரியவருகிறது. கொள்வனவு செய்யப்பட்ட அவை மட்டக்களப்பு இளைஞர் சேவைகள் மன்றக் காரியாலயத்தில் ஒரு வருடத்திற்கு மேலாகக் கிடந்ததாகவும் ஏறாவூருக்கு கொண்டுவரப்பட்ட அவை 2 வருடங்களுக்கு மேலாக பயிற்சி நெறி தொடங்கப்படாமல் வைக்கப்பட்டிருந்து, பயிற்சி நெறிக்காக இரண்டு முறை பயிற்சிக் கொட்டில் கட்டப்பட்டு அவையும் தற்சமயம் சேதமடைந்து காடு மண்டிக்கிடப்பதால் உதவாத உபகரணத் தொகுதிகள் இப்பொழுது மிச் நகர் கி.அ.ச. கட்டிடத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

இனிமேல் எந்தத் திருத்தங்களை மேற்கொண்டாலும் அவற்றைப் பயிற்சி நெறிக்கு எடுக்கமுடியாதுள்ளது. இப் பயிற்சி நிலையம் செயற்பட்டிருந்தால் ஒரே தடவையில் 40 இளைஞர் யுவதிகள் பயிற்சி பெற்றிருக்க முடியும். இன்றுவரை நூற்றுக் கணக்கான வறிய இளைஞர், யுவதிகள் இப்பகுதியில் வேலை வாய்ப்பு பெற்றிருக்கவும் முடியும்.

உரிய அதிகாரிகளிடத்திலும், ஏறாவூரைச் சேர்ந்த முன்னாள் பா.உ. விடத்திலும் இது விடயமாக அறிவித்தும் கடந்த மூன்று வருடகாலமாக அவர்கள் எதுவித உரிய நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லையென்று ஜனாப் நஸீர் மேலும் தெரிவித்தார்.

# காட்டூண் மூலை



நன்றி—ஐலண்ட்

# அறவிட்ட பணத்திற்கு என்னாச்சு?

ஸ்பிரிங்வெலி தோட்டத்தில் 1993ம் ஆண்டு தோட்டத்தில் வசிக்கின்ற அனைவருக்கும் தோட்ட நிர்வாகமே அடையாள அட்டை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் அறிவித்தமையால் தோட்டத்தில் வேலை செய்கின்றவர்கள், வேலை செய்யாதவர்கள் கணக்கிடப்பட்டு, ஒரு நபருக்கு அடையாள அட்டைப் படத்துடன் படிவம் நிரப்புவதற்கு ரூபா 50/= வீதம் அறவிடப்பட்டது.

தோட்டத்தில் வேலை செய்யாதவர்களுக்கு அவர்களுடைய உறவினர், பெற்றோர்களின் சம்பளத்தில் அறவிடப்பட்டது.

அதன்படி 1993ஆம் ஆண்டு ஜூன் மாதம் புகைப்படங்கள் பிடிக்கப்பட்டது. இதில் அடையாள அட்டை வைத்திருந்து ஜே.வி.பி.கலவரத்தில் தொலைத்தவர்களின் அடையாள அட்டைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. புதிதாக எடுப்பதற்கு 70 பேர் இருந்தனர். இவர்கள் அனைவரும் தோட்டத்தில் உள்ளவர்கள். ஆனால் இவர்களுடைய பணத்திற்கும், படத்திற்கும் என்ன நடந்தது? என்று இதுவரை யாருக்கும் தெரியாது.

தோட்டத்தில் கேட்டால் கிராமசேவகரிடம் அனுப்பப்பட்டது என்று கூறுகிறார்கள், கிராமசேவகரிடம் கேட்டால் எனக்குத் தெரியாது; அது என் பொறுப்பு அல்ல, தோட்ட நிர்வாகம் தான் செய்ய வேண்டும் என்கிறார்கள்.

தோட்ட நிர்வாகம் இது சம்பந்தமாக கண்டும் காணாதது போல் நடந்துகொள்கின்றது. தோட்ட தலைவர்மார்கள் கேட்கும் போது அடுத்த மாதம் வாருங்கள், அடுத்த வாரம் தருகின்றேன் என்று சமாளித்து வருகின்றனர்.

அண்மையில் இத்தோட்ட இளைஞர்கள் அடையாள அட்டை சம்பந்தமாக தலைமை அலுவலகத்துக்கு சென்று பார்த்தபோது அவர்களின் பதிவின்படி 3 மாதங்களுக்கு முன்பே அடையாள அட்டை அனுப்பியதாக கூறியுள்ளனர்.

இங்கு தோட்ட நிர்வாகத்திடமும் கிராம சேவகரிடமும் கேட்டபோது வரவில்லை என்று கூறினார்கள். இவர்கள் கொழும்பில் கூறிய விடயத்தை கூறி திகதியையும் காட்டியபோது அடுத்த வாரம் வரும்படி கூறிவிட்டு, தேடிப்பார்க்கும் போது தோட்ட காரியாலயத்தில் 25 அடையாள அட்டைகள் தேங்கி இருக்கின்றன.

அடையாள அட்டைகள் இல்லாவிட்டால் இக்காலத்தில் வீட்டை விட்டு வெளியேற முடியாதுள்ளது. இதனால் பல இளைஞர்கள் இன்று தொழிலை விட்டு வீடுகளுக்கு வந்து வீட்டினுள்ளே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அரசு தோட்ட நிர்வாகம் அக்கறையில்லாது இருக்கின்றது. இவ்விடயம் சம்பந்தமாக தொழில் சங்கங்களும் இதுவரை தோட்ட நிர்வாகத்துடன் உத்தியோக பூர்வமாக் நடவடிக்கைகள் எடுத்ததாக தெரியவில்லை. இப்பத்திரிகை செய்திமூலமாவது ஒரு விமோசனம் கிடைக்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

சமூக நலன்விரும்பி
வ.அந்தனீஸ் (ஸ்பிரிங்வெலி)

# கட்டிமுடிக்கப்படாத வடிகால்

கிண்ணியாப் பிரதேச சபைக்குட்பட்ட பெரிய பள்ளிவாயல் வீதிக்கு பிரதேச சபையினால் வடிகால் கட்டப்பட்டது. இவ்வடிகால் ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கு கட்டப்பட்டுள்ளது. இவை முக்கியமான ஒரு துண்டுக்கு கட்டப்படாமல் விட்டதனால் மழை பெய்தால் அவ்விடத்தில் இரண்டு அடிக்கு மேல் நீர் நிரம்பி விடுகிறது. இதனால் மக்கள் நடந்தோ, வாகனத்திலோ, பைசிக்கிளிலோ செல்ல முடியாது பல்வேறு கஷ்டங்களுக்கு ஆளாகவேண்டியுள்ளது.

இது சம்பந்தமாக பிரதேச சபைத் தலைவரிடம் கேட்டபோது, பிரதேச சபையில் பணம் இல்லை என்று கூறினார். ஆனால் இப்போது பிரதேச சபையினால் பல்வேறு பகுதிக்கும் புதிதாக வடிகால் அமைக்கப்படுகிறது. அரை குறையாக இருக்கும் பெரிய பள்ளிவாயல் வீதி வடிகாலை பூர்த்தி செய்து இப்பிரதேச மக்களின் போக்குவரத்து கஷ்டத்தை இலகுபடுத் துவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

என்.எம்.எம்.பாரூக்
கிண்ணியா.

# ஐந்து "ஒசுசல" நிலையங்கள்

மேல் மாகாணத்திற்கு உட்பட்ட ஐந்து தள வைத்தியசாலைகளில், ஐந்து "ஒசுசல" நிலையங்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

கம்பஹா, நீர்கொழும்பு, வத்துபிட்டிவெல, அவிஸ்ஸாவெல, பாணந்துறை ஆகிய தள வைத்தியசாலைகளுக்குச் சொந்தமான காணிகளிலேயே, இந்த ஐந்து "ஒசுசல" நிலையங்களும் அமைக்கப்படும்.

மேல் மாகாண சபையின் சுகாதார, மகளிர் விவகார அமைச்சர் திரு.லக்ஷ்மன் அபேகுணரத்னா நமது நிருபரிடம் இதனைத் தெரிவித்தார்.

(மினுவாங்கொடை நிருபர்)

# தாமதம் ஏனய்யா தபால்காரரே?

பொகவந்தலாவை நகரில் அமைந்திருக்கும் உப-தபால் அலுவலகத்திலிருந்து இந்நகரத்துக்கும் அதன் சுற்றுப்புற கிராமங்களுக்கும் தோட்டங்களுக்கும் தபால் பட்டுவாடா செய்வது காலை 11 மணிக்குத்தான் ஆரம்பமாகின்றது. இதனால் அவசர கடிதங்களை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்துகின்றது.

மேலும், அட்டன் தபால் நிலையத்திலிருந்து பொகவந்தலாவை- உப தபால் நிலையத்திற்கான தபால் பொதி காலை 7 மணிக்கெல்லாம் வந்தடைகின்றது. இருந்தும் இத்தபால் நிலைய ஊழியர்களின் அசமந்த போக்கின் காரணமாகத்தான் நேரம் தாமதித்து கடிதங்கள் பட்டுவாடா செய்யப்படுகின்றது. அத்துடன் இங்கு மருந்துக்குக்கூட ஒரு தமிழ் ஊழியர் தானுமில்லை.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது சம்பந்தமாக சீக்கிரத்தில் ஒரு தீர்வை காணுவார்களா? என இங்கு வாழும் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

கே.ஸ்ரீதரன்,
பொகவந்தலாவை.


விளம்பரப் பகுதி



## அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா! அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷ்மி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷ்மி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—
மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464,434831,344832.
FAX 00941342463 EXT 25

தலைமையகம்
மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31.32.33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,3336.
FAX 0094523093 EXT 28



## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 557/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 284/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 145/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுய முகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


# அமைப்பாளருக்கு தூதுவர் பதவி

## மனம் திறந்து பேசிய சம்சுதீன்

(நிந்தவூர் நிருபர்)

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான இலங்கையின் தூதுவராக சட்டத்தரணி அல்-ஹாஜ் ஏ.எம்.சம்சுதீன் அரசினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாறை மாவட்ட பிரதம அமைப்பாளருமான அல்ஹாஜ் சம்சுதீன் தமது தூதுவர் பதவியைப் பொறுப்பேற்பதற்காக ஜுலை மாதம் 3ம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டு, ஐக்கிய அரபு இராச்சிய தூதராலயத்தைச் சென்றடைவார்.

கடந்த வாரம் அம்பாறை மாவட்டத்திற்கு வருகை தந்த தூதுவர் அல்ஹாஜ் சம்சுதீனுக்கு பல முஸ்லிம் கிராமங்களில் பெருவரவேற்புகள் அளிக்கப்பட்டன.

நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய இடங்களில் அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவங்களில் கட்சிபேதமின்றி ஐ.தே.க., சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

நிந்தவூரில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்தில் திகாமடுள்ள மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.ஜனாப் யூ.எல்.எம். முகைதீனும் கலந்து கொண்டு தூதுவருக்கு வாழ்த்துக் கூறினார்.

சம்மாந்துறையில் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதம அமைப்பாளர் ஜனாப். ஐ. உதுமாலெவ்வை தலைமையில் அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் தூதுவர் அல்ஹாஜ் சம்சுதீன் உரையாற்றுகையில்:

"சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர்கள், ஆதரவாளர்களை நட்டாற்றில் கைவிட்டு, இப்பதவியை ஏற்று நான் செல்லவில்லை.

இன்றைய எமது ஆட்சியின் சில சூழ் நிலைகள் காரணமாகவும், கூட்டுச்சேர்ந்த சிறிய கட்சிகளைப் பகைக்க முடியாத நிலை காரணமாகவும் அம்பாறை மாவட்டத்திலுள்ள சிறீலங்கா சுதந்திரக்கட்சியினராகிய நாம் வெகுவாகப் பின் தள்ளப்பட்ட நிலையிலுள்ளோம்.

கடந்த அரசின் 17 வருட ஆட்சியில் புறக்கணிக்கப்பட்டு அல்லலுற்ற நாம் எமது ஆட்சியிலும் விமோசனம் பெற முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம். நான் சி.ல.சு.கவின் அம்பாறை மாவட்ட பிரதம அமைப்பாளராக இருந்தும் ஒரு பியூனைக்கூட நியமிக்க முடியாத நிலை இருக்கிறது.

எனவே நடு ஆற்றில் நாம் செல்லும் தோணி அமிழ்ந்து கொண்டிருக்கும் போது மற்றொரு தோணிக்கு நான் தப்பிச் சென்று ஏறி, ஏனையவர்களையும் காப்பாற்ற முயல்கின்றேன்.

இந்த அடிப்படையிலேயே தூதுவர் பதவியை நான் ஏற்றுள்ளேன்.

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநராக என்னை நியமிக்க அரசு முனைந்த ஒரு கட்டத்தில் இவர் ஆளுநராவதா? அரசு நிலைப்பதா?, என்றுகூட எதிர்ப்பு நெருக்குதல் கொடுக்கப்பட்டது" என்று கூறினார்.


## எழுது வினைஞர் தேவை

தலைநகரில் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு எழுது வினைஞர் தேவை. தகைமைகள்:
★ தமிழில் நல்லறிவும் பிறமொழியாற்றலும்.
★ தமிழ், ஆங்கிலம் தட்டச்சில் தேர்ச்சி.
★ கணக்கியல் தொடர்பான அறிவு.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மே/பா. தினமுரசு
வாரமலர்
த.பெ.எண்: 1772
கொழும்பு.


# ஆதார வைத்தியசாலையின் அவலம்!

## அம்பாறையில் ஒரு வறிய வைத்தியசாலை

(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்திலுள்ள ஒரேயொரு ஆதார வைத்தியசாலையான கல்முனை ஆதார வைத்திய சாலையில் வைத்திய நிபுணர்கள் ஒருவரேனும் இல்லாத குறை நீண்டகாலமாக இருந்து வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்திலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களுக்கு கேந்திர முக்கியத்துவமிக்க இந்த வைத்திய சாலையில் வைத்திய நிபுணர்கள் எவரும் இன்மையால், அவசர நோயாளர்கள், வைத்திய நிபுணர்களது சிகிச்சைக்கு உட் படுத்த வேண்டிய நோயாளர்களை மட்டக்களப்பு, பதுளை போன்ற தூர இடங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய அவலம் நீடித்து வருகின்றது.

குறிப்பாக சத்திரசிகிச்சை நிபுணர், பொது வைத்திய நிபுணர், மகப்பேற்று வைத்திய நிபுணர், சிறுவர் வைத்திய நிபுணர் எவருமே இங்கு இல்லை.

இந்த வைத்திய சாலையின் பொறுப்பதிகாரியும், மாவட்ட வைத்தியதிகாரியுமான டாக்டர் திரு.கே.முருகானந்தன், வைத்திய சாலையின் அபிவிருத்தியிலும், நோயாளர்களுக்கு கூடுமானவரை மிகச் சிறந்த வைத்திய சேவையை அளிப்பதற்கான முயற்சிகளிலும் பெரும் அக்கறை கொண்டு செயல்பட்டு வருகின்றார்.

இந்நிலையில் இந்த வைத்திய சாலைக்கு வைத்திய நிபுணர்களை நியமித்து இப்பிரதேச மக்களுக்கு சிறந்த வைத்திய சேவை கிடைக்க சுகாதார அமைச்சர் ஆவன செய்ய வேண்டுமென பொதுமக்கள் கோருகின்றனர்.

உடவடியாகவும், முதல்சேவையாகவும் மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவரை இந்த வைத்திய சாலைக்கு நியமித்தல் அவசியமெனச் சுட்டிக்காட்டப் படுகின்றது.

இந்த வைத்தியசாலைக்கு 'எக்ஸ்ரே' இயந்திரம் ஒன்றை வழங்கிப் பெரும் குறைதீர்த்த சுகாதார சமூகசேவைகள், நெடுஞ்சாலைகள் அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். பௌஸி அவர்கள், இந்த வைத்திய நிபுணர்கள் விடயத்திலும் ஆவன செய்ய வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# விஷமச் சக்திகள் மீது விழிப்புத் தேவை!

"துன்பத்திற்கு மேல் துன்பங்களைக் கண்டுவருகிறது கிழக்கு மாகாணம். கிழக்கில் இரண்டறக் கலந்து வாழும் தமிழ்-முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் வீண் அழிவுகளை ஏற்படுத்தும் விஷமத்தனமான சக்திகளை இனம் காணவேண்டும்.

துன்பங்களைத் தொடராக அனுபவித்த சகோதரர்களாக தமிழ்-முஸ்லிம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவ்வேளையில் நம் மத்தியில் மேற்கொள்ளப்படும் நாசவேலைகள் மீது நாம் மிக உன்னிப்பாக இருக்க வேண்டும்." இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் செய்யதலி மௌலானா தெரிவித்துள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

# நாரதர்

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

கடந்த ஏப்ரல் மாதம் 28, 29ம் திகதிகளில் அடுத்தடுத்து தனது இரண்டு பெரிய 'அவ்ரோ' விமானங்களை அரசு இழந்தது.

இலங்கையின் யுத்த வரலாற்றில் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் பிரயோகிக்கப்பட்டது அதுதான் முதற் தடவை.

விமானங்கள் வீழ்த்தப்பட்டதோடு ஏவுகணை வேகத்தில் வதந்திகள் நாடெங்கும் பரவத் தொடங்கியிருந்தன.

வட பகுதியில் உள்ள படை முகாம்கள் அனைத்தும் புலிகளால் முற்றுகையிடப்பட்டுவிட்டன.

படையினரைச் சரணடையுமாறு புலிகள் ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் தினந்தோறும் தினம் விதம் விதமான வதந்திகள்.

அனேகமாக உள்நாட்டு, வெளிநாட்டு தனியார் செய்தி நிறுவனங்கள், பத்திரிகைகள் அனைத்துமே வதந்திகளுக்கு ஒத்து ஊதிக்கொண்டிருந்தன.(முரசு மட்டும் விதிவிலக்கு)

இப்போது-பரவிய வேகத்தில் அந்த வதந்திகள் அடங்கிப்போய் விட்டன.

புலிகள் தாக்குவார்கள் என்ற எதிர்பார்ப்புக்கள் பொய்த்துப் போனதால், புலிகள் ஏன் தாக்கவில்லை? என்ற கேள்விகள் தலைதூக்கியுள்ளன.

படைத்தரப்புக்குக்கூட ஆச்சரியம் தான் என்று தெரிகிறது. எதற்காக புலிகள் தாமதிக்கிறார்கள்? பெரிதாக ஆயுத உதவி எதையாவது எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார்களோ? என்றும் ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறான கேள்விகள், சந்தேகங்கள் யாவும் புலிகள் ஏற்படுத்தியுள்ள உளவியல் ரீதியான பிரமிப்புக்களின் அடிப்படையில்தான் எழுகின்றன.

புலிகளால் அசாத்தியமான காரியங்களையும் சாதித்துக் காட்ட முடியும் என்ற நம்பிக்கை பரவலாக ஏற்பட்டுள்ளது.

ஆயுதப்போரில் படைகள் மீது புலிகள் பெற்றுள்ள வெற்றிகளைவிட, உளவியல் போரில் புலிகள்பெற்றுள்ள வெற்றி பிரமாதமாக இருக்கிறது.

அரசின் படைகள் மீது பொது மக்களின் நம்பிக்கையீனங்கள் ஏற்பட்டுள்ளமை ஒருபுறமிருக்க, படைகள் தங்கள் மீது தாங்களே நம்பிக்கையிழக்கவும் வைத்துவிட்டார்கள் புலிகள்

யுத்தத்தில் நவீன ஆயுதங்களுக்கு இருக்கும் பங்கைவிட உளவியல் ரீதியான பலம் முக்கிய பாத்திரம் வகிக்கிறது.

உளவியல் ரீதியில் புலிகளின் பலம் இதுவரை உறுதிப்படுத்தப்பட்டதாகவே இருந்து வருகிறது.

உளவியல் பலத்துக்கு இரண்டு பக்கங்கள் இருக்கின்றன.

தமது உறுப்பினர்கள் மத்தியில் "நம்மால் சாதிக்க முடியும்" என்ற நம்பிக்கையை நிலைநாட்டுவது ஒரு பக்கம்.

வெளியே உள்ளவர்கள் பிரமிப்பாக நோக்கி 'அவர்கள் செய்வார்கள்தான்' என்று நினைக்கவைப்பது மறு பக்கம். இரண்டு பக்கமும் புலிகளைப் பொறுத்த வரை சாதகமாகவே உள்ளன.

இவ்வாறான நிலைமையில்தான் புலிகள் பலத்துக்கு மீறிய கணிப்புக்களையும் சில விமர்சகர்கள், செய்தியாளர்கள் வெளியிட்டு வருகிறார்கள்.

அவர்களின் கருத்துப்படி புலிகளுக்கு எல்லா வழிகளும் தடையின்றி திறந்தே இருக்கின்றன.

ஆனால், உண்மையில் நிலைமை அப்படியில்லை. புலிகளுக்கு முன்பாகவும் பல நெருக்கடிகள் குவிந்திருக்கின்றன; உருவாகவும் காத்திருக்கின்றன.

உடனடியாக புலிகள் சந்திக்கின்ற பிரதான நெருக்கடிகளில் மிக முக்கியமானது-ஆட்பற்றாக்குறை.

மூன்றாம் கட்ட ஈழப்போர் மூண்ட பின்னர் புலிகள் பிரமிக்கத்தக்க தாக்குதல்களை நடத்தி இருக்கிறார்கள்; இராணுவரீதியில் அரசுக்கு பலத்த இழப்புக்களை உருவாக்கியுமிருக்கிறார்கள்.

ஆனால், புலிகளின் தாக்குதல்களை கவனித்தால் ஒரு விடயம் புலனாகிறது; நடத்தப்பட்ட தாக்குதல்கள் அனைத்தும் கெரில்லா தந்திரப்படியே நடைபெற்றுள்ளன.

அதாவது, எண்ணிக்கையில் மிகக் குறைந்த குழுக்கள் படையினர் எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத இடத்தில் திடீரென்று தாக்கிவிட்டு திரும்புவதுதான் கெரில்லா தாக்குதல் எனப்படுகிறது.

இதில் சமர் நடக்கும் நேரமும் ஆகக் கூடியது இரண்டு மணி நேரங்களைத் தாண்டுவதில்லை. சில சமயங்களில் மட்டும் விதிவிலக்கும் உண்டு.

நீண்ட நேரம் நின்று அடிபட்டால் உதவிக்கு வரும் படைகளை எதிர்க்க ஆட்பலம்தேவை.

இரண்டாம் கட்ட ஈழப்போரில் புலிகள் மேற்கொண்ட ஆனையிறவுச் சமர், தவளைப்பாய்ச்சல், மண்கிண்டி மலையில் நடந்த இதய பூமி 1 நடவடிக்கை போன்றவை கெரில்லா தாக்குதல்கள் அல்ல. இரண்டு இராணுவங்கள் இடையே நடைபெற்ற யுத்தம் போலவே அவை அமைந்தன.

ஆனையிறவு முகாம் மீதான புலிகளது முற்றுகையைத் தகர்க்க படையினருக்கு நீண்ட நாட்கள் சமரிட வேண்டி ஏற்பட்டது. அந்தச் சமரில் புலிகள் தரப்பில் மட்டும் எழுநூறுக்கும் மேற்பட்டோர் மாண்டனர்.

அந்த சமரை'மரபுப் போர் முறை' என்று அழைப்பர். இரண்டு இராணுவங்கள் நேரடியாக களத்தில் சந்தித்து சமர் நடத்துவதுதான் 'மரபுப் போர் முறை' என்று அழைக்கப்படுவதுண்டு.

பூநகரி நாகதேவன் துறை கடற்படைத்தளத்தை அழித்து வெற்றிகரமாக புலிகள் நடத்தியதுதான் தவளைப்பாய்ச்சல். அந்த நடவடிக்கையில் புலிகள் தரப்பில் 500 பேர் வரை பலியானார்கள்.

ஆக, மரபுப்போர் முறைக்கு ஆட்பலம் என்பது இழப்புக்களை சந்தித்து அந்த இடங்களை நிரப்பக் கூடிய அளவுக்கு இருக்க வேண்டும்.

தற்போது வடபகுதியில் உள்ள பிரதான படைமுகாம்களை புலிகள் தாக்க வேண்டுமானால் கெரில்லா போர் முறையை மட்டும் நம்பமுடியாது.

ஒவ்வொரு படைமுகாமுக்குள்ளும் ஆயிரக்கணக்கான படையினர் இருக்கிறார்கள்.

புலிகளால் முற்றுகையிடப்படும்போது அவர்கள் முன் 'வாழ்வா சாவா' என்ற கேள்வி எழும். தப்பிச் செல்ல வேறு மார்க்கமே இல்லை என்ற நிலையில் படையினர் தமது சக்திக்கு உட்பட்டவரை திருப்பித் தாக்கவே செய்வர்.

புலிகளிடம் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் இருந்தாலும்கூட அவை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே இருக்கும்.

'சுப்பர் சோனிக்' விமானங்கள் படு வேகமாக சென்று அதி உயரத்தில் நின்று குண்டுகளைப் பொழியலாம்.

விமானங்களை நோக்கி கண்மூடித்தனமாக புலிகள் தமது தாக்குதலை நடத்த முடியாது. ஏனெனில் இருக்கும் ஏவுகணைகளை இழந்துவிட்டால் திரும்ப வாங்கிச் சேமிப்பது சுலபமானதல்ல.

ஒன்று: பெறுவது சிரமம். இரண்டாவது: பெற்றுக் கொண்டாலும் கொண்டு வந்து சேர்க்க நாளாகும். மூன்று: ஒவ்வொன்றும் விலை அதிகம்.

எனவே, விமானத் தாக்குதலையும் கருத்தில் கொண்டே புலிகள் தமது பாரிய தாக்குதல் நடவடிக்கையை திட்டமிட வேண்டியிருக்கும்.

ஆனையிறவுச் சமர், தவளைப்பாய்ச்சல் இரண்டிலும் விமானத் தாக்குதலால் பலியான புலிகளின் எண்ணிக்கைதான் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால், ஒரு வாய்ப்பு! ஒரேயொரு வாய்ப்பு: சுருக்கமாகச் சொன்னால் தங்கமான வாய்ப்பு ஒன்று புலிகளுக்கு கிடைத்தது.

ஏப்ரல் 29 அன்று இரண்டாவது 'அவ்ரோ' விமானம் வீழ்த்தப்பட்டபோது இலங்கையின் விமானப்படை முழுக்க அதிர்ச்சியில் உறைந்து போயிற்று.

விமானப்படை விமானங்கள் மேலெழவே தயங்கிக் கொண்டிருந்தன. அடுத்தது என்னவென்று தெரியாமல் வடபகுதி படை முகாம்களுக்குள் பதட்டம் தொற்றிக்கொண்டது.

அந்த நேரத்தில் வடபகுதி பிரதான முகாம் ஒன்றை புலிகள் தாக்கியிருந்தால் விமானப் படை உதவி அங்குள்ள படையினருக்கு கிடைப்பது தாமதமாகியிருக்கும்.

ஆனால், புலிகள் தாக்கவில்லை என்பதுதான் ஆச்சரியம். அதற்குரிய காரணம் புலிகளின் ஆட்பலம் மரபுப் போர் முறைக்கு ஏற்றதாக இருக்கவில்லை.

தமது பிரதான அணிகளை பிரபாகரன் கிழக்குக்கு அனுப்பியிருந்தார். முக்கிய தளபதிகளும் அனுப்பப்பட்டிருந்தனர்.

இரண்டு அவ்ரோ விமானங்கள் தாமாகவே வலையில் வந்து விழும் என்று புலிகள் முன்கூட்டியே நினைத்திருக்கவில்லை.

ஒரு பரீட்சார்த்த தாக்குதலாகவே அவ்ரோவை அடித்தார்கள். போர் மூண்ட பின்னரும் பாதுகாப்பான கடற்பரப்பின் மேலாக பறந்து செல்லாமல், புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள தரைப்பக்கத்தின் மேலாக பறந்து விமானங்கள் வலையில் விழும் என்று புலிகள் திட்டவட்டமாக நம்பியிருக்க முடியாதுதான்.

அப்படியொரு திட்டவட்டமான முடிவில் இருந்திருந்தால், கிழக்குக்கு அனுப்பப்பட்ட படையணிகளையும், கிழக்கில் உள்ள படையணிகளையும் வடக்கில் தயார் நிலையில் புலிகள் வைத்திருப்பார்கள். ஆட்பலம் போதுமானதாக இருந்திருக்கும்.

மூன்றாம் கட்ட ஈழப்போரில் கிழக்கை சுத்தப்படுத்துவதே நோக்கம் என்று கிழக்கின் தளபதிகளுக்கு கூறியனுப்பிவிட்டு, உடனடியாக அவர்களை வடக்குக்கு திருப்பி அழைப்பதும் பிரபாகரனுக்கு சங்கடமாக இருந்திருக்கும். எனவேதான் தங்கமான வாய்ப்பு புலிகளிடமிருந்து தவறிப்போனது.

இதனால் தற்போது வடக்கில் புலிகளின் ஆட்பலம் மட்டமாக இருப்பதாக அர்த்தமில்லை. இருப்பவர்களையும் பெருந்தொகையாக பலிகொடுத்தால் அவர்கள் இடத்தை நிரப்புவதற்கான ஆட்பலத்தை பெற்றுக் கொள்வதுதான் புலிகளுக்குள்ள பிரச்சனை.

வடக்கில் ஒரு பிரதான முகாமை தாக்க முற்பட்டு அதிலே வெற்றியோ தோல்வியோ ஆனால் இழப்புக்கள் அதிகமாகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது படைத்தரப்பு பாரிய நடவடிக்கை ஒன்றை வடக்கில் ஆரம்பித்தால் எதிர்த்து நிற்கும் பலத்துக்கு எங்கே போவது? என்பதுதான் புலிகளின் தலைமைக்கு உள்ள சிக்கல் எல்லாம்.

அதனால்தான்–கிழக்கில் கெரில்லாத் தாக்குதல்; வடக்கில் படைகளை தற்காப்பு நிலைக்குள் வைத்துக்கொண்டு தமது ஆட்பலத்தை திரட்டுதல் போன்ற நடிவடிக்கைகளோடு புலிகள் நின்று கொண்டிருக்கிறார்கள்.

உடனடியாக குறைந்தது ஐயாயிரம் பேராவது திரட்டப்பட வேண்டும் என்ற இலக்கை வைத்து வடக்கில் புலிகளின் ஆட்திரட்டல் நடிவடிக்கைகள் சூடுபிடித்துள்ளன.

யுத்தத்தில் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டுதல், இராணுவத்தினர் உள்ளே வந்தால் ஏற்படும் அழிவுகளை விளக்குதல் என்பவைதான் ஆட்திரட்டல் பிரசாரத்தின் முக்கிய கருப்பொருள்களாக இருக்கின்றன.

'அவ்ரோ' விமானத்தின் உடைந்த பாகங்கள் உட்பட, இதுவரை நடைபெற்ற வெற்றிகரத் தாக்குதல்கள் நம்பிக்கை ஊட்டல்களுக்கு ஆதாரமாக காட்டப்படுகின்றன.

படையினர் உள்ளே வந்தால் ஏற்படும் அழிவுகளுக்கு உதாரணம் காட்ட புலிகள் எங்கேயும் போகத் தேவையில்லை. கிழக்கில் பொது மக்களை மனிதக் கேடயங்களாக்கும் படையினரின் நடவடிக்கைகளே போதுமானவை.

வடக்கைப் பொறுத்தவரை படையினரை தற்காப்பு நிலைக்குள் தள்ளிவிட்டு, உண்மையில் புலிகளும் தற்காப்பு யுத்த கட்டத்தில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள்.



## பிரபா சந்திக்கும் புதிய நெருக்கடிகள்!

## வடக்கிலிருந்து புதிய தகவல்கள்

படை முகாம்களில் இருந்து படைகள் முன்னேறி வராமல் தடுக்கும் அளவோடு மட்டுமே புலிகளின் காவலரண்கள், பதுங்கு நிலைகள் என்பவை முகாம்களை அண்டிய பகுதிகளில் இருந்து கொண்டிருக்கின்றன.

தொண்டமானாற்றிலும், அச்சுவேலியிலும் படைகள் நடவடிக்கையில் ஈடுபட்டபோது புலிகள் ஒரு பாரிய மோதலை ஏற்படுத்தாமல் பின்வாக்கிச் சென்றார்கள். ஆட்பலத்தை முக்கியமற்ற மோதல்களில் இழக்க விரும்பாமையும் ஒரு காரணம் எனலாம்.

படையினர் உள்ளே வரப்போகிறார்கள் என்று கூறி, ஆட்திரட்டலை வேகமாக்கவும் படையினரின் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் புலிகளுக்கு சாதகமாக அமைவதும் குறிப்பிடத்தக்க விடயம்.

ஆனால், புலிகளுக்கு உள்ள பிரச்சனை தாக்குதல் யுத்தத்திற்கு அவர்கள் உடனடியாக தயாராக வேண்டும் என்பது தான்.

படைத்தரப்பு நவீன இராணுவ தளபாடங்களை பெற்றுக் கொண்டு வட பகுதி முகாம்களை மேலும் பலப்படுத்தும்.

இப்போதுள்ளதை விட அப்போது புலிகளுக்கு பலம் அதிகம் தேவைப்படும்.

படைத்தரப்பு முந்திக் கொள்வதற்கிடையில் தாக்குதல் யுத்தத்தை வடக்கில் ஆரம்பிக்கவே புலிகள் முனைப்புக் காட்டுவர்.

புலிகள் தமது முனைப்பை வெளிப்படுத்த ஆட்திரட்டலில் கணிசமான வெற்றியைப் பெற்றாக வேண்டும்.

அதுதவிர, சமாதான முயற்சிகளை தாம் அவசரப்பட்டு குழப்பிவிடவில்லை என்பதை மக்களுக்கு விளக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

இல்லாவிட்டால் நாளை ஒரு பாரிய தாக்குதலில் இழப்புக்கள் அதிகமாகி விட்டால் 'அவசரப்பட்டதால்தான் இத்தனை அழிவுகளும்' என்று மக்கள் நினைக்கவே செய்வர்.

அதுதவிர, தமது பிள்ளைகளை புலிகளிடம் இருந்து பாதுகாக்கவும், அவர்களை வடக்கிலிருந்து வெளியே அனுப்பி விடவுமே பெரும்பாலான பெற்றோர்கள் விரும்புகிறார்கள்.

கொழும்பில் குண்டுவெடிப்புக்கள் மற்றும் தமது இருப்பை வெளிப்படுத்தும் புலிகளது நடவடிக்கைகளால் பொலிசார் தமது கெடுபிடிகளை அதிகப்படுத்தினால் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புவருவோர் எண்ணிக்கை குறையலாம்.

மக்கள் தாமாகவே வடக்கிலிருந்து வெளியே வர அஞ்சுகின்ற சூழல் புலிகளுக்கு சாதகம்தான்.

புலிகளின் பாஸ் முறையால் தமது போக்குவரத்துக்கள் கட்டுப்படுத்தப்படுவதாக மக்கள் பொருமுவதை வடக்கிற்கு வெளியே நடைபெற்று வரும் கெடுபிடியான சோதனை நடவடிக்கைகள் இல்லாதொழித்து விடுகின்றன.

வடக்கைத் தவிர வெளியே சென்றால் தமக்கு பாதுகாப்பு இல்லை என்பதை அங்குள்ள மக்கள் எவ்வளவுக்கெவ்வளவு உணர முடிகின்றதோ அவ்வளவுக்கு புலிகளுக்கு லாபம்தான்.

இந்த வகையில் வடக்கிலிருந்து வெளியேற அனுமதி மறுக்கப்படும் மக்களால் ஏற்படக்கூடிய முணுமுணுப்புக்கள், அதிருப்திகளில் இருந்து புலிகள் மீள பொலிசாரின் கெடுபிடிகள் உதவியாக அமைகின்றன.

புலிகளின் பலம் மட்டமாகவும் இல்லை. அதே சமயம் எல்லாம் நல்லபடிதான் இருக்கின்றன என்று திருப்திப்படக்கூடிய நிலையிலும் இல்லை.

ஆனால், இவ்வாறான நிலை புலிகளுக்கு ஒன்றும் புதியதல்ல. முன்னரும் சந்தித்து சரிப்படுத்தியவைதான்.

அது தவிர, படைத்தரப்பு விடும் தவறுகளிலிருந்து புலிகள் தமது பலவீனங்களை சரிப்படுத்திக்கொள்ள முடிந்தது என்பதும் கடந்த கால உண்மையாகும். அந்த நிலையில் தற்போதும் மாற்றம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஏனெனில், ஆட்சியாளர்கள் புதிய முகங்களாக இருந்தாலும், படையினர் நடத்தும் யுத்தம் தனது பழைய முகத்தை சற்றும் மாற்றவில்லை.

எனவே-புலிகள் தமது நெருக்கடிகளை கடந்துவர தம்மையறியாமலேயே படைத்தரப்பும் கைகொடுத்து உதவுவது தவிர்க்க முடியாதது.



திருவான மலையில் தமிழ் இயக்கம் ஒன்றின் பொறுப்பாளர் தலைமையில் ஒரு வரைச் சுட்டவையாம். ஆயுதம் ஏ.கே. 47. குண்டு 20 காலியாம். சுடப்பட்டவருக்கு ஒரு கீறு கூட இல்லையாம். மோதலுக்கு காரணம் உள் சண்டைதானாம். நகரத் தலைவரின் கூட்டாளியைத்தான் குறிவைச்சவையாம். அவர் சீருடையாருக்கு வேண்டப்பட்டவர் என்பதால் கட்டுப் பார்த்த பொருளை அள்ளிக்கொண்டு போய் உள்ளே போட்டவையாம். மண்காக்க வாக்கு கேட்டவை இப்ப கன் (Gun) தூக்கிக் கொண்டு தங்களுக்கையே அடிபட்டால் கதை என்ன? கந்தல்தான்.

# அதிரடி அய்யாத்துரை

அதிகார மட்டமே இடைக்கால நிர்வாகம் எண்டு சொல்லுது. கூட்டான தமிழ் கட்சி ஒரு பத்திரிகைக்கு பிழையான செய்தி கொடுத்தவையாம். 'ஆலோசனை சபைதான்' எண்டு நீலமான புலமையாளர் சொன்னவராம். ஏன் குறைச்சு சொன்னவர் எண்டு தெரியுமோ? தனக்கு ஆகாத பானை இருந்தென்ன உடைஞ்சென்ன எண்ட நல்ல குணம்தான். அவசரகாலத்தை எதிர்க்க மாட்டினமாம் நடுநிலையாம். அது ஏன் பாருங்கோ? நடுநிலை எண்டாலும் மறைமுக ஆதரவுதானே! துணிந்த கட்டையள் எண்டால் எதிர்க்கலாம் தானே. தம்பிமாரின் காதிலை பூ சுத்தின காலம் மலையேறிப் போச்சுதண்ணே.

அதிகாரமுள்ள 'சக்தி'க்கு முன்னால் தமிழ் கட்சி பிரதிநிதிகள் கூடினவையல்லோ. நீலமானவர் நீங்கள் சொல்லுறதும் சரிதான் பாணியில் பேச அவரது சகாக்கள் வெறுத்துப் போச்சினமாம். திருவான மலை தங்கமானவர் வடக்கு-கிழக்கு சபையிலை பிரதிநிதிகள் தலையிடுவது சரியோ எண்டு சந்தேகம் கேட்டவராம். அதற்கு 'சக்தி' பிறகேன் உங்களை மக்கள் தெரிவு செய்தவை எண்டு காரமாக கேட்க விரத்தங்கம் கப்சிப். அடிப்படைக் காரணம், பொல்லாத தம்பிமாரில் உள்ள பயம். அதை மறைக்க பொருத்தமில்லாத காரணங்களை அடுக்கி வாங்கிக் கட்டுவான் ஏன்? ஆனால், ஒண்டு, நிர்வாகம் வந்தாலும் எல்லாம் ஜோராக நடக்கப் போறதில்லைப் பாருங்கோ.

அரசாங்கத்தோடு சேர்ந்து நிற்கிறதோ எண்டு முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண சபை குழுவினர் குரல் கொடுத்தவை. கடந்த வாரத்தில் படையிடம் ஆயுதம் வாங்கினவையாம். ரெண்டு எழுத்தாரால் பிரச்சனை வரும் எண்டு சொல்லி மனுபோட்டுத்தான் ஆயுதம் பெற்றவையாம். அடுத்தவன் செய்தால் புளிக்கும். அதைத்தாமே செய்தால் இனிக்கும் எண்டமாதிரியான போக்குத்தானே தமிழ் கட்சியளை இந்தப்பாடு படுத்திக்கொண்டிருக்கு.

யாழ்ப்பாணப்பத்திரிகையாளராக இருந்தவர் கோபு. அவர் யாழ்ப்பாணத்திலிருந்து தப்பி ஓடிப்போய் தமிழ்நாட்டிலை இருந்து வெளிநாட்டு தமிழ் பேப்பருகளுக்கு எழுதுறார். எல்லாத் தமிழ் கட்சிகளையும் விளாசுகிறார். ரெண்டு எழுத்தாரை ஆதரிக்கிறார். அதாலை கொழும்புக்கு வரமாட்டேன் எண்டு அவர் சொல்லலாம். அப்படியெண்டால் யாழ்ப்பாணம் போய் தனது ஆற்றலை வெளிப்படுத்த என்ன பாருங்கோ தடை? இதனால் அறியப்படுவது என்னவெண்டால் மிஸ்டர் கோபு மாதிரி ஆட்கள் ரெண்டு எழுத்தார் நம்ப நடக்கினம், ரெண்டு எழுத்தாரை நம்பி நடக்கத் தயாரில்லை. என்ன சரிதானே.

நம்நாட்டு தொலைக்காட்சிகளில் ரோசம் வராத தொலைக்காட்சியெண்டா அது ரி.என்.எல். தான். போனவாரம் போட்ட படம் 'ராக்கம்மா கையைத் தட்டு' வழக்கம் மாதிரியே அதுவும் ஐ.ரி.என் போட்ட படம்தான். ரி.என்.எல். இதுவரை தானாக போட்ட தமிழ் படம் இரண்டே இரண்டுதான். அதுக்காக பாராட்டவும் முடியாது. அந்த இரண்டு படங்களையும் இரண்டு தடவை ஒளிபரப்பி கழுத்தறுத்தவைக்கு ஏன் பாருங்கோ கை குலுக்கு?

தலைநகரில் கரை ஒதுங்கிய உடல்கள் அமுதமொழி பேசுவோரின் உடல்கள்தான் எண்டு பரவலான நம்பிக்கை. கொழும்பில் உறவினர்கள் யாருமில்லாமல் தனியாக தங்கியிருந்தவர்கள்தான் அக் கதிக்கு உள்ளானதாகவும் ஒரு தகவல் சொல்லுது.

கவிஞர்கள் காதலைப் பாடுவார்கள். சிலர் மட்டும் சாடுவர். கவிஞர் சுரதா சாடுகிறார்.

**"எதற்கையா கண்ணடிக்கும் காதல்? காதல்**
**இல்லையென்றால் இனிக்காதா முத்தம்? இன்பச்**
**சதைப்பொழுது போக்குவதற்கு வேண்டு மானால்**
**சல்லாப சந்திப்புக் காதல் தேவை!"**

கோபம் வந்தால் 'சுரதா' மீது மட்டும் கொட்டக் கடவீர்.



படிப்பகம்

www.padippakam.com

## அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது 33

# '84 இல் ஒரு பாரிய தாக்குதல்!

## திட்டத்தோடு வந்த அமெரிக்கத் தமிழர்கள்

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## ''தீர்த்துக்கட்டினால் தேவையான பணம்''

### தகவல் திரட்டிய இரண்டு இயக்கங்கள்

27.10.82 அன்று சாவகச்சேரி பொலிஸ் நிலையம் புலிகள் இயக்கத்தினரால் தாக்கப்பட்டது குறித்து முன்னர் விபரித்திருந்தேன்.

அத் தாக்குதலின் பின்னர் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பாதுகாப்பு பல மடங்கு அதிகரிக்கப்பட்டிருந்தது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை மீண்டும் தாக்கும் திட்டத்தோடு ரெலோ அமைப்பினர் தகவல் திரட்டிக் கொண்டிருந்தனர்.

அதேநேரம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் மக்கள் விடுதலைப் படையும் தகவல் திரட்டிக் கொண்டிருந்தது.

ஏனைய அமைப்புக்களைவிட சாவகச்சேரியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புத்தான் வேரூன்றியிருந்தது. அங்கிருந்து தனது முக்கிய உறுப்பினர்களையும் பெற்றிருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினால் ஈழ வாலிப முன்னணி என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டு அதன் வேலைகள் சாவகச்சேரியில் கூடுதலாக நடைபெற்று வந்தன. ஈழவாலிப முன்னணிக்கு ரமேஷ் பொறுப்பாக இருந்தார். கிராமங்கள் தோறும் மக்கள் தொண்டர் படைகள் உருவாக்கப்படும் வேலைகளும் நடந்து வந்தன.

தமிழரசுக் கட்சி காலத்திலிருந்தே அக் கட்சியின் கோட்டையாக விளங்கியது சாவகச்சேரி. பின்னர் கூட்டணியின் கோட்டையாக மாறியது.

சாவகச்சேரியில் கூட்டணியின் செல்வாக்கை உடைப்பதில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் அரசியல் கருத்தரங்குகள் முக்கிய பாத்திரம் வகித்தமையை மறுக்க இயலாது.

ரமேஷ், சிறீதரன், செழியன், டேவிட்சன் ஆகியோர் அரசியல் கருத்தரங்குகளில் கூட்டணியின் அரசியல் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சித்து வந்தனர்.

எனவே, சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை தாக்குவதற்கான அதிக சாதகம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கே இருந்தது. பொலிஸ் நிலையத்துக்குள் இருந்தே பல தகவல்கள் அவர்களுக்கு கிடைக்கவும் செய்தன.

ஆயினும், 'மாபெரும் தாக்குதல்' என்னும் கனவு காரணமாக காரைநகர் கடற்படை முகாமில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். குறிவைத்துக் கொண்டிருந்தது.

### ஏட்டிக்குப் போட்டி

தாக்குதல்கள் என்பவை எதிரிக்கெதிராகவே என்றாலும்கூட, தாக்குதல் நடவடிக்கைகளை வைத்து அந்த விளம்பரத்தால் முன்வரிசையில் வந்து விடுவதற்கான போட்டியும் இயக்கங்கள் மத்தியில் நிலவியது.

புலிகள் சிறு சிறு தாக்குதல்களை நடத்துவதால் நாம் ஒரேயடியாக பெரியதொரு தாக்குதலை நடத்தி முடித்துவிடலாம். அதன் விளைவாக தாம் முதலிடத்தில் வந்து புலிகள் உட்பட ஏனைய இயக்கங்களை பின்னால் தள்ளிவிடலாம் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். கணக்குப் போட்டது.

அந்தக் கணக்கு தப்புக் கணக்கானதை சென்ற வாரம் விபரித்திருந்தேன்.

ரெலோவைப் பொறுத்தவரை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை தாக்கும் திட்டத்தோடு ஒரு கௌரவப் பிரச்சனையும் இருந்தது.

ஏற்கனவே அதே பொலிஸ் நிலையத்தை புலிகள் தாக்கியிருந்தார்கள் அல்லவா. எனவே தமது தாக்குதல் புலிகள் நடத்திய தாக்குதலைவிட சிறப்பாக அமைய வேண்டும் என்று ரெலோ திட்டமிட்டது.

ரெலோ தலைவராக இருந்த சிறீசபாரத்னம் நேரடியாகவே தாக்குதலுக்கான தயாரிப்புக்களை கவனிக்க தமிழகத்திலிருந்து யாழ்பாணத்திற்கு வந்திருந்தார்.

தாக்குதலை படம் பிடிக்க வீடியோ கமராவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

தாக்குதல் வெற்றிகரமாக அமைந்தால் அதனைவைத்து வெளிநாடுகளில் உள்ள தமிழர்களிடம் பெரியளவில் பிரசாரம் நடத்தலாம். நிதி திரட்டவும், நம்பிக்கையூட்டவும் வீடியோ ஆதாரம் உதவியாக இருக்குமல்லவா?

இந்த இடத்தில் ஒரு விடயத்தை சொல்ல வேண்டும். 1980 களில் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் பெரும்பாலானோர் தமிழ் இயக்கங்களில் இரண்டையே கூடுதலாக நம்பினார்கள்.

ரெலோவும், புலிகள் அமைப்புமே அந்த இரண்டு அமைப்புக்கள்..

ஈ.பி.ஆர்.எல்.எஃப், புளொட், ஈரோஸ், போன்ற அமைப்புக்கள் கம்யூனிச சித்தாந்தம் கொண்டவை என்று ஒரு சாரார் முகம் சுளித்தார்கள்.

தாக்குதல்கள் நடத்தாமல் தத்துவம் பேசுவதாக கூறிய மற்றொரு சாரார் அந்த அமைப்புக்களை சுவாரசியமில்லாமல் நோக்கினார்கள்.

### அமெரிக்காவில் இருந்து வந்த குழு

மற்றொரு இரகசியம் ஒன்று சொல்கிறேன்.

1984 இல் அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தமிழர்களான வசதிபடைத்த புத்திஜீவிகள் குழு ஒன்று சென்னைக்கு வந்தது. தமிழ் இயக்கங்களின் தலைவர்களை அக்குழு சந்தித்தது.

அக்குழுவினரிடம் ஒரு பயங்கரமான திட்டம் இருந்தது. அக் குழுவுக்கு தலைமை தாங்கி வந்தவர் ஒரு பிரபல தமிழ் டாக்டர். இப்போதும் அமெரிக்காவில்தான் இருக்கிறார்.

இயக்கங்களின் தலைவர்களை தனித் தனியே அக்குழுவினர் சந்தித்தனர்.

**"எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறோம், ஆனால் ஒரு நிபந்தனையோடு."**

**"என்ன நிபந்தனை?"**

**"பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலியை தீர்த்துக் கட்டவேண்டும். முடியுமா?"**

அப்போதெல்லாம் கொழும்பில் நடவடிக்கைகளில் இறங்குவது பற்றி இயக்கங்கள் அதிகம் யோசிக்காத காலகட்டம்.

வேறு சூழல், வேறு மொழி பேசும் மக்கள், கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள். எனவே நடவடிக்கைகள் வெற்றியளிப்பது கஷ்டம் என்றே கருதப்பட்டது.

எனவே, இயக்கங்களின் தலைவர்கள் திட்டவட்டமாக 'ஆம்' சொல்லவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப், புளொட் அமைப்புக்களிடம் அந்தக் குழுவினருக்கு நம்பிக்கை இருக்கவில்லை என்பதால், அவர்கள் பெரிதும் நம்பியது ரெலோவைத்தான்.

"திட்டத்தை முடித்தால் மட்டுமே பணம்." என்று, ஏறக்குறைய ஒரு பேரம் போல பேச்சு நடத்திவிட்டு அவர்கள் அமெரிக்கா திரும்பிவிட்டனர்.

அக்குழுவினர் கொண்டுவந்த திட்டத்தின் பின்னணியில் இருந்த சக்தி யாரென்பது இதுவரை மர்மம்தான்.

### துணிச்சலான பாய்ச்சல்.

இனி, சாவகச்சேரி தாக்குதல் நடவடிக்கைக்குத் திரும்புவோம்.

20.11.84 அதாவது, முதலாவது தாக்குதல் நடந்து சரியாக இரண்டு வருடம் சென்ற பின்னர் மீண்டும் ஒரு தாக்குதலை சந்திக்கப்போவது தெரியாமல் அமைதியாக இருந்தது பொலிஸ் நிலையம்.

தாக்குதல் பிரிவுகள் பொலிஸ் நிலையத்தை நோக்கிச் சென்றன.

பொலிஸ் நிலையம் முன்பாக வாகனம் நின்றதும் அதிலிருந்து குதித்து சுட்டுக்கொண்டு முன்னேறினார் ஒரு போராளி. அவரது பெயர் நியூட்டன். யாழ்ப்பாணத்தில் கொழும்புத்துறையைச் சேர்ந்தவர். சென் பற்றிக்ஸ் கல்லூரியில் படித்தவர்.

நியூட்டனுக்கு இயக்கப் பெயர் நிக்லஸ். நியூட்டன் பற்றி விளக்கமாகக் கூறக்காரணம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலின் வெற்றிக்கு முக்கிய காரணம் அவர்தான்.

காவலரணில் இருந்த பொலிஸாரை நோக்கிச் சுட்டுக்கொண்டே சென்ற நியூட்டன் மீது பொலிஸார் திருப்பிச் சுட்டார்கள். முதலில் உள்ளே நுழைபவர் கொல்லப்படுவார் என்று தெரிந்தே நியூட்டன் செயலில் இறங்கினார்.

தற்கொலைப்படை உறுப்பினர் போலவே அவரது நடவடிக்கை அமைந்தது.

நியூட்டனின் துணிச்சலான பாய்ச்சலால் பொலிசார் திகைத்த நொடியில் ஏனையோர் உள்ளே புகுந்தனர்.

### அதிரடித் தாக்குதல்

50க்கு மேற்பட்ட பொலிசார் பலியானார்கள். அவர்களில் பலர் இஸ்ரேலியர்களால் பயிற்றப்பட்டவர்கள்.

ஆயுதங்களைக் கைப்பற்றிக்கொண்டு பொலிஸ் நிலையத்தை குண்டு வைத்து தகர்த்தது ரெலோ.

யாழ்ப்பாணத்தில் அதுவரை நடந்த தாக்குதல்களில் மிகப்பெரிய வெற்றிகரமான தாக்குதல் அதுதான்.

ரெலோ தலைவர் சிறீசபாரத்னம் தாக்குதல் நடைபெற்ற போது தானும் நேரடியாகவே பங்குகொண்டிருந்தார்.

### உதவி தடுக்கப்பட்டது

சாவகச்சேரி பொலிஸ் நிலையம் தாக்கப்பட்ட செய்தி அறிந்து இராணுவ அணியொன்று விரைந்து வந்தது.

அதனை எதிர்பார்த்து கைதடியில் காத்திருந்த ரெலோவினர் தாக்குதல் நடத்தியதில் 20க்கு மேற்பட்ட இராணுவத்தினர்கள் பலியானார்கள்.

இத்தாக்குதல்கள் ரெலோவின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக அமைந்தன.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய தாக்குதலின் போது எடுக்கப்பட்ட வீடியோப் பிரதிகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு பிரசாரமும் களைகட்டியது.

தாக்குதலை வீடியோவில் கண்ட வெளிநாட்டு தமிழர்கள் பலர் சிலித்துப் போனார்கள். ரெலோவுக்கு தாராளமாக நிதி வழங்கினார்கள்.

முதன் முதலில் வீடியோவில் எடுக்கப்பட்டு காண்பிக்கப்பட்ட தாக்குதல் நடவடிக்கையும் அதுதான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்பால் தமிழ்நாட்டின் பல பாகங்களில் நடத்தப்பட்ட கண்காட்சி குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம் போன்ற முக்கிய பகுதிகளில் அக்கண்காட்சி நடத்தப்பட்டது.

இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் (1948 முதல்) 1983 வரை தொடர்ந்து வந்த தமிழ் பேசும் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் ஓவியங்களாக சித்தரிக்கப் பட்டிருந்தன.

மிகுந்த முயற்சியோடு திரட்டப்பட்ட பத்திரிகைச் செய்திகள், புகைப்படங்கள் போன்றவை பெருமளவில் இடம்பெற்றிருந்தன.


தமிழ் நாட்டில் நடைபெற்ற கண்காட்சியில் ஒரு பகுதி

### கதறிய தாய்மார்கள்

83 கலவரம், மற்றும் இராணுவ நடவடிக்கைகளால் கொல்லப்பட்ட தமிழர்களது உடல்கள் கண்டதுண்டமாகக் கிடந்த காட்சிகள் புகைப்படங்களில் தெரிந்தன.

இடையே ஒரு கடல் பிரித்தாலும் இதய உணர்வால் ஒன்றுபட்ட மக்களல்லவா தமிழக மக்கள். தானாடா விட்டாலும் தசை ஆடும் என்பார்களே, துடித்துப்போனார்கள்!

கண்காட்சிக்குச் சென்ற தாய்மார்கள் விழிகளில் கண்ணீரோடும், நெஞ்சில் ஜே.ஆர் அரசு மீது கோபத்தோடும் திரும்பினார்கள்.

தாய்மார்கள் மட்டுமல்ல, கண்காட்சியை காணச்சென்ற ஆண்களும் கதறி அழுதனர்.

"நாங்களும் வருகிறோம் போராட, சேர்த்துக்கொள்வீர்களா?" என்று கேட்டவர்கள் பலர்.

அக்கண்காட்சியை தனது கடின உழைப்பால் உருவாக்கியவர் டேவிற்சன். தமிழக ஓவியர் சேகர் டேவிற்சனுக்கு உதவியாக இருந்தார்.

ஈழமாணவர் பொதுமன்றத்தின் (G.U.E.S.) நிர்வாகச் செயலாளராக இருந்த டேவிற்சனை படையினர் தேடினார்கள். அதனால் தமிழ் நாட்டுக்கு அனுப்பப்பட்டார் டேவிற்சன்.

தமிழ் நாட்டுக்குச் சென்ற டேவிற்சன் ஈழமணி என்ற பெயரோடு பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்குள் ஏற்பட்ட உள்பிரச்சனையில் டக்ளஸ் தேவானந்தா அணியோடு நின்ற டேவிற்சன் தற்போது வெளிநாடொன்றில் இருக்கிறார்.


சிறீசபாரத்னம்



சாவகச்சேரி பொலிஸ் நிலைய தாக்குதலையடுத்து வடக்கில் ரெலோவினரால் ஒட்டப்பட்ட சுவரொட்டி

### சுவையான செய்தி

போராளி அமைப்புக்களின் வளர்ச்சியால் அதிர்ச்சியுற்ற இலங்கை அரசு பல்வேறு பிரசாரங்களை முடுக்கி விட்டிருந்தது.

அவற்றில் சில வேடிக்கையானவை. வேறு சில அரசே ஏமாந்து போய் கடைசியில் கைகளை பிசைந்து கொண்டு நிற்க வைத்தவை.

அதில் ஒன்றுதான் இப்போது நான் சொல்லப்போவதும்.

பெல்ஜியம் நாட்டு விமான நிலையத்தில் இலங்கைத் தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அந்தச் செய்தி உடனடியாக இலங்கை அரசுக்கு கிடைத்துவிட்டது.

**"ரெலோ தலைவர் சிறீசபாரத்னம் தான் பெல்ஜியத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை உடனடியாக கொழும்புக்குக் கொண்டுவர பெல்ஜியம் அரசின் உதவி கோரப்படும்"** என்று அரசு தகவல்களை வெளியிட்டது.

பெல்ஜியத்தில் கைதுசெய்யப்பட்டவர் சிறீசபாரத்னமா இல்லையா என்பதை உறுதி செய்ய அதிகாரிகள் குழுவொன்றையும் அரசு அனுப்பிவைத்தது.

இப்படியெல்லாம் அமளியான தகவல்கள் வெளியாகிக்கொண்டிருந்த போது ரெலோ தலைவர் சிறீ சபாரத்னம் என்ன செய்து கொண்டிருந்தார் தெரியுமா?

சென்னையில் சாலிக் கிராமத்தில் இருந்த தமது அலுவலகத்தில் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்.

தமது தலைவர் கைது செய்யப்பட்டதாக அரசு பொய்ப்பிரசாரம் செய்து வருவதாக ரெலோ கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

### முல்லையில் தாக்குதல்

1984ல் நடைபெற்ற மற்றொரு முக்கியமான தாக்குதல் முல்லைத்தீவுக்கருகே இடம்பெற்றது. அது பற்றி அடுத்த வாரம்.

(தொடர்ந்து வரும்...)


படிப்பகம்

www.padippakam.com



## சிலை எழுந்து பேசினால்...

மேலை நாடுகளில் சிலை வைத்துவிட்டு அதனை சீவி சிங்காரிக்க (துப்பு) கழுவிக் கவனிக்க ஒரு ஆளையும் சம்பளம் கொடுத்து நியமித்துவிடுவார்கள். அதனால் சிலைக்கும் செல்லம். இந்தப் படத்தை கலைநயமாக கமராவால் சுட்டவர் புகைப்படத்தோடு தனது கற்பனையையும் விட்டுப் பார்த்திருக்கிறார். சிலை பேசுகிறதாம்.

"அடே....பார்த்து.... காது அடைக்கப்போகிறது: பின்னர் என்னைப் பற்றி என்ன பேசுகிறார்கள் என்பது கேட்காமல் போய்விடும்"

# தகவல் பெட்டி

## வீதியில் விதி! மாடும்-மாருதியும்

கமராவின் கண்களுக்கு அபூர்வமாக சில காட்சிகள் பட்டு விட்டால் உடனே சுட்டுவிடும். இந்தியாவின் தலைநகரான புதுடில்லியில் வீதி விதிகளை மீறிய மாட்டின் விதி மாருதிக்காரினால் அதோ கதியாகிவிட்டது. இயற்கைக் காட்சிகளை கமராவில் சுட்டுக் கொண்டிருந்தார் கமராக்காரர். அப்போது தான் இந்த விபத்து நடக்க தத்ரூபமாக அக்காட்சியையும் கமரா சுட்டுத்தந்து விட்டது. வீதியை வீட்டு முற்றம் என்று நினைத்தபடி செல்பவர்கள் மனிதர்களிலும் இருக்கிறார்கள்.





## நாயில்லாமல் நானில்லை!

நாய் குலைக்கும். திருடனைக் கண்டால் கடிக்கும். என்பதெல்லாம் அந்தக் காலத்தில் எழுதப்பட்ட வாக்கியங்கள். இப்போது என்றால், நாயின் குணங்கள் என்ன? நாய் நல்ல தோழன். அது நம்மோடு தூங்கும். துள்ளியாடும். விருந்துகளுக்கு அழைத்துப் போனால் சமர்த்தாக நடந்து கொள்ளும். பிடித்தமான இசையை தவழவிட்டால் படு ஜோராக நடனமாடும். மைக்கேல் ஜாக்சன், பிரபுதேவா, மடோனா எல்லோரும் அதன் நடனம் முன்னால் மண்டியிட நேரலாம். என்று எழுதிக் கொண்டே போகலாம். அந்தளவுக்கு நாயின் உபயோகம் மாறிக் கொண்டிருக்கிறது.

முன்பு நடிகைகளின் நாய்கள் பற்றி மட்டுமே பிரபலமாய் பேசுவார்கள். இப்போது மேலை நாடுகளில் வீட்டுக்கொரு நாய்.....மன்னிக்கவும்-வீட்டுக்கொரு செல்லம் வளர்க்கிறார்கள். படத்தைப் பாருங்கள். சிறுமி சாராவுக்கு உடை தயாராகும் போது அதே மாதிரியே அவள் செல்லத்துக்கும் உடை தயாரானது. அய்.... புத்தாடை. இரு செல்லங்களும் மகிழ்ச்சியை பரிமாறிக் கொள்கின்றனர்.



அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸில் வசிப்பவர்; லெயானார்ட். அவருக்கு பறவைகள் என்றால் உயிர். கூண்டுக்குள் வைத்து கைதிகள் போல பறவைகளை வளர்க்க அவருக்கு விருப்பமில்லை. சிநேகப் பறவைகளை சிறைப் பறவைகளாக்குவதா? வேண்டாமே! அதனால் ஒரு ஐடியா செய்தார். பறவைகளுக்கு ஒரு சின்ன வீடு 'செட்டப்' செய்தார். கிட்டத்தட்ட ஆறுமாதமானதாம் சின்னவீட்டை ஒரு மாதிரியாக அசத்தலாய் முடிக்க. இப்போது வீடு ரெடி. கூர்ந்து பாருங்கள் 'கராஜ்' மாதிரியான ஒன்றும் வீட்டோடு இருக்கிறது. அது ஏன்? லெயோனாட்டின் வீட்டைப் பார்க்கும் பறவகள் அங்கு மட்டும் கராஜ் இருக்கிறதே இங்கே இல்லையே என்று நினைக்கக்கூடாதல்லவா! மனிதரில்தான் எத்தனை விதம்!



## சிநேகப் பறவைகளுக்கு சிறை எதற்கு? சின்ன வீடு இருக்கு!

www.padippakam.com

## மி னி சி னி

* அரவிந்தசாமியோடு முன்னர் கிசுகிசுக்கப்பட்ட ஸ்ரீதேவி தற்போது அரவிந்தசாமியுடன் மலையாளப்படமொன்றில் நடிக்கிறார். இப்படத்தைத் 'தேவர்மகன்' படத்தை இயக்கிய மலையாள இயக்குநர் பரதன் இயக்குகிறார்.

* 'கேப்டன்' படத்தின் மூலம் நேரடித் தெலுங்குப் படத்தில் கதாநாயகனாக நடித்திருக்கும் சரத்குமார், அடுத்த ஆண்டில் இந்திப்படமொன்றில் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

* மலையாளத்தில் இருபதிற்கும் திற்கும் மேற்பட்ட படங்களில் நடித்திருக்கும் ஜெயராம்-ஊர்வசி ஜோடி, முதன்முறையாக தமிழில் இணைந்து நடிக்கும் படம் 'என்னவளே அடி என்னவளே' இப்படம் மலையாளத்தில் வெற்றி பெற்ற படம் ஒன்றின் தமிழ்ப் பதிப்பு.

* 'இந்து' படத்தில் ஒரு பாடல்காட்சிக்கு நடனமாடியது போன்று, கஸ்தூரிராஜா இயக்கும் 'நாட்டுப்புறப்பாட்டு' படத்திலும் ஒரு பாடல் காட்சியில் நடனமாடுகிறார் குஷ்பு. 'நாட்டுப்புறப்பாட்டு' படத்தில் செல்வா-அபிராமி நடிக்கின்றனர்.

* இதுவரைக்கும் தனது சொந்தப் படங்களிலேயே நடித்து வந்த ராஜ்கிரண், தற்போது வேறு நிறுவனங்கள் தயாரிக்கும் இரண்டு படங்களில் நடிக்கச் சம்மதம் தெரிவித்துள்ளார். இவ்விரு படங்களையும் ராஜ்கிரணே இயக்குகிறார்.

* சத்யராஜின் மனேஜர் ராமநாதன் தயாரிப்பில், பாரதிராஜா இயக்கும் 'வாக்கப்பட்ட பூமி' படத்தில் விஜயகாந்திற்கு ஜோடியாக ரோஜா நடிக்கவுள்ளார். விஜயகாந்த் ரோஜா இணையும் முதல் படம் இது.

* பி.வாசு இயக்க, பிரபு நடிக்கும் 'மிஸ்டர். மெட்ராஸ்' படத்தில் வில்லனாக நடிக்க ராதாரவியை ஒப்பந்தம் செய்து செய்தி வெளியிட்டனர். தற்போது 'மிஸ்டர். மெட்ராஸ்' படத்தில் ராதாரவி நடிக்கவில்லை.

* இந்திப் படமொன்றை இயக்குவதற்கான ஆரம்பப்பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பாலுமகேந்திரா, அடுத்து தமிழில் வெற்றி பெற்ற, கமலின் 'சதிலீலாவதி' படத்தைக் கன்னடத்தில் இயக்கத் திட்டமிட்டுள்ளார்.

* சிறிது காலம் படங்கள் இயக்குவதை நிறுத்தி விட்டு நடிப்பில் கவனம் செலுத்தி வந்த பாண்டியராஜன், விரைவில் படமொன்றை இயக்கி நடிக்கிறார். படத்தின் பெயர் 'ரீல் மன்னன்'.

* சிரஞ்சீவி தெலுங்கில் நடித்த 'அல்லுடு மாஜாகா' தமிழில் மொழிமாற்றப்படுகிறது. தமிழில் இதற்கு முதலில் 'மாஸ்டர் பிளான் 95' என்று பெயரிட்டார்கள். தற்போது இதன் பெயரை 'ரெளடி பாஸ்' என்று மாற்றிவிட்டார்கள்.





ரஞ்சித்-அஹானா-சிவா
படம் டெலிபோன்மணி

## படமாகும் நிஜக் கதை

உண்மைக் கதைகளை வைத்துப் படமெடுப்பதில் தமிழ் படவுலகமும் தீவிரமாகியிருக்கிறது. தற்போது தயாராகிவரும் உண்மைக் கதையை அடிப்படையாகக் கொண்ட படங்கள் இரண்டு.

ஒன்று நெப்போலியன் நடிக்கும் 'முஸ்தபா'. இரண்டாவது படம் முரளி நடிக்கும் 'பட்டக்காரர்'. 25 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டின் ஒரு கிராமத்தில் வீர தீரமாக வாழ்ந்த இளைஞனின் கதைதான் 'பட்டக்காரர்'.

முரளிக்கு ஜோடியாக நடிப்பவர் சரண்யா. 'பசும்பொன்' படத்திற்கு பின்னர் சரண்யாவுக்கு மறுபடி சான்சுகள்.

இசை, சவுந்தர்யன், பாடல்கள், வைரமுத்து, கதை, வசனம், இயக்கம் என்.எஸ்.சிவா. யாரிந்தச் சிவா? பல முன்னணி இயக்குநர்களிடம் பணியாற்றியதால் முன் அனுபவம் உள்ளவராம்.

### திரையில் புதியவை.

ஜுன் மாதம் இறுதியில் திரைக்கு வந்துள்ள படங்கள்.

'புள்ள குட்டிக்காரன்' (பார்த்திபன்-சங்கீதா)

'எல்லாமே என் காதலி' (நாகர் ஜுன் -மனிஷா கொய்ராலா)



ஊர்வசி & ஊர்வசி
படம்- மாயா பஜார் 1995



ரம்யா கிருஷ்ணன்
படம்- மாஸ்டர் பிளான் 95

## வாடாத இளமை

நடிகை லட்சுமி பாட்டியாகி பல மாதங்கள் ஆகிவிட்டன. ஐஸ்வர்யாவின் அம்மாதான் லட்சுமி என்பது தெரிந்த விசயம்தானே.

தெரியாத விஷயம் யாதெனில் தெலுங்குப் படமொன்றில் இளம் நடிகைகளைத் தூக்கிச் சாப்பிடுமளவுக்கு கவர்ச்சி காட்டியிருக்கிறார் லட்சுமி. உடலோடு ஒட்டிய ஆடையில் வந்து 'லட்சுமி நீயுமா பேஷ் பேஷ்' என்று சொல்லவைத்திருக்கிறாராம்.

படத்தின் நாயகன் சிரஞ்சீவி. படத்தின் பெயர் 'அல்லுடு மஜாகா'. (பெயரே தலையை சுற்றவைக்கிறதல்லவா.)

'ரெளடி பாஸ்' என்ற பெயரில் தமிழில் மொழி மாற்றம் செய்யப்படுகிறது. அளவுக்கு மீறிய கவர்ச்சி என்று ஆந்திராவில் எதிர்ப்புக் குரல்கள் எழ வைத்த படம். ரம்யா கிருஷ்ணனும், ரம்பாவும் சிரஞ்சீவியை படாதபாடு படுத்தும் காட்சிகளை விடவும் லட்சுமியின் கவர்ச்சிக்குத்தான் மவுசாம். பாட்டி! இது நியாயமா?

## நெருங்கினாலும் ஆபத்து

நடிகைகள் சிலருக்கு பெரிய தலைவலியான விஷயம் என்ன தெரியுமா? இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், ஹீரோக்களோடு நெருக்கமாய் போகாவிட்டால் வாய்ப்புக்கள் கிடைக்காது. சரி போகட்டும் என்று நெருங்கிப்போனாலும் வாய்ப்புக்கள் போய்விடுகிறது.

இந்தப் பட்டியலில் சங்கவியும் சேருகிறார். கே.எஸ்.ரவிக்குமார் தான் இயக்கும் படங்களில் கண்டிப்பாக சங்கவிக்கு இடம்கொடுத்து வந்தார்.

எப்படியோ மோப்பம் பிடித்து சங்கதி அறிந்து சங்கவி கே.எஸ். ரவிக்குமார் நெருக்கம் கிசு கிசுவாகிவிட்டது. இதனால் சங்கடமான இயக்குநர் சங்கவியை விட்டு தள்ளிப்போய்விட்டார்.

ரஜினி நடிக்கும் 'முத்து' படத்தில் ஒரு பாத்திரம் தருவதாக சங்கவியிடம் வாக்குக் கொடுத்திருந்தாராம் கே.எஸ்.ரவிக்குமார்.

இப்போது சங்கவிக்கு பதிலாக வேறு புதுமுகம் நடிக்கிறார். வெறுத்துப் போயிருக்கிறார் சங்கவி.

## 'துரோகி' பெயர் வேண்டாம். கமல் ரசிகர்கள் கோரிக்கை.

கமலஹாசன் தமிழிலும், தெலுங்கிலும் தயாரிக்கும் படத்தின் பெயர் 'துரோகி'. பெயரைப் பார்த்த கமல் ரசிகர்கள் நொந்து போனார்கள். "கமல் நடிக்கும் துரோகி என்று சொல்வது நல்லாவா இருக்கும்? வேண்டாமே, பெயரை மாற்றுங்களேன்" என்று ரசிகர்கள் பலர் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்களாம். அதனால் பெயரை மாற்றுவதா வேண்டாமா என்று தனது நெருங்கிய நண்பர்களுடன் ஆலோசித்து வருகிறாராம் கமல்.

## ஜோடி

பிரபு-குஷ்பு
ஜெயராம்-குஷ்பு
தொடங்கியது.
ஜெயராம் பயந்
குஷ்புவோடு நடி
போகிறேன் என்று
இப்போதுதா
சுட ஆரம்பித்திரு
பரிவட்டத்தில்
சுகன்யா. சுகன்
ரவுண்ட் வர வா

## உண்மைய

நிஜமாகவே
சாதனைகளைப்
இவரது சாதனை
பேசப்பட்டதால்
சினிமா ஹீரோவ
பெயர் 'கிங் குமி
துறைமுகம் ப
ராஜேஸ்வர் 'கிங்
இயக்கப் போகிறா
திரைக்கு வருகிற
சிங்கப்பூர்,
நாடுகளில்
சண்டைக்காட்சிக
ஜாக்' படத்தில்
ராஜேஸ்வர். பெ
பிரியர்களுக்கு
கிடைக்கும்.

## அம
## வி

சத்யராஜ் திை
இயக்கி மூன்று பே
வில்லாதி வில்லன்
வந்துவிட்டது. வரு
அறிவதில் ஆர்வமா
தற்போதைய நிலை



## வில்லனுக்கு கெளரவம்

விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கும் 'காந்தி பிறந்த மண்' படத்தில் ஒரு வில்லன் பட்டாளமே இருக்கிறது.

மொத்தம் ஆறு பேர் முக்கியமான வில்லன்கள். அதில் ஒருவர் ராதாரவி. தலைமையும் அவரே!

காசன்கானும் நடிக்கிறார். ஆனால் முறைத்து மிரட்டும் வில்லனாக அல்ல. கல்யாண மாப்பிள்ளையாக இரண்டே இரண்டு காட்சிகளில் மட்டும் வந்து போவார். அதாவது கெளரவ வேடம்.

கெளரவ வேடத்தை ஏற்பது விஜயகாந்த் மீதுள்ள பாசத்தால்!

ஜெயராம்-குஷ்பு
படம்- கோலங்கள்



www.padippakam.com

# செவாலியே சிவாஜி

(சென்றவாரத் தொடர்ச்சி)

'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' நாடகத்தில் நடித்த கணேசன் இன்று முதல் சிவாஜி கணேசன் ஆகிவிட்டார்" என்று பெரியார் பாராட்டினார் அல்லவா.

அதன் பின்னர் சிவாஜி கணேசனுக்கு அரசியல் பிரவேசம் செய்ய ஆசை வந்தது. காஞ்சிபுரத்திற்கு வந்த அறிஞர் அண்ணாவுடன் தங்கலானார். பொதுக் கூட்டங்களுக்கும் போனார். அண்ணா பேசும் முன்பு சிவாஜிகணேசன் பேசினார்.

அரசியல் மேடையைவிட நாடக மேடையே சிவாஜிக்கு ஏற்றது என்ற முடிவுக்கு வந்த அண்ணாதுரை சக்தி நாடக சபாவுக்கு ஒரு சிபார்சுக் கடிதம் எழுதி அனுப்பி வைத்தார். திருச்சியில் சக்தி நாடக சபா முகாமிட்டிருந்தபோது சிவாஜி கணேசனைத் தேடி பெருமாள், டைரக்டர்கள் கிருஷ்ணன் பஞ்சு ஆகியோர் வந்தனர்.

சென்னை வந்து சேர்ந்தார் சிவாஜி. அப்போது சென்னை என்.கே.டி.கலா மண்டபத்தில் 'பராசக்தி' நாடகம் நடந்து கொண்டிருந்தது. "குணசேகரன் வேஷத்திலேதான் நீ நடிக்கிறாய். நாடகத்தைப் பார்த்துவிட்டு வா" என்று சிவாஜியை அனுப்பிவைத்தார் பெருமாள்.

நாடகத்தை முழுமையாகப் பார்த்தார் சிவாஜி கணேசன். குணசேகரனாக நாடகத்தில் நடித்தவர் -டி.என்.சாமிக்கண்ணு.

பராசக்தி படப்பிடிப்பு தொடங்கியது. சுமார் 3 ஆயிரம் அடி படம் வளர்ந்து விட்டது.

மெய்யப்ப செட்டியாருக்கு (ஏ.வி.எம்.பட நிறுவன அதிபர்) நம்பிக்கை வரவில்லை. "விஷப் பரீட்சை வேண்டாம். கே.ஆர்.ராமசாமிக்குப் பெயர் அதிகமாக இருக்கிறது. அவரையே போட்டு எடுத்துவிடலாம்" என்று பெருமாளிடம் கூறினார்.

பெருமாள் பிடிவாதமாக இருந்தார். "கணேசனே நடிக்கட்டும். பின்னாடி நன்றாகவரும் பாருங்கள்" என்றார்.

படம் பத்தாயிரம் அடிக்கு மேல் எடுக்கப்பட்டதும் எடிட் செய்து பார்த்தார்கள். சிவாஜிகணேசனின் நடிப்பு பிற்பகுதியில் நன்றாக அமைந்திருப்பதை மெய்யப்ப செட்டியாரும் உணர்ந்தார். ஆரம்பத்தில் எடுத்த காட்சிகளை சுமார் 7 ஆயிரம் அடி நீக்கிவிட்டு திரும்பவும் இரவுபகலாக, ஸ்டுடியோவின் எல்லாத் தளங்களிலும் படப்பிடிப்பு நடத்தப்பட்டது. 'பராசக்தி' 1952 அக்டோபர் 17ம் திகதி திரையிடப்பட்டது.

இதுதான் சிவாஜி கணேசனின் சினிமா பிரவேச ஆரம்பகாலம். அப்போது சிவாஜி கடவுள் எதிர்ப்பாளர். பராசக்தி படவசனமும் கலைஞர் கருணாநிதி எழுதியது. கேட்கவா வேண்டும். உதாரணமாக ஒரு காட்சி.

குணசேகரனின் தங்கை கல்யாணியை கோவில் பூசாரி கற்பழிக்க முயன்றபிறகு அம்மன்சிலை பின்பிருந்து குணசேகரன் பேசுகிறான்: "யார்? அம்பாளா பேசுவது?" பூசாரி கேட்கிறான்.

"அம்பாள் எந்தக் காலத்தில் பேசினாள் அறிவு கெட்டவனே?" குரல் ஒலிக்கிறது.

"பராசக்தி தாயே" என்று பதறுகிறான் பூசாரி.

"இந்தப் பராசக்தி உனக்குத் தாய்! என் தங்கை கல்யாணி உனக்குத் தாசி- மானங்கெட்டவனே அப்படித்தானே?" என்றபடி குணசேகரன் வெளிவருகிறான். குரல் என்றால் குரல் அப்படியொரு சிம்மக் குரல் சிவாஜி கணேசனுக்கு. பராசக்தி மாபெரும் வெற்றி பெற்றது.

இமயம் தொடும் பயணம் ஆரம்பித்தது.



"நூமாலை போட்டுப்போன
மாமா வருவதற்குள்
காமாலை வந்ததய்யா வைத்தியரே
மாமியார் வைத்துப்போன
சாமானை வித்துத்தாரேன்
மருந்தேதும் போடுமய்யா வைத்தியரே!"
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

முகப்பில்
ரவீனா ராண்டன்
ரீனா (இந்தி)



கனகா-பிரபு-வினிதா
படம்: பெரிய குடும்பம்

# சினி விசிட்

## நக்மா கொடுத்தது.

நக்மா-அரவிந்தசாமி நடித்து 'மவுன யுத்தம்' என்ற பெயரில் வருகிறது ஒரு படம். அரவிந்தசாமியோடு ஒரு யுத்தமே நடத்தி ரசிகர்களை கதிகலங்க வைக்குமளவுக்கு நடித்துள்ளராம் நக்மா.

அது மட்டுமல்ல ஒரு காட்சியில் அரவிந்தசாமிக்கு முத்தம் கொடுத்தும் இருக்கிறார் நக்மா. நெருக்கமான காட்சிகள் நிறைந்த படமாம். தமிழிலும், தெலுங்கிலும் வரவிருக்கிறது.

## …றியது

…டி பிரிந்தபின்
…டி ஜொலிக்கத்
…சு பரவியதும்
…பானார். இனிக்
…த் கும்பிடுபோடப்
…கொண்டிருந்தார்.
…ஜ நடத்தி சுடச்
…படம் 'பரிவட்டம்'
…ாமுக்கு ஜோடி.
…த மறுபடி ஒரு

## …அடிதடியன்

…த்தே'யில் பல
…தவர் ஹுசைனி.
தமிழகமெங்கும்
…மாகி இப்போது
…ிட்டார். படத்தின்
…க்'.

…ந இயக்கி வரும்
… ஜாக்' படத்தை
…றமுகம் விரைவில்

…ளம் போன்ற
ஹுசைனியின்
…மாக்கி 'கிங் குயின்
…தப்போகிறாராம்
…தில், சண்டைப்
…டாத விருந்து

## …கள …மன்

…த வசனம் எழுதி
…ளில் நடித்துள்ள
23 இல் திரைக்கு
…வரத்தை தினமும்
…க்கிறார் சத்யராஜ்.
அமோகம்.

ஜீவா
படம்: வசந்தவாசல்


## புதுமுகம் அறிமுகம்

இந்தித் திரையுலகில் அறிமுகமாகும் புதிய முகம் வைஷ்ணவி. மொடல் அழகியான வைஷ்ணவிக்கு விளம்பரப் படங்களில் நடித்து சலித்துவிட்டது. கவர்ச்சி காட்டுவது பற்றி தயக்கமே இல்லாதவர் என்பதால் பம்பாய் படவுலகில் வைஷ்ணவிக்கு வரவேற்பு கொடுக்கலாம்.

வைஷ்ணவியோடு அறிமுகமாகும் கட்டழகு இளைஞன் சீகல் ஹன்ஸ்ராஜ். இவரும் விளம்பரப் படங்களில் நடித்திருக்கிறார். இப்போது வெள்ளித் திரைமீது ஆசை வந்துவிட்டது.

## வினிதாவின் காதல்

நடிகை வினிதாவை தமிழ்படவுலகுக்கு அறிமுகப்படுத்தியவர் அருண்பாண்டியன். அவர்மீது உயிரையே வைத்திருக்கிறார் வினிதா. அருண்பாண்டியனோடு வினிதா நின்று பிரத்தியோகமாக எடுத்த புகைப்படங்களை வீட்டில் மாட்டி வைத்திருக்கிறார் வினிதா. இந்த விடயம் ஒரு பத்திரிகையில் பிரசுரமாகிவிட்டது. வினிதா அதனால் வருந்தவில்லை. ஆனால் அருண்பாண்டியன் நெளிந்து கொண்டிருக்கிறாராம். அவருக்கு வினிதாமீது துளிகூட காதல் கிடையாதாம். அப்படியாயின், இதுதான் ஒருதலைக் காதலோ? அதே!



அக்ஷய் குமார்





ஜுகல் ஹன்ஸ்ராஜ்-வைஷ்ணவி

"கன்னிப் பொண்ணு
கலங்குது நின்னு
என்னமோ எண்ணி
சுழலுது கண்ணு"
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

## உடலிருக்கப் பயமேன்?

அக்ஷய குமாருக்கு 94ம் ஆண்டு எப்போதும் மறக்காது. சரியாக பன்னிரண்டு படங்களில் (ஒரு டசின்) 94 இல் நடித்து முடித்தார். தற்போது அக்ஷய் குமாரின் கையில் 16 படங்கள் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் அட்வான்ஸ் வாங்கி வைத்துவிட்டு ஒவ்வொன்றாக நடித்து முடிக்கப் போகிறார். காட்டில் மழை! அதனால் நடிகைகளின் கவனம் முழுக்க அக்ஷய் மீது குவிந்திருக்கிறது.

ஆங்கிலப்பட கதாநாயகர்கள் போல உடல்வாகு இருப்பது பயங்கரமான சண்டைக்காட்சிகளில் பிரமாண்டம் ஏற்படுத்த உதவுகிறது.

உடல் அசத்தலாக இருப்பதால் ஒரு காட்சியிலாவது சட்டையை கழற்றிவிட்டு வெற்றுடம்போடு அக்ஷய் குமாரை காட்டுவதில் இயக்குநர்களுக்கு ஆசை.

அதனால் கிளு-கிளு ஹீரோவாகி விட்டார் அக்ஷய் குமார். எப்படியோ மார்க்கெட்டை நிலையாக வைத்திருக்க வேண்டுமல்லவா.



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

## குழந்தை வளர்ப்பது எப்படி?

### பெற்றோரின் கவனத்திற்கு!

எந்த நிலையிலும் ஒரு குழந்தையின் மிகச் சிறந்த உணவு தாய்ப்பால் என்பதை மறந்து விடாதீர்கள். அதற்கு மாற்றே கிடையாது.

கொஞ்சம் கொஞ்சமாகத் திட உணவு களை (Semi-Solid) குழந்தைகளுக்குப் புகட்டுங்கள்.

குழந்தை வளர்ப்பில் அப்பாவும் கவனம் செலுத்துவது அவசியம். பால்மாவும், பள்ளிக் கூட அனுமதியும் வாங்கித் தருவதோடு ஒரு அப்பாவின் கடமை முடிவதில்லை. குழந்தைக்கு அப்பாவின் அரவணைப்பும் தேவை.

குழந்தைகளின் எதிரே உங்கள் மனைவியுடனோ, வீட்டிலிருக்கும் பெரியவர்களுடனோ சண்டையிடாதீர்கள். குழந்தைகள் உங்களையே கவனிக்கின்றனர் என்பதை மறந்து விட வேண்டாம். அவர்களுக்கு நீங்களே ஒரு மோசமான முன்னுதாரணமாக ஆகிவிடாதீர்கள். டி.வி. பார்க்கக்கூடாது என்று குழந்தைகளுக்கு ஒரேயடியாகத் தடை விதிக்காதீர்கள். நம் காலத்தில் நாம் தெரிந்து கொண்டிருந்த உலக விஷயங்களை விட நம் குழந்தைகளுக்கு அதிகம் தெரிகிறது. இதற்குக் காரணம் டி.வி.தான். பாதுகாப்பான தொலைவில் இருந்து டி.வி.பார்ப்பது நல்லது. உங்கள் குழந்தைகளை "வா டி.வி. பார்க்கலாம், பின்னர் படிக்கலாம்" என்று நீங்களே அழையுங்கள்.

மேல்தட்டுக் குடும்பங்களில் ஒரு அவலம் நேர்கிறது. தங்கள் வீட்டிலேயே விருந்துகளை ஏற்பாடு செய்து பெரியவர்கள் நடத்தும் கேளிக்கைகளின் போது, குழந்தைகளைக் கட்டாயமாக மாடிக்கு அனுப்பி விட்டு கீழே நீலப்படம் பார்த்தல், மதுவகைகள் ஆகியவற்றில் ஈடுபடுகிறார்கள். தயவுசெய்து இது போன்ற விருந்துபசாரங்களை வீட்டுக்கு வெளியே வைத்துக்கொள்ளுங்கள். குழந்தைகளின் மனநிலை இது போன்ற சமயங்களில் மிக மோசமான பாதிப்புக்கு உள்ளாகும்.

பிற குழந்தைகளோடு உங்கள் குழந்தையை ஒரு போதும் ஒப்பிடாதீர்கள். மாறாக, உங்கள் குழந்தையின் திறனை உயர்த்தப் பாடுபடுங்கள்.

## அப்பிள் ஜாம்

### சமைப்போம் சுவைப்போம்

-தொகுத்துத் தருவது சுகந்தினி-

**தேவையான பொருட்கள்:**

அப்பிள் -2
சீனி - தேவையான அளவு
நெய் -100 கிராம்
அப்பிள் எஸென்ஸ் -சிறிதளவு.

**செய்முறை:**

அப்பிள் பழத்தை துண்டுகளாக்கி இட்லி தட்டுக்களில் (ஆவியில்) வைத்து வேக வைக்க வேண்டும். அப்பிள் நன்றாக அவிந்தவுடன் அவற்றை எடுத்துத் தோல் நீக்கி மிக்ஸியில் இட்டுக் கூழாக்க வேண்டும். இந்தக் கூழ் கலவை எவ்வளவு உள்ளதோ அதைப்போல் இரண்டு மடங்கு சீனி எடுத்துக் கொள்ளவும். அப்பிள் கூழ் கலவையை அடுப்பில் உள்ள வாணலியில் இட்டுக் கிளற வேண்டும். அதில், எடுத்து வைத்துள்ள சீனியையும் சேர்க்கவும். இந்தக் கலவையில் சிறிதளவு அப்பிள் எஸென்ஸ் விட்டுக் கிளறவும். இத்துடன் நெய் சேர்த்து ஜாம் கெட்டியானவுடன் இறக்கி விடவேண்டும்.

அப்பிளைப் போன்று கரட், பூசணி போன்றவற்றிலும் இதே முறையில் ஜாம் செய்யலாம். பத்திரமாகப் போத்தல்களில் அடைத்து வைத்தால் பல வாரம் கெடாமல் இருக்கும்.

## சிக்கென்ற உடலுக்கு சுலபமான ஒரு வழி

நவீன ஆடை அணிவது!

ஒரு கலைதான். எல்லாருக்குமா இந்த 'டிரஸ்' சூட் ஆகுது? சிலருக்கு வயி று



பெருத்து மிடி, சுடிதார், ஸ்கேர்ட் எது போட்டாலும் தள்ளிக்கிட்டு அசிங்கமா இருக்கும். ஒட்டிய வயிறு உள்ளவர்களின்-வயிற்றை எல்லாம் பார்க்கும் போது ஏக்கமா இருக்கா?

இனி இந்த 'தொப்பை' வயிற்றைக் குறைத்து அழகாக்குவது எப்படின்னு பார்ப் போமா?

வயிறு பட்டையாக காட்சியளிக்க...நன்கு குனிந்து நிமிர்ந்து வீட்டு வேலை செய்யணும். அங்கதானே இடிக்கிதுங்கறீங்களா?

முக்கியமா நாம் செய்யும் வேலை இடுப்புக்கும் வயிற்றுக்கும் நல்ல அசைவினை கொடுப்பதாக இருக்க வேண்டும்.

அரிசி, உருளைக்கிழங்கு, மாமிச உணவு வகைகளை மிகவும் குறைத்துக் கொள்ள வேண்டும்.

அசைவ உணவுப் பிரியைகள் மாமிசத்தை மறந்து மீனுக்கு மாற வேண்டும்!

**செய்ய வேண்டிய உடற் பயிற்சி:**

கால்களை பக்கவாட்டில் சற்று அகட்டி நிற்க வேண்டும். பின்பு மூச்சை நன்றாக வெளியே விட்டபடி சற்று குனிந்து வயிற்றை உட்புறமாக எக்கிக் கொள்ள வேண்டும். பிறகு மூச்சை உள்ளுக்கு மிகவும் மெதுவாக இழுத்து எக்கிய வயிற்றை சமநிலைக்கு கொண்டு வர வேண்டும். இந்தப் பயிற்சியை காலை, மாலை இரு வேளையிலும் ஒரு பத்து நிமிடமாவது செய்ய வேண்டும்.

கவனத்தில் கொள்க..இந்தப் பயிற்சியை செய்யும் போது வயிறு காலியாக இருக்க வேண்டும்.

அப்பா..! ஆலிலை போன்ற வயிறு எப்படியடி வந்தது, என்று எல்லாரும் உங்களைப் பார்த்து பொறமைப்படுகிறார்களா?


பரிசுக் கூப்பன்
மகளிர் மட்டும்
இல 19

**மகளிர் மட்டும்**

**-பரிசுப் போட்டி-**

**முதல் அதிஷ்டசாலிக்கு**
**தங்கநகை**

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.


## பெண்களுக்கு என்றாலும்—
## இது பொசிக்குமாம் ஆண்களுக்கும்.

டியர்ஸ்...

இந்த வாரத்தில் உங்களை தேவலோகத்து அழகு சுந்தரிகளைப் போன்று மாற்றப் போகிறோம். இதோ உங்களுக்காகவே சில விசேட ஆலோசனைகள்.

உறுப்புக்கள் தங்கம் போல் மாற வேண்டுமானால் அது நாம் சாப்பிடும் உணவில்தான் உள்ளது. எந்தெந்த உணவை சாப்பிடுவதென்று பார்ப்போமா?

கண் புருவங்கள் நீண்டு வளர அப்பிள் பழத்தை நறுக்கி தேனில் தொட்டுச் சாப்பிடுங்கள்.

மூக்கின் இருபுறமும் சுருக்கம் விழாதிருக்க வெண்ணை சாப்பிட வேண்டும்.

முகவாய்க்கட்டை இறங்காமலிருக்க மீன் எண்ணெய் சாப்பிடுங்கள்.

தோல் பட்டுப் போலிருக்க மாதுளை, அன்னாசிப்பழங்களை அரிந்து சாப்பிட வேண்டும்.



விரல்கள் வெண்டைப் பிஞ்சுகளைப் போல் இருக்க... வெண்டைக்காய் பிஞ்சுகளை நறுக்... மொறுக்கென்று சாப்பிட வேண்டும்.

நக்மா போன்ற பொன்னிற மேனி பெற பொன்னாங்காணியைச் சூப் வைத்து அருந்த வேண்டும்.

கன்னக் கதுப்புகள் மீனா போன்று பளபளக்க தக்காளிப் பழத்தை பச்சையாக சாப்பிட வேண்டும்.

வயிற்றில் சுருக்கம் விழாமலிருக்க எல்லாவகை கீரைகளையும், காய்கறிகளுடைய இலைகளையும் சாப்பிட வேண்டும்.

எந்தெந்த உறுப்பு அழகாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறீங்களோ அந்தந்த உணவைச் சாப்பிடுங்கள். சரியா?

இப்பெல்லாம் உங்களைப் பார்ப்பவர்கள் 'அழகே..அழகு தேவதை'என்ற பாட்டை முணுமுணுக்கிறார்களா?

## அழகன்-அழகன் பேரழகன்



என்னடா அழகன் பேரழகன் என்று தலைப்பிருக்கிறதே என்று பார்க்கிறீங்களா..! எங்க காதலிகளை மட்டும் 'அழகி'யாக்கிட்டா போதுமா...? 'இப்போ எங்களையும் அழகனாக்கப் போறியா இல்லையா?', என மிரட்டல் கடிதம் எழுதும் வாசகர்களுக்கு இந்த 'டிப்ஸ்'.

முதலில் அழகனாக வேண்டுமானால் தினசரி மூன்று முறை குளிக்க வேண்டும். குளிக்காதவர்கள் அழகாகவே முடியாது! முடிந்தவரை வியர்வை நாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது.

ஆண் எந்த நகையும் அணியாமல் இருப்பதுதான் அழகு!

'வாட்ச்' கட்டிக் கொள்ளலாம். குண்டா இருப்பவர்கள் பெரிய 'வாட்ச்' அணியலாம். ஒல்லியாய் இருப்பவர்கள் சிறிய 'வாட்ச்' அல்லது லேடீஸ் 'வாட்ச்' கட்ட வேண்டும்.

தங்கச் சங்கிலி அணிந்த 'வாட்ச்' பிறரது கவனத்தைக் கவரும் என்பதில் சந்தேகமே இல்லை.

ஃபாஷனான மெல்லிய செருப்பை அணியவேண்டும். கறுப்பாயிருப்பவர்கள் கறுப்பு நிற தோல் செருப்பும், மாநிறமாய் இருப்பவர்கள் சாம்பல் நிற தோல் செருப்பும் அணிய வேண்டும். நடக்கும் போது 'கிறீச்.. கிறீச்.. என்ற சப்தம் வரக்கூடாது.

சட்டை பாக்கெட்டில் கண்டதைப் போட்டு உப்ப விடக்கூடாது. சலவையிலிருந்து வந்தபடி சட்டையோடு ஒட்டி இருக்க வேண்டும்.

அடிக்கடி முகத்தில் ஊறும் எண்ணெய் பசையை நன்றாக அழுத்தி துடைக்க வேண்டும். வாய்ப்பு கிடைத்தால் முகம் கழுவி, துடைத்து விட்டு அவ்வப்போது சீப்பால் வாரிக் கொள்ள வேண்டும்.

தினமும் 'ஷேவ்' செய்ய வேண்டும். இப்படிச் ஷேவ் செய்வதால் முகத்திற்கு எந்தவிதமான கெடுதலும் இல்லை. ஆனால் கத்தி கூர்மையாக இருக்க வேண்டும்.

வெளியே செல்வதற்கு முன் வியர்க்கும் இடங்களை எல்லாம் துடைத்து விட்டு லைட்டா பவுடர் போட்டு..அவரவர்க்கு ஏற்ற ஸ்டைலில் தலைவாரிப் பாருங்கள்.... ஹா.. ஒரே அசத்தல்தான்!

## மின்னலடிக்கும் வண்ண முகம்

சிலருக்கு என்னதான் பவுடர் போட்டாலும் சிறிது நேரத்திலேயே முகத்தில் எண்ணெய் வழிய ஆரம்பித்துவிடும். எப்போதுமே 'பளிச்' சென்று ஃபிரஷ்ஷா இருப்பவர்களைப் பார்த்தால் பொறாமையாகக் கூட இருக்கும். இப்படி எண்ணெய் முகம் உள்ளவர்கள் இனி கவலையை விடுங்கள்.

**இனி நீங்கள் செய்ய வேண்டியது.....**

* ஒரு சின்ன பாத்திரத்தில் கொதிக்கும் வெந்நீரை ஊற்றி உங்கள் முகத்தை ஒரு தடிப்பமான துணியால் மூடிக்கொண்டு நன்கு ஆவிபிடியுங்கள். முகம் முழுவதும் நன்றாக வியர்த்துக் கொட்டும். இப்போ துண்டை எடுத்துவிட்டு சிறிது நேரம் குளிரவிட்டு குளிர்ந்த நீரில் முகம் கழுவுங்கள்.
* இது முகத்தில் உள்ள சிறு சிறு துளைகளில் உள்ள அழுக்கு, எண்ணெய் பிசுக்கை நீக்கிவிடும். இரத்த ஓட்டம் தூண்டப்பட்டு புத்துணர்ச்சி கிடைக்கும்.



* ஆவி பிடிப்பதை வாரத்திற்கு ஒருமுறை வீதம் பத்து நிமிடத்திற்கு செய்யுங்கள்.
* வெயிலில் சுற்றிவிட்டு வந்தால் ஐஸ் கட்டிகளை கொண்டு முகத்திற்கு ஒத்தடம் கொடுங்கள்.
* ஆஸ்ட்ரின்ஜன்ட் லோஷன் (Astringent Lotion) கடைகளில் கிடைக்கும். இதை ஒரு நாளில் மூன்று முறை உபயோகியுங்கள். இது சூரியக்கதிர்களில் இருந்து உங்கள் முக அழகை பாதுகாக்கும். கிரீம் கிடைக்காதவர்கள் இந்த முறையை விட்டு விடுங்கள்.

இப்பொழுதெல்லாம் உங்கள் கிட்ட பேசுவதையே மறந்து மணிக்கணக்காக உங்கள் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறார்களா?

## சின்ன சின்ன 'டிப்ஸ்'

அதிகமான அலைச்சல் அல்லது பிரயாணத்தால் வந்த அசதி இவற்றினால் உடம்பெல்லாம் ஒரே வலியாக இருக்கிறதா? புளியமர இலைகளைப் பறித்து வந்து நீரில் கொதிக்க வைத்து அந்தத் தண்ணீரில் குளியுங்கள். உடம்பு வலி வந்த இடம் தெரியாமல் ஓடிவிடும்.

▫▫

எதுவுமே இல்லாமல் திடீரென உடல் எடை குறைதல் கூடாது. எடை குறைதல், சாப்பாட்டில் விருப்பம் குறைதல், சாப்பிட்டால் வாந்தி ஏற்படுவது போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியரிடம் சென்றுவிட வேண்டும். குழந்தைகளை பயமுறுத்துவது அல்லது அடிப்பது ஆகியவற்றினாலும் அவர்களுக்கு எடை குறைவு ஏற்படும்.

▫▫

கர்ப்பம் தரித்த பெண்களுக்கு ஊட்டச்சத்துமிக்க உணவு அவசியம். இது சரிவரக் கிடைக்கப் பெறாதவர்கள் பாலாவது சாப்பிட வேண்டும்.

▫▫

சில சமயம் சாப்பிடும்போது மீன்முள் தொண்டையில் மாட்டிக்கொள்ளும். அப்போது எலுமிச்சை சாறு அருந்தினாலோ அல்லது உறிஞ்சினாலோ மீன்முள் விலகிவிடும்.

## சுந்தரி! இங்கே, சில சேதி!

### அழகு வாய் அமைய....

'ஆ.....வ்......!'னு அசிங்கமா கொட்டாவி விடுவதை முதலில் நிறுத்த வேண்டும். இதனால் வாய் அகலமாகி ....உதடு பெருத்துவிடும். அதனால்..... கொட்டாவி விடும்போது அடக்கம்...அடக்கம் தேவை!

உதடுகள் காய்ந்து வறண்டு போயிருந்தாலும், வெடிப்புகள் காணப்பட்டாலும் அதைப்போக்க வெண்ணெய் தடவுங்கள். அழகு 'லிப்ஸ்' கிடைக்கும்.

சிலருக்கு வாயின் இருபுறங்களிலும் புண் இருக்கும். இதற்குக் காரணம் வயிற்று கோளாறுதான். வயிற்றில் என்ன கோளாறு என்பதை கவனித்து வயிற்றை சுத்தமாக்கி விட்டால் 'வாய்ப்புண்' மறைந்துவிடும்.

**இது வாசகர்களுக்கு மட்டும்!...**

புகைபிடிப்பதால் சிலருக்கு உதடுகளின் நடுவிலே வெள்ளையாகவும், கறுப்பாகவும் இருக்கும். சிகரெட்டை விட்டுவிட்டால் பிரச்சனை இல்லை. அப்படி விட முடியாமல் தவிக்கும் வாசகர்கள் சிகரெட்டை குழாயில் வைத்துப் பிடிக்கலாம். ஒரு விஷயம்! குழாய் சுத்தமானதாய் இருக்க வேண்டும்!



**கடைசியாக.....**

உதட்டில் எப்போதும் ஈரப்பசை இருப்பதுபோல் நாக்கால் 'லைட்'டா நனச்சிக்கோங்க...இதையே சும்மா செஞ்சிடாதீங்க... பார்க்கிறவர்கள் தப்பா நெனச்சிக்கப் போறாங்க!

## பா... பா.... பாம்பு



பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பது தெரியும். பாம்பு எப்போதெல்லாம் கடிக்கும் என்று தெரியுமா?

1. விஷம் மிதமிஞ்சி ததும்பும்போது.
2. மற்றவர்களிடம் கொண்ட பயம் காரணமாக.
3. தன்னுடைய உணவென்று எதையாவது நினைத்து விடுவதால்.
4. தன் துணையுடன் இணைந்திருக்கும் போது... அங்கே யாராவது வந்தால்.
5. மிகுந்த கோபத்துடன் இருக்கையில்.
6. தான் செல்லும் போது மற்றவர் எதிரில் வந்தால்.
7. படம் எடுத்தாடும் போது எவராவது வந்தால்.
8. பிறர் தனக்கு முன்னர் எப்பொழுதோ செய்த தீங்கை நினைவு கூரும் போது...



படிப்பகம்

www.padippakam.com

# அறிஞர் அண்ணா சொன்ன கதை

பொருத்திப் பார்க்கலாம் படியுங்கள்

# இந்திராணி சேலை



அமரர் அறிஞர் அண்ணாதுரையின் அரசியல் பிரசாரத்தில் இலக்கிய வாடை வீசும். அடிக்கடி அவர் கூறும் குட்டிக்கதைகள் சிரிக்க வைக்கும். கூடவே சிந்தனையையும் தூண்டும். இதுவும் அண்ணா சொன்ன ஒரு குட்டிக் கதைதான். நமது நாட்டு நடப்புக்களோடும் இக் கதையைப் பொருத்திப் பார்க்கலாம். நாம் என்ன தடையா செய்கிறோம்?

**பு**ராண மதிபடைத்த ஒரு மன்னன், மந்தகாச வாழ்வால் மதியை மங்கவைத்துக் கொண்ட மந்திரிமார்கள். அந்த சபைக்கு வந்தான் ஒரு சாகசக்காரன்!

"அரசே! என்றான், "என்ன?" என்று தர்பார் முறையில் கேட்டான் மன்னன்!

"அரசரே! நான் எத்தனையோ இராஜாதி ராஜாக்களைப் பார்த்தேன், அவர்களோடு பழகினேன், ஆனால் ஒருவருக்காவது, தங்களுக்கு உள்ளது போன்ற வீர தீரம், பராக்கிரமம் இல்லை, எனவே தங்களைக் கண்டதும் அது தங்களுக்கே உரியது என்று தீர்மானித்து விட்டேன். என் காணிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன் காவலா!" என்றான்.

காவலன், காணிக்கையை ஏற்றுக் கொள்ளும்படி ஒருவன் கேட்பது கண்டு மகிழ்ந்து, "அங்ஙனமே ஆகுக! காணிக்கைப் பொருள் யாது?" என்று கேட்டான்.

"ஈரேழுபதினாலு உலகத்திலும் இதற்கு ஈடு கிடையாது வேந்தே!"

"அப்படியா? மெத்தப் புகழ்கிறாயே! என்ன அது, நவரத்தின மாலையோ, முத்துப்பல்லக்கோ, தந்தக் கட்டிலோ, தங்கப் பாளமோ?......"

"மன்னா! இதெல்லாம் சாமான்ய மன்னர்களுக்கு! தங்களுக்கு நான் தரப்போவது......?"

"என்ன! என்ன அது?"

"இந்திராணி தேவியாரின் எழில்மிக்க சேலை, தங்கள் பட்ட மகிஷி பூரிப்படைய.....!"

"இந்திராணி தேவியார்!"

"ஆமாம், அரசர்க்கரசே! தேவேந்திரனுடைய பார்யாள், சாட்சாத் இந்திராணி தேவி, தவமிருந்து பெற்ற சேலை. அதை அணிந்து கொண்டால், அரசே! வெள்ளை யானை கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும், கற்பக விருட்சம், காமதேனு, குற்றவேல் புரியும்- அப்படிப்பட்ட மகிமை வாய்ந்தது......"

"அப்படியா.....? நம்ப முடியவில்லையே....."

"இப்போது நம்ப வேண்டாம் மகாராஜா! சேலையை நான் இந்தச் சபையிலே பிரித்துக் காட்டப் போகிறேனே, அப்போது நம்புங்கள்- இப்போது ஏன்! ஏழை பேச்சு அம்பலம் ஏறுமா?"

"தேவேந்திரனுடைய தேவியின் சேலை......"

"தங்கள் திருச்சபையில் கொண்டுவந்து காட்டப்போகிறேன்....."

"இப்போது நம்ப வேண்டாம் மகாராஜா! இந்த சபையிலே, சேலையை நான் இந்த சபையிலே, அப்போது பிரித்துக் காட்டப் போகிறேனே, அப்போது நம்புங்கள்! இப்போது ஏன்...! ஏழை பேச்சு அம்பலம் ஏறுமா?"



"யார் நீ"

"உரு கண்டு எள்ளற்க, மன்னா! உண்மையைப் பொறுத்திருந்து பாரும்....."

"எப்போது கொண்டு வருவாய்?"

"ஆறேழு மண்டலம் பூஜை - அது முடிந்ததும் அந்த அற்புதமான சேலை...."

இந்த உரையாடலுக்குப் பிறகு சாகசக்காரனுக்கு அரண்மனையில் சகல வசதிகளும் செய்து தரப்பட்டன. பூஜை நடத்தி வந்தான்! மலர்களைவிடப் பழங்கள் அதிகம் செலவாயின பூஜைக்கு! தேனும் பாலும் குடம் குடமாக! தேவ பூஜைக்கு துணை செய்த தத்தைகள்! பொன், கேட்கும் போதெல்லாம்!

இப்படி போக போக்கியமாக சாகசக்காரன் இருந்து வந்தான். ஆறு மண்டலம் முடிந்தது. ஏழும் வந்து சென்றது. மன்னன், 'இன்னும் ஏன் தாமதம்?' என்றான்.

"மன்னா பூஜை முடியவில்லையே, ஆறேழு மண்டலமாகும் என்றேனே மறந்தீரா?" என்றான் சாகசக்காரன்.

"நான் எப்படி மறப்பேன், நேற்றோடு ஏழு மண்டலம், இருநூற்று எண்பது நாட்கள் முடிந்தனவே...." என்றான் மன்னன்.

பெருஞ் சிரிப்பொலி கிளம்பிற்று. "மன்னா! ஆறேழு மண்டலம் என்றேன்- தாங்கள் அதன் தாத்பரியத்தைத் தெரிந்து கொள்ளவில்லை. ஆறேழு-நாற்பத்திரண்டு மண்டலங்கள்- நாற்பத்திரண்டு நாற்பது நாட்கள்-என்று விளக்கமுரைத்தான். மன்னன் திடுக்கிட்டுப் போனான். எனினும் என்ன செய்வது-இந்திராணியின் சேலை-அதன் மகிமையால், வெள்ளை யானை, காமதேனு, கற்பக விருட்சம்!! "சரி" என்றான் சாகசக்காரன் ராஜபோகத்தில் மூழ்கினான்.

நாட்கள் நகர்ந்தன. கடைசியிலே அவன் சொன்ன நாள் வந்தது. "நாளை தர்பாரில்" என்று சாகசக்காரன் தவயோகி பாணியில் சொன்னான்.

மன்றம் கூடிற்று மன்னன் ஆவல் நிரம்பிய கண்களுடன்!!

சாகசக்காரன் உள்ளே நுழைந்தான்! 'ஓம்' என்றான் மும்முறை! மேலே பார்த்தான். கரத்தை உயர்த்தினான். "ஆஹா" என்றான். கண்களில் ஒத்திக் கொண்டான். எழுச்சி மயமான நிலை பெற்றவன் போலாகி, "என்னை நம்ப மறந்தீர்களே காவலனே! இதோ பாரும்! வானவில் இதனிடம் என்ன செய்யும்-? ஆஹா பார்த்துக் கொண்டே யுகக் கணக்கில் இருந்து விடலாம் போலிருக்கிறதே! என்ன பளபளப்பு! எத்தகைய ஜொலிப்பு! தொட்டால் வெண்ணைமீது கைபடுவது போலிருக்கிறதே..." என்று பேசலானான்.

மன்னன் திகைத்தான். மந்திரிகள் மருண்டனர். ஏனெனில் சாகசக்காரன் வெறுங்கையுடன் தான் தெரிகிறான்.

"இந்திராணியின் சேலை எங்கே....." என்று மன்னன் இழுத்தாற்போல் கேட்டான்.

"இதோ மன்னவா! என்னுடைய சித்து முறைக்கு மெச்சி சிவானார் அருளிய வரத்தின் விளைவு- வண்ணச் சோலை- இதோ.... இதோ" என்று கூறியபடி சேலையைப் பிரித்துக் காட்டுவது போலப் பாவனை செய்தான்!

"எனக்குத் தெரியவில்லையே?!" என்று ஏக்கத்துடன் கூறினான் மன்னன்.

திகைத்தவன் போலானான் சாகசக்காரன். பயந்த குரலில்- "மன்னா தங்களுக்குத் தெரியவில்லை என்றா கூறுகிறீர்கள்....?" என்றான்.

"ஆமாம் தெரியக் காணோமே!" என்றான் மன்னன்.

"ஐயகோ ஒரு விஷயத்தைக் கூற மறந்தேனே அறிவிலி நான்! அரசே! யாருடைய அன்னை பத்தினியோ, அப்படிப் பட்டவர்களின் கண்களுக்குத்தான் இது தெரியும். உத்தமியாயிற்றே உமது அன்னை-உமக்கு தெரிந்தாக வேண்டுமே!" என்றான்.

மன்னனுடைய மாதாவின் மீது மாசு உண்டு. மன்னனுக்கும் அது தெரியும்- எனவே, குட்டு வெளிப்பட்டு விட்டதே என்று குமுறிய மன்னன், "ஆஹா! அற்புதம்!! இதெல்லவா தேவப் பிரசாதம்!" என்று கூறியபடி, சாகசக்காரன் கையிலிருந்து சேலையை வாங்கினான். (பாவனைதான்!) மந்திரிகளிடம் காட்டினான். அவர்களோ மன்னனுக்கு ஒத்து ஊதினர்! சாகசக்காரன் வெற்றி பெற்றான்.

□□

**அ**ண்ணா சொன்ன இந்தக் கதையில் வரும் பாத்திரங்களை நம்நாட்டு நிலவரத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள். யாரை யாருடன் ஒப்பிட முடிந்தது?

உங்கள் முடிவோடு எமது ஒப்பீட்டையும் கவனியுங்கள்.

**சாகசக்காரன் :-** சூழலை ஆராயாமல் சமாதானம் வரும் —வந்துவிட்டது என்று குடுகுடுப்பை அடித்த விமர்சகர்கள்.

**மன்னனும் மந்திரிகளும்-** சமாதானம் வருவதுபோல தெரியவில்லையே என்று புரிந்தபோதும், தம்மை சமாதான விரோதிகள் என்று கூறிவிடுவார்களோ என்பதற்காக "ஆமாம்....வருகிறது" என்று ஒத்து ஊதியவர்கள்.

என்ன ஒப்பீடு சரியாக இருக்கிறதா? இன்னும், இனியும் பல நடப்புக்களோடு ஒப்பிடக்கூடிய கதை அது. அதனால் மனதில் பத்திரமாக வைத்திருங்கள்.



# நில → முன்னேறு கவனி

அற்புதன்

**வா**ர்த்தைகளில் வடிப்பது மட்டும் தான் கவிதையா?

காகிதத்தில் எழுதிப் படிப்பது மட்டுமேதான் கவிதையா?

'இல்லை' என்று சொல்பவர்களின் கட்சியில் நானும் சேர்ந்து கொள்கிறேன்.

காதலும் ஒரு கவிதைதான் என்று சொல்வதுண்டு; காதலித்தவர்கள், காதலித்துக் கொண்டிருப்பவர்களின் தீர்ப்புக்கு அதனை விட்டுவிடலாம்.

ஆனால், ஒரு விஷயம் காதலர்கள் எப்போதுமே வார்த்தைகளால் மட்டுமே பேசிக்கொண்டிருப்பதில்லை.

நயன பாஷைகள், நளின சைகைகள் மொழியாவதுண்டு, நேசம், குறும்பு, சரசம் என்று ஒவ்வொன்றுக்கும் வார்த்தைகளே இல்லாத தொடர்பு சாதனங்களை காதலர்கள் கண்டு பிடித்துவைத்திருக்கிறார்கள்.

விஞ்ஞானம் வளர முன்பாகவே மெய்யான காதலர்கள் கண்டுபிடித்த கண்ணான சாதனங்கள் அவை.

ஆகவே, அதனால் தகவல் தொடர்பு சாதனத்தை முதன் முதலில் கண்டு பிடித்தவர்கள் யார் என்று என்னைக் கேட்டால், சற்றேனும் தயங்காமல் 'காதலர்கள்' என்பேன் நான்.

நிற்க, சமீபத்தில் கண்ணில் பட்ட ஒரு கவிதைத்தரமான விஷயமே இதனை எழுத வைத்தது.

நான் கண்ட கவிதைத் தரமான விஷயம் ஒரு புளியமரம்!


"பேயிருக்கும் கவனம் மக்காள்!" என்று பாட்டி காட்டிச் சொல்லிய அதே புளிய மரம்!

பாட்டியின் மடியில் இருந்து புளியமர பேய்க்கதை கேட்டுக்கேட்டு புளிய மரத்தைப் பார்த்தாலே உள்ளூர ஒரு பயம் எனக்கு.

அப்படியிருக்கையில் புளியமரத்தில் ஒரு துண்டிக்கப்பட்ட கை ஒன்று தொங்கியிருப்பது போன்ற புகைப்படத்தைப் பார்த்தபோது என் நிலை எப்படியிருந்திருக்கும்?

மனதை திடப்படுத்திக்கொண்டு புகைப் படத்தோடு பிரசுரமாகியிருந்த தகவலை வாசித்தேன்.

தகவலின் தலைப்பே நெற்றியில் அடித்தது. தலைப்பு இதுதான், "புளியமரத்தில் புதுக்கவிதை எழுத முடியுமா?"



விஷயம் அறியும் ஆவலில் தகவலின் உள்ளே போனேன்.

இந்தியாவில் அதிக சன நெருக்கமான பம்பாய் நகரை விட்டு உள்ளே 75 கிலோ மீட்டர் போக வேண்டும். அங்கே கடற்கரை காற்று வருடிச் சுகப்படுத்தும் ஒரு அழகான கிராமம். கிராமத்தின் பெயர் கிரீஸ்.

சில வருடங்களுக்கு முன்னர் வரை சேறு, சகதி, முட்புதர்கள் நிறைந்து கிடந்த கிராமம்.

இப்போது பளிச் சென்று முகமே மாறியிருக்கிறது. எங்கு திரும்பினாலும் அபூர்வமான மரச் சிற்பங்கள்.

எல்லாமே கலப்படமற்ற புளியமரச் சிற்பங்கள்.

முதலில் அந்தச் சிற்பங்கள் பம்பாய் கலை அரங்கம் ஒன்றில் காட்சிக்கு வைக்கப்பட்டன.

அதன்பின்னர் தற்போது உலகின் பல நாடுகளில் காட்சி அரங்குகளில் வைக்கப்பட்டு மறு நிமிடமே காணாமல் போகின்றன. அத்தனை வேகமான விற்பனை! அதனால் 'கிரீஸ்' கிராமமே செழித்துக் கொண்டிருக்கிறது.

இத்தனைக்கும் காரணம் ஒரு அமெரிக்கர். அவரது பெயர் ஸ்காட் ரூனியன்.

அமெரிக்காவில் கலிஃபோனியாவில் உள்ள இந்திய நண்பர் ஒருவரின் திருமணத்திற்காக பம்பாய்க்கு வந்தவரின் கண்ணில் பட்டுவிட்டது புளியமரம்.

அவர் ஒரு சிற்பியாக இருந்தமையால் புளியமரத்தில் என்ன இருக்கிறது? பிரமாண்டமான கலைக்குரிய சமாச்சாரம் இருக்கிறது என்று கண்டுகொண்டார்.

பம்பாயிலேயே தங்கியிருந்து கிரீஸ் கிராம ஆட்களை உதவிக்கு வைத்துக் கொண்டு நினைத்ததைச் சாதித்து விட்டார் மனிதர்.

படைத்தவை ஒவ்வொன்றும் சாதாரண சிற்பங்கள் அல்ல. ஒவ்வொன்றிலும் ஒரு கதை இருக்கிறது. ஒரு செய்தி இருக்கிறது.

சொல்லவரும் விஷயத்தை சுருக்கென்று சொல்வதே புதுக்கவிதை என்று அர்த்தம் என்பது சரியானால், அந்த புளிய மரச் சிற்பங்கள் ஒவ்வொன்றும் புதுக்கவிதைதான்.

மரத்திலே துண்டுக்கை ஒன்று தொங்குவது போல் இருக்கும் காட்சியும் ஒரு விஷயத்தைச் சொல்கிறது.

இங்கே அந்தப் படம் இருக்கிறது. கவனியுங்கள். அது சொல்வது என்ன? தியாகம், புத்துயிர்ப்பு, மாறுதல் இவற்றில் எதுவாக இருக்கும் என்று யோசனை பண்ணிப் பாருங்கள்.

இதுமட்டுமல்ல பல சிற்பங்கள்! மரம் மனித வாழ்வின் சரியான சின்னம் என்று நம்புகிறார் அமெரிக்கர் ஸ்காட்ரூனியன். அந்த சின்னத்தின் வாயிலாக மனித வெளிப்பாடுகளை செதுக்கிக் காட்டியிருக்கிறார்.

இது என்ன பெரிய சாதனையா என்று எவராவது நினைக்கலாம்.

விஷயம் அதுவல்ல, நம்மூர்களிலும் புளியமரம் இருக்கிறது. அதில் நாம் காணாத விடயத்தை வெளியில் இருந்து ஒருவர் வந்து சொல்லித்தானே நமக்கே புரிகிறது.

நாம் பேய் இருப்பதாகப் பார்க்கவே பழக்கப்பட்டதும் ஒரு குறையோ? நீங்களே முடிவு செய்யுங்கள்.

புளிய மரசிற்ப உதாரணம் மூலமாக நான் சொல்ல விரும்பும் விஷயம், நம்மைச் சுற்றி நாம் பார்க்கும் பார்வைகளில் நிறைய மாற்றம் தேவை.

நமது சிந்திக்கும் முறைகளை ஒரு வட்டத்திற்குள் மட்டும் நிறுத்திவைக்கும் கருத்துக்கள் இனம் காணப்பட்டு களையப்பட வேண்டும்.

பாட்டிகளும், தாத்தாக்களும் நம்மீது பிரியமாயிருந்தார்கள் என்பது உண்மைதான். அதற்காக எல்லாவற்றையும் புரிந்து வைத்திருந்தார்கள் என்று நாம் நம்புவது சரியா?

எத்தனையோ சங்கதிகள், சம்பிரதாயங்கள் கால வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட வேண்டிய அவசியம் நேர்ந்தே வருகிறது.

உதாரணத்திற்காக நிகழ்கால உதாரணம் ஒன்று சொல்கிறேன்:-

சல்வார் கமீஸ் அணிந்தால் சம்பிரதாயம், பண்பாடு என்னாவது என்று கேட்பவர்கள் இன்றுமிருக்கிறார்கள்.

அதேசமயம் நாட்டின் ஒரு பகுதியில் இராணுவ உடை தரித்து பெண்கள் ஆயுதங்களோடு நடமாடுகிறார்கள்.

காலம்தான் நிரந்தரமானது. அதுதான் மாற்றங்களைப் பரிந்துரை செய்கிறது. பழையனவற்றை மறுபரிசிலனை செய்விக்கிறது.

மாற்றம் வேண்டாம்-உள்ளதே போதும் என்பவர்கள் காலம் கேட்கும் தேவைகளுக்கு தீர்வு சொல்ல வேண்டும்.

களத்துக்குப் போகும் பெண் சேலை கட்டிக் கொண்டா செல்ல முடியும்?

வேலைக்குப் போகும் பெண்ணுக்கு சேலையைவிட சல்வார் வசதி என்பது வீட்டில் 'ஈசிச்சேரில்' இருக்கும் தாத்தாவுக்கு எப்படித் தெரியும்?

தேவையான மாற்றங்களை தடுக்கக் கூடாது. பழையனவற்றில் நல்லதைப் போற்றுவோம். அதற்காக அவற்றையே போர்வையாக மாற்றிக் கொண்டு மூலையில் ஒதுங்கிக் கிடக்காமல் இருப்போம்.

இல்லாவிட்டால் புளிய மரத்தின் மகிமை மட்டுமல்ல, புதிய உலகின் வேகமான வளர்ச்சியும் நம் பார்வையில் படாமலேயே போய்விடும்.

நமது வீழ்ச்சியின் காரணத்தையும் வெளியார் வந்து விலாவாரியாக கண்டறிய வேண்டிய காலம் வந்துவிடும்.

□□

## ரிலாக்ஸ்






படிப்பகம்

www.padippakam.com

# தாய்

## மக்சீம் கார்க்கி

### 31

வாழ்க்கை அதிவேகமாகக் கழிந்து சென்றது. பற்பல சம்பவங்கள் நிறைந்து துரிதமாக, நாட்கள் போவதே தெரியாமல், காலம் கழிந்தது. ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு புதிய செய்தியைக் கொண்டு வந்தது. ஆனால் தாய் அவற்றைக் கேட்டுத் திடுக்கிடவில்லை: அவளுக்கு அவை பழகிப்போய் விட்டன. அவளது வீட்டுக்கு மேலும் மேலும் இனந்தெரியாத புதிய நபர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் மாலை நேரங்களில் வந்து அந்திரேயோடு ஆர்வமும் அடக்கமும் நிறைந்த குரல்களில் பேசிக்கொள்வார்கள். பிறகு தங்கள் கோட்டுக் கொலர்களைத் தூக்கிவிட்டுக் கொண்டும், தொப்பிகளைக் கண் வரையிலும் இழுத்து மூடிக் கொண்டும் இருளோடு இருளாய் அரவமேயில்லாது அதி ஜாக்கிரதையோடு மறைந்து போய்விடுவார்கள்.

அவர்கள் ஒவ்வொருவருடைய மனத்திலும் உள்ளடங்கித் துடித்துக் கொண்டிருக்கும் ஆர்வத்தை அவளால் உணர முடிந்தது. அவர்கள் அனைவருக்குமே ஆடிப்பாடிச் சிரித்து மகிழ வேண்டும் என்ற ஆசை யிருப்பது போலத் தெரிந்தது. எனினும் அதற்கெல்லாம் அவர்களுக்கு நேரமே இல்லை. அவர்கள் எப்போதும் எங்கேனும் அவசர அவசரமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் கடுமையாகவும், ஏளன சுபாவம் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். மற்றவர்கள் அனைவரும் வாலிபத்தின் வலிவும், மினுமினுப்பும் உற்சாகமும் நிறைந்து காணப்பட்டார்கள். சிலர் மிகவும் அமைதியாக, சிந்தனை வயப்பட்டவர்களாக இருந்தனர்.

அவர்கள் அனைவருமே ஒரே விதமான இலட்சிய நம்பிக்கையோடு ஒத்து நிற்பதாகத் தாய்க்குத் தோன்றியது. எனினும் அவர்கள் அனைவரும் தனித்தனியே தமக்கென ஒரு உருவும் குணமும் கொண்டிருந் தார்கள். ஆயினும் அவர்கள் அனைவரது முகங்களும் அவளுக்கு ஒன்று போலவே தோன்றின: எம்மாவை நோக்கிச் செல்லும் கிறிஸ்து நாதரின் அருள் நாட்டத்தைப் போல், - அன்பும் அழுத்தமும் பிரதிபலிக்கும், ஆழமும் தெளிவும் கருணையும் கொண்ட கண்களோடு அமைதியும் தீர்மான புத்தியும் நிறைந்து விளங்கும் மெலிந்த முகத்தைப் போல்- ஒரே முகம்போல் தோன்றியது அவளுக்கு.

அவர்களின் தொகையை எண்ணிக் கணக்கிட்டாள் தாய். அவர்கள் அனைவரையும் பாவெலைச் சுற்றி நிற்கவைத்து அவர்களுக்கு மத்தியில் பாவெலை நிறுத்தி வைத்தால், பாவெல் எதிரிகளின் கண்ணில் படாமல் எப்படி அந்த வியூகத்துக்குள்ளேயே மறைந்து நிற்பான் என்பதை அவள் கற்பனாரூபமாகவே சிந்தித்துப் பார்த்துக் கொண்டாள்.

ஒரு நாள் குறுகுறுப்பும் சுருண்ட கேசமும் நிறைந்த ஒரு யுவதி நகரிலிருந்து வந்தாள். அவள் அந்திரேய்க்கு ஒரு பொட்டலம் கொண்டு வந்திருந்தாள். திரும்பிச் செல்லும் போது அவள் தாயை நோக்கித்திரும்பி, உவகை நிறைந்த தன் கண்களில் ஒளிபாய்ந்து பளிச்சிட்டு மின்ன, வாய் திறந்து சொன்னாள்:

"தோழரே, போய்வருகிறேன்!"

"சென்று வருக!" என்று சிரிப்புக்கு ஆளாகாமல் பதிலளித்தாள் தாய்.

அந்தப் பெண் வெளியே சென்ற பிறகு, தாய் ஜன்னல் அருகே சென்று நின்றாள்; வசந்த கால மலர்போலப் புதுமையும், வண்ணாத்திப் பூச்சியைப்போல் மென்மையும் பெற்று, சிறு கால்களால் குறுகுறுவென்று தெரு வழியேநடந்து செல்லும் அந்தத் தோழியைப் பார்த்தாள், பார்த்தவாறே தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

"தோழி!" என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள் தாய். "அடி, என் செல்லப் பெண்ணே! உன் வாழ்க்கை முழுவதும் உன்னோடு துணைநின்று உதவ, கடவுள் உனக்கு ஒரு நல்ல உண்மையான தோழனையும் அருள் செய்யட்டும்!"

நகரிலிருந்து வரும் அத்தனை பேரும் ஏதோ பிள்ளைக்குணம் படைத்த பேதைகளைப் போலத் தோன்றியது அவளுக்கு. அதைக் கண்டு மிகுந்த பெரியதனத்தோடு அவள் தன்னுள் சிரித்துக் கொள்வாள். என்றாலும், அவர்கள் கொண்டுள்ள கொள்கை வைராக்கியம் அவளை ஆனந்த வியப்பில் ஆழ்த்தும்; உள்ளத்தைத் தொடும். அந்த வைராக்கியத்தின் ஆழ்ந்த தன்மையும் அவளுக்கு வரவரப் புரியத்தொடங்கியது. நீதியின் வெற்றியைப் பற்றி அவர்கள் காணும் இலட்சியக் கனவுகள் அவளது உள்ளத்தைத் தொட்டு தடவிச் சுகம் கொடுத்தன. அந்தக் கனவு மொழிகளை அவள் கேட்கும் போதுகாரண காரியம் புரியாத ஏதோ ஒரு சோக உணர்ச்சிக்கு அவள் ஆளாகிப் பெருமூச்செறிந்து கொள்வாள். முக்கியமாக, அவர்களது சர்வ சாதாரணமான எளிமையும், தங்களது சொந்த நலன்களில் அவர்கள் காட்டும் அழகான அசட்டை மனப்பான்மையும் அவளை மிகவும் கவர்ந்து விட்டன.

வாழ்கைகயைப் பற்றி அவர்கள் சொல்லியவற்றை பெரும்பாலும் ஏற்கனவே அவள் உணர்ந்து கொண்டிருந்தாள். அவர்கள் தாம் மனித குலத்தின் துயரங்களுக்குரிய உண்மையான பிறப்பிடத்தை, மூலாதாரத்தைக் கண்டுபிடித்தவர்கள் என அவள் உணர்ந்தாள்; எனவே அவர்களது சிந்தனைகளையும் அதன் முடிவுகளையும் அவளும் பெரும்பாலும் ஒப்புக்கொள்ளப் பழகினாள். என்றாலும், அவளது இதயத்தின் அதல பாதாள ஆழத்திலே, அவர்கள் வாழ்கையை மாற்றி அமைத்துவிட முடியும் என்பதையோ, தங்களது இலட்சியத்துக்காக சகல தொழிலாளி மக்களையும் ஒன்று திரட்டி ஒரே சக்தியாகப் பலப்படுத்தி விடுவார்கள் என்பதையோ அவள் நம்பத் துணியவில்லை. இன்றோ ஒவ்வொருவனும் அவனவன் வயிற்றை நிரப்பவே வழி பார்க்கிறான். அந்தப் பிரச்சனையை



நாளைவரை ஒத்திவைப்பதற்குக் கூட எவனும் விரும்பவில்லை.-இதுதான் அவளுக்குத் தெரியும்.

தொலைவும் துயரமும் நிறைந்த இந்தப் பாதையில் அதிகப் பேர் துணிந்து செல்ல ஒப்பமாட்டார்கள். இறுதியாக எய்தப் போகும் அனைத்து மக்களின் சகோதரத்துவ சாம்ராஜ்யம் எல்லோருடைய கண்களுக்கும் தெரிந்துவிடப் போவதில்லை. எனவேதான் அந்த நல்ல மனிதர்கள் எல்லோரும் அவளுக்குக் குழந்தைகளைப் போலத் தோன்றினார்கள். அவர்களது முகத்தில் மீசை தாடிகள் வளர்ந்திருந்த போதிலும் சோர்வினால் களைத்து வாடிய முக பாவம் தெரிந்தாலும் அவளைப் பொறுத்தவரை, அவர்கள் சின்னஞ் சிறார்கள்தாம்.

"அட, என் அருமைக் குஞ்சுகளே!" என்று தலையை அசைத்துக் கொண்டு தனக்குத்தானே நினைத்துக் கொண்டாள் அவள்.

இப்போது அவர்கள் அனைவரும் அருமையான, நேர்மையான தெளிவாற்றல் கொண்ட வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் நன்மை செய்வதைப் பற்றிப் பேசினார்கள்; தங்களுக்குத் தெரிந்த விஷயங்களை பிறருக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற முயற்சியிலும் தங்களைப் பற்றிய கவலையின்றியும் அவர்கள் முன்னேறினார்கள். இம்மாதிரியான வாழ்க்கையை, அதனது ஆபத்தான சூழ்நிலையைக் கூட பொருட்படுத்தாது எப்படி ஒருவர் ஏற்றுக் கொள்ள முடிகிறது என்பதையும் அவள் உணர்ந்து கொண்டாள். தன்னுடைய கடந்த காலத்தின் இருள் செறிந்த வாழ்க்கைப் பாதையை அவள் நினைத்து நினைத்துப் பார்த்து பெருமூச்செறிந்து கொண்டாள். அவளது இதயத்துக்குள்ளே, நான் இந்தப் புதிய வாழ்க்கையில் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றவள் என்ற உணர்ச்சியும் சிறுகச் சிறுக வளர ஆரம்பித்தது. இதற்கு முன்பெல்லாம் தன்னை எவருமே விரும்பவில்லை எனக்கருதினாள் அவள். ஆனால், இப்போதோ எத்தனையோ பேருக்குத் தான் தேவைப்படுவதை அவள் கண்கூடாகப் பார்த்தாள். இந்தப் புதிய இன்பகரமான உணர்ச்சி அவளைத் தலை நிமிர்ந்து நடக்கச் செய்தது.

அவள் தொழிற்சாலைக்குள் துண்டுப் பிரசுரங்களை ஒழுங்காகக் கொண்டு சென்றுகொண்டிருந்தாள்; அப்படிச் செய்வது தன் கடமை என்று கருதினாள். வேவுகாரர்கள் அவளைப் பார்த்துப் பார்த்துப் பழகிப் போனார்கள்; எனவே அவள் மீது அவர்கள் அத்தனை சிரத்தை காட்டவில்லை. எத்தனையோ தடவைகளில் அவர்கள் அவளைச் சோதனை போட்டிருக்கிறார்கள்; ஆனால் அவர்கள் சோதனை போடும் நாளெல்லாம் தொழிற்சாலைக்குள் அந்தப் பிரசுரங்கள் தலைகாட்டிப் பரவித்திரிந்த நாளுக்கு மறுநாளாகவே இருந்து வந்தது. அவளிடம் எந்தவிதமான பிரசுரங்களும் இல்லாத நாட்களில் அவள் வேண்டுமென்றே காவல்காரர்களைத் தன்மீது சந்தேகங் கொள்ளுமாறு தானே தூண்டி விட்டுவிடுவாள்; அவர்கள் அவளைப் பிடித்துச் சோதனை போடுவார்கள். அது தான் சமயம் என்று அவள் அவர்களோடு வாதாடித் தன்னை அவர்கள் இழிவுபடுத்திவிட்டதாகப் பாவனை செய்து கொள்வாள். அவர்களை அவமானப்படுத்தி தனக்கு ஒன்றுமே தெரியாது என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டு அகன்று செல்வாள் அவள். தன்னுடைய சாமர்த்தியத்தை எண்ணித் தனக்குத் தானே பெருமைப் பட்டுக் கொள்வாள். இது அவளுக்கு ஒரு ஆனந்தமயமான விளையாட்டுப்போல இருந்தது.

நிகலாய் வெஸோவ்ஷிகோவை தொழிற் சாலையில் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. உத்திரக்கட்டைகள், விறகு, பலகைகள் முதலியவற்றை ஏற்றுமதி செய்யும் ஒரு மர வியாபாரியிடம் அவன் வேலைக்கு அமர்ந்தான். அநேகமாக ஒவ்வொரு நாளும் அவன் மரங்களைப் பாரமேற்றிக் கொண்டு செல்வதை, தாய் பார்த்துத்தான் வந்தாள். முதலில் நோஞ்சான் பிறவிகளான ஒரு ஜோடிக் கறுத்த குதிரைகள் வரும். அந்தக் குதிரைகள் தமது பஞ்சடைந்து நொந்துபோன கண்களை திருகத் திருக விழித்துக் கொண்டு தலைகளை அசைத்து அசைத்து வரும். உழைப்பினால் ஓய்ந்துபோன அவற்றின் கால்கள் வெடவெடத்து நடுங்கும். குதிரைகளை அடுத்து, பச்சை மரக்கட்டைகளாவது, அறுத்தெடுத்த பலகைகளாவது ஒன்றோடொன்று மோதியவாறு தரையில் தேய்ந்தபடி வந்து கொண்டிருக்கும். அதற்குப் பக்கத்தில் நிகலாய் வருவான். அவனது கைகள் குதிரைகளின் லகானை வெறுமனே பிடித்துக்கொண்டிருக்கும். நிகலாயின் கால்களில் கனத்த பூட்சுகள் இருக்கும். தொப்பி தலைக்குப் பின்னால் தள்ளிப் போயிருக்கும். மேலும் அவனது ஆடையணிகளும் கிழிந்து பழங் கந்தலாய்ப் போயிருக்கும். உடையெல்லாம் ஒரே புழுதி படிந்து, தரைக்குள்ளிருந்து வெட்டி எடுக்கப்பட்ட மண்ணடைந்து அலங்கோலமாய்த் தோன்றும் தடித்த முண்டுக் கட்டையைப் போலத் தோன்றுவான் அவன். அவனும் அந்தக் குதிரைகளைப் போலவே தலையைத் தொங்கப் போட்டு அசைந்தாடிக் கொண்டு தரையையே பார்த்தவாறு செல்வான். அவனது குதிரைகள் கண்மூடித்தனமாக எதிரே வரும் ஆட்கள் மீதாவது வண்டிகள் மீதாவது சாடி விழுந்து தடுமாறும்.

(தொடர்ந்து வரும்.)

# இருள் சூழும் நேரம்

ஒரு கும்பல் மாணவிகள் சிரித்தபடி நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அந்தக் கும்பலின் மத்தியில் அவனது உள்ளம் கவர்ந்த பர்வீன் அன்ன நடையில் போய்க்கொண்டிருந்தாள்.

ஷாமுக்கு அவளது கொடி இடையின் அசைவில் மயக்கமே வந்து விட்டது. ஷாம் திரும்பிப் பார்த்தான். பள்ளிப் புறாக்கள் அந்த இடத்திலிருந்து பறந்து போயிருந்தன.

அதற்குள் சில மாணவர்கள் அருகில் நெருங்கவும்..... அவர்களுடன் சேர்ந்து வகுப்புக்கு நடந்தான்.

வகுப்பில் பாடம் படிப்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும் ஷாமின் சிந்தனை முழுதும் பர்வீனைச் சுற்றியே வட்டமடித்துக் கொண்டிருந்தது.

பர்வீன் ஒரு வனதேவதையாய்.... ஆளை மயக்கும் ஒரு வசீகரமாய்த் தோன்றினாள். அப்படித் தனக்குத் தோன்றுவதைப் பற்றி எண்ணுகையில் அவனுக்கே வேடிக்கையாக இருந்தது.

*அவள்*
*ஒரு*
*இருண்ட*
*இரவுக்கு*
*பவனிவரும்*
*பால்நிலா....!*

ஷாம் அவளது அழகையும், அசைவுகளையும் ஆராய்ந்து கவிதை எழுதவும் கற்றுக் கொண்டான்.

அன்று கல்லூரி விட்டு எல்லோரும் போய்விட்டார்கள். ஷாம் மட்டும் பர்வீனை எதிர்பார்த்து வாசலிலேயே காத்திருந்தான். பர்வீன் தனிமையில் வந்துகொண்டிருந்தாள். அவனுடைய தனிமையை நினைத்துப் பார்த்தவுடன் தன்னைப் போல் அவளும் தனிமையாக வருவதைப் பார்த்து ஆறுதலடைந்தான்.

பர்வீன் அவன் அருகில் நெருங்கியதும், இருவர் பார்வையும் தொட்டுக் கொண்டது. ஷாம் தொண்டையைச் செருமிக் கொண்டான்.

"எக்ஸ்கியூஸ்மி... பர்வீன் நீண்ட நாள் ஒரு எண்ணத்தை மனசில் வைச்சுட்டு உங்களைப் பார்த்துக் கதைக்கத்தான் வந்தேன்."

அவள் வெண்பட்டு இதழ் விரித்து மென்மையாகச் சிரித்தாள்.....

"நான் ஒரு கேள்வி கேட்கலாமா?"

பர்வீன் தலையசைத்தாள்.

"பர்வீன் என்னைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?"

".........."

பர்வீன் அவனையே உறுத்துப் பார்த்தாள். விழிகளில் அவளையுமறியாமல் கண்ணீர்.

அவன்மீது படிந்திருந்த பார்வையை அவசரமாக நகர்த்திக் கொள்கிறாள்.

சற்று நேரம் இமைக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். தலைகுனிந்தபடி பவ்யமாய் திரும்பி நடக்க ஆரம்பித்தாள். அவள் நடந்து செல்வதையே கண் அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தான் ஷாம்.

*ஆகாய நிலாவே...*
*ஆலாபனம் ஏனடி*
*ஆசை முகம் காட்டு*
*ஆலவட்டம் வீச.....!*

பொங்கி வந்த கண்ணீரையும் காதலையும் அடக்கிக் கொண்டு ஷாம் நடந்தான் வீட்டை நோக்கி.

மங்கலான நிலவின் ஒளி அறை எங்கும் கோலம் போட்டிருந்தது. ஷாம் அன்றிரவு முழுக்கத் தூங்கவில்லை. கண்ணை மூடினால் ரவிவர்மா வரைந்த ஓவியம் போல் அவள்தான் கண்ணெதிரே வந்து நிற்கிறாள். ஷாம் பெருமூச்செறிந்தான். கண்ணீர் தளும்பத் தலையணையை எட்டி உதைத்தான்.

'நான் கேட்ட கேள்விக்கு பதிலே கூறாமல் கல்லில் வடித்த சிலைபோல அசையாமல் இருந்தாளே.....சேச்சே..... நாகரிகமே தெரியாதவள்.....' ஷாமின் உதடு தன்னையறியாமலேயே முனகத் தொடங்கியது.

பர்வீனின் எண்ணம் மனதில் குறுகுறுக்க ஆரம்பித்ததிலிருந்து ஷாமுக்கு வேலையே ஓடவில்லை.

*பெண்ணே,*
*துள்ளி விழும்*
*உன் விழிகள்*
*துன்புறுத்தும்*
*தூரிகையா?*
*தூங்கவைக்கும்*
*தூளிகையா...?*

அடுத்த நாள் விடிந்தும் விடியாமலும் கல்லூரிக்கு விரைந்தான். அவளது வருகைக்காய் தனிமையில் வெகுநேரமாய் காத்திருந்தான்.

"எக்ஸ்க்யூஸ்மி..பர்வின் நான் கேட்டதைப் பற்றி என்ன நினைக்கிறீங்க...?"

"ஏன் ஒண்ணுமே பேசாமல் இருக்கிறீங்க?

உங்களுக்கு என்னதான் நேர்ந்திருக்கிறது? ஏன் எல்லாவற்றையும் மூடி மறைக்கணும்? மனதிலிருக்கும் பாரங்களை என்னுடன் பகிர்ந்து கொள்ளக்கூடாதா...?"

அவள் பதில் கூறவில்லை அழுது விட்டாள்.



ஷஹிர்ஷா தாஸிம்-தர்கா நகர்

"உன்னை நினைச்சே எனக்கு பித்தம் பிடித்துவிட்டது தெரியுமா? நான் இனியும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றால் அது உன் முடிவில்தான் இருக்கிறது!"

ஷாமுக்கு கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது. அடக்கிக் கொண்டான்.

முதல் பாடத்துக்கான மணியோசை தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது. அவள் மறுபடியும் புத்தகங்களை மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டு நிலம் பார்த்து மௌனமாக நடந்து போனாள்.

விக்கித்துப் போய் நின்றுவிட்டான் ஷாம்.

ஏன் இவள் இப்படி? என் காதலின் கதறல், ஓலம், ஒப்பாரி, எதையும் பொருட்படுத்தாமல் மௌனமாய்.....?

மறுபடியும் திரும்பத் திரும்ப ஒரு வாரம், இரண்டு வாரம், மூன்று வாரம் என்று யோசித்தான் ஷாம்.

முடிவுக்கு வந்துவிட்டான். வேறு வழி தெரியவில்லை. தீவிரமாக தீர்மானித்து விட்டான். உட்கார்ந்து நீளமாகக் கடிதம் எழுதினான்.

*பெண்ணே!*
*தொட்டுக் கொண்ட*
*உன்*
*விழிகள்*
*தொட்டில் அறுந்த*
*கயிறாய்*
*தொடர்பின்றிப்*
*போனதேன்...?*

ஷாம் சிரித்துக் கொண்டே அழுதான்.

ஒரு வாரத்துக்குப் பின் ஷாம் கடித்தத்தில் எழுதி இருந்ததைப் போன்று இருவரும் கடற்கரையில் சந்தித்துக் கொண்டார்கள்.

ஒரு நிமிடம் மௌனம் நிலவியது. கடல் அலைகள் கரையோடு மோதிக் கொண்டிருந்தன. வானத்தில் வசந்த நிலவு கலங்கி இருந்தது.

பர்வீன் நெளிந்தாள்.

"என்ன ஒண்ணுமே பேசக் காணோம்?" ஷாம் அவளின் மௌனத்தைக் கலைத்தான்.

"என் கடிதத்தைப் படிச்சீங்களா?"

அவள் அரற்றவில்லை. ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. அடம்பிடிக்கவில்லை. அமைதியாகத்தான் நின்றாள்.

பர்வீனின் அமைதி, மௌனம் ஷாமின் மனதைப் பெரிதும் பாதித்து விட்டது. சிறிது நேர மௌனத்தின் பின் பர்வீன் யோசித்து விட்டு பதில் சொன்னாள்.....

"ஷாம் எனக்கும் ஆசைதான். உங்களோடு நெருங்க வேண்டும் உங்களோடு பேச வேண்டும் என்று, எனக்கு எவ்வளவு ஆசை தெரியுமா? என் ஆசையெல்லாம் அடக்கி வைத்துக் கொண்டு வாழ்கிறேன். நான் இப்போது இருக்கும் நிலையில் உங்களோடு நெருங்கிப் பழகுவது ஆபத்தை ஏற்படுத்தும்.

"எங்கள் குடும்பத்தில் மூன்று பெண்கள். நான் மூத்தவள். எங்கள் குடும்பத்தில் ஆண் துணையில்லாததால் அம்மாவின் உறவினர் ஒருவர் எங்கள் அப்பா மாரடைப்பால் இறந்த நேரத்தில் இருந்து எங்கள் குடும்பத்துக்கு உதவிகள் செய்து வருகிறார். அவர் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வரப்போகத் தொடங்கினார். அவர் செய்த உதவிகளுக்கு உபகாரமாக என்னை அவருக்கே கட்டிவைக்கத் தீர்மானித்து விட்டார்கள். இது ஊர் அறிந்த விஷயம்"

இதைக் கேட்டதும் ஷாம் தன்னை மறந்து தன் நிலையை மறந்து முகத்திலும் நெஞ்சத்திலும் மாறி மாறி அடித்துக் கொண்டு அழுது புலம்பினான். அணை கடந்த வெள்ளம் போல் அவன் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

*நான்*
*வளர்த்து நீர்*
*வார்த்த மரம்*
*வேரறுந்து*
*வேட்டையாடப்பட்ட*
*வேடிக்கைதான்*
*என்ன.....*

பர்வீனின் வார்த்தைகளில் தெரிந்த நியாயத்தை உணர்ந்த ஷாம் மெல்லத் தன் விழிகளைத் துடைத்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# தென்னைய வெச்சா இளநீர்

கிண்ணியா சத்தார்



கருப்புக்கும் சிவப்புக்கும் இடைப்பட்ட நிறம்.

கழுத்திலொரு சில்வர் மாலை. காலிரண்டிலும் கொலுசுகள்.

செயினம்பு நீ ரொம்ப அழகு.

நாணம் போதும் ம்...இங்கே உட்காரு.

நான் பெண்களின் கூந்தலில் இயற்கை வாசமிருக்கிறதா என்று ஆராய வேண்டும்.

காசீம் கிழவர் சத்தமாச் சிரித்தார்.

"ஏங்க சிரிக்கிறீங்க?"

செயனம்புக் கிழவி சிரிப்பின் அர்த்தம் கேட்டாள்.

"ஐம்பது வருஷங்கள்!

நேற்று மாதிரியிருக்கு இல்ல செயினம்பு?"

"நீ எனக்கு சோறு தீத்த....நான் உனக்கு சோறு தீத்த..

என் விரலை நீ கடிக்க....உன் விரலை நான் கடிக்க....

கட்டில் தனித்திருக்க நான் உன்னைக் கட்டியணைக்க-

அந்த இனிமையான முதலிரவு ஞாபகம் வந்துட்டும்மா."

கிழவி "போங்க" என்று செல்லமாகக் கிள்ளினாள்.

"அதுசரி செயினம்பு என் வாலிப வைராக்கியத்தை உடைத்தெறிந்த கீழ் உதட்டின் இடதுபுற கருப்பு மச்சமெங்கே?"

சுருக்கமிட்டிருந்த முகத் தோலை விலக்கி அந்த அழகிய மச்சத்தை ஆள் காட்டி விரல் அடையாளம் காட்டியபோது காசீம் ரொம்ப வியந்தார்.

'காலம் இந்த சின்ன மச்சத்தைக் கூட சித்திரவதை பண்ணியிருக்கிறதே' என்றவாறு கண்ணுக்கு ஒரு துளி கண்ணீர் பூசினார்.

"வாலிபம் ஒரு ஐம்பது வருடமாக இருந்திருக்கக் கூடாதா?"

கிழவர் தொண்டை கரகரக்கச் சொன்னார்.

அடுத்த வினாடி கிழவியின் விழிகள் நனைந்து போயிற்று.

"வாலிபத்தை அனுபவிக்காதவன் மடையன்"

இது கிழவியின் தத்துவம்.

"ஏங்க வானம் வெளிச்சிட்டுங்க"

ராத்ரி ஒரு மணியாகும் வரையும் பழைய நினைவுகளில் மூழ்கிக் கிடந்ததால் கிழவர் தட்டியெழுப்பிய பிறகே கண்களைத் திறந்து வாசலுக்கு வந்து வானத்தைப் பார்த்து "அல் ஹம் துலில்லாஹ்" என்று இறைவனைப் புகழ்ந்து கொண்டார்.

□□

மூன்று நாட்களாக விடாது பெய்த கடும் மழையினால் இளநீரையும் தேங்காய் ரொட்டியையும் சாப்பிட்டுப் பசியைத் துரத்தியவர்கள் 'இன்றைக்காவது சோறு சாப்பிடுவோம்' என்னும் ஆர்வத்தில் பிச்சைக்குப் போகத்தயாராகிக் கொண்டிருந் தார்கள்.

வாசலில் நின்ற எழுபத்தி ஐந்து தென்னைகளும் அவர்களை வாழ்த்தி வழியனுப்பி வைத்தன.

காசீம் திடகாத்திரமாகயிக்கும் போது வைத்த நூறு பிள்ளைகளில் இருபத்தி ஐந்து வாடையில் வந்த புயலில் விழுந்து போக மிஞ்சியவைகள்தான் முற்றத்தில் முகம் மலர்ந்து கொண்டிருக்கின்றன. அதனால் தான் காசீமிடம் பிள்ளைகளின் விபரத்தை யாரும் கேட்டால் எழுபத்தி ஐந்து என்று பெருமையாகச் சொல்லி கேட்டவருக்கு கதையைத் தெளிவு படுத்துவார்.

செயினம்புக் கிழவியின் கண்கள் குளமாகிக் கொண்டிருந்தன.

அவளுக்கு வார்த்தைகள் தொண்டையை விட்டும் வெளியே வர மறுத்தன.

கிழவர் தென்னைகளுக்கு மண் குவிப்பதாகவும்; தன்னை நோக்கி நடந்து வருவது போலவும் அவளின் கண்கள் பிரமையானது அழத் தொடங்கினாள் கிழவி.

மூன்று மாசமாயிற்று அவங்க மௌத்தாப்போய்

அன்றைக்கு வந்து போன பிள்ளைங்க இன்றைக்கு வர ஒரு தடவையாவது என்னை வந்து பாக்கலையே! பிள்ளைகளை நொந்து கொண்ட செயினம்பின் ஞாபகம் கொஞ்சம் பழசானது.

அடியே..என்னோட பிள்ளைகளை ஒரு காலத்தில் இந்த உலகமே புகழப் போவுதடி

நிடாலை ஒரு டொக்டராக்குவேன்.

ஜாபீத்தை நேர்மையான மக்கள் தலைவனாக்குவேன்.

ரூஹியை ஒரு பெரிய பாடசாலைக்கே அதிபராக்குவேன்.

ஏங்க வீணாக் கனவு காணுறீங்க. இப்ப கேட்கிற புத்திய இன்னும் கொஞ்சம் வளர்த்திட்டா தூக்கி வீசிடுவாங்க.

போடி பைத்தியக்காரி! எம்பிள் ளைங்கடி.

இவனுகள் ஒரு நாளும் எனக்குத் துரோகம் செய்ய மாட்டாங்கடி.

நமக்கு வயசுபோன காலத்திலே அவங்க காலடியில்தானடி நாமிருவரும் போய் கிடக்கணும்."

என்னங்க நீங்க எப்படியெல்லாம் கனவு கண்டீங்க. அவங்க ஒங்க மையத்துக்குக்கூட தாமதித்த காரணம் சொன்னானுகள்.

நீங்க போனதே நல்லதாப் போயிட்டு. இங்கிருந்து ஊரும் ஒலகமும் நம்மள அனுதாபமாப் பார்க்கிறத நீங்க பார்க்கக் கூடாது.

அதான் ஆண்டவன் ஒங்களை எனக்கு மொத எடுத்திட்டான். பழைய ஞாபகங்களை கிளறி அழுது கொண்டிருந்த செயினம்புக்கிழவியின் கண்கள் முற்றத்தில் வந்து நின்ற காரை நிடாலுடைய கார் என்று இனம் கண்டு மௌனித்தது.

அவன் காரைவிட்டு இறங்கி நேரே உம்மாவை நோக்கி வந்து கொண்டதைப் பார்க்க செயினம்புக்கு ஆத்திரமாக வந்தது. முகம் கருக்க நாலு வார்த்தை கேட்க வேண்டும் என்று தோன்றினாலும் மனசு பித்தானது.

உம்மாவின் அருகில் வந்த நிடால் அழாக்குறையாக மண்டாடினான் "உம்மா எங்க மாமிகூட சின்னச் சண்டை போட்டதாலே அவங்க வீட்டுக்கு வாரத நிறுத்திட்டாங்க.

ஸீபா இப்ப பிள்ளை பெறு மாசமா யிருக்கா. பாவம் அவக்கின்னு வீடு வாசல் செல்வமிருந்தும் கூடப் பொறந்த யாருமில்லாததாலதான்.....

அதான் உம்மா அவ பிள்ள பெறும் வரைக்கும் நீங்க என் வீட்டிலே தங்கி அவவக் கவனிச்சித்தாங்க"

என்று கூறிவிட்டு உம்மாவின் பதிலுக்காக காத்திருந்தவனை நோக்கி செயினம்பு நிதானம் தவறாமல் பேசினாள்.

"தம்பி நான் ஒம் மனைவியை வந்து பார்த்துக்கிறதுலே ஒன்றுமில்ல. ஆனா என்னோட எழுபத்தி ஐந்து பிள்ளைகளும் அனாதையாகிடுமே!" என்றும் எஜமானியின் வார்த்தைகளுக்கு தலைசாய்ப்பது போல் காற்றுடன் கவிதை பேசிக் கொண்டிருந்த தென்னைகளைக் காட்டினாள்.

அப்போது பக்கத்து வீட்டுக் காமினியின் ரேடியோவில் அந்தப் பாடல் சப்தமாக ஒலித்துக்கொண்டிருந்தது.

"பிள்ளையைப் பெத்தாக் கண்ணீரு
தென்.."
கரண்ட் கட்!

# உறவுகள் இல்லையடி பாப்பா...

ரகு கையைப் பிசைந்து கொண்டான். கவலை வந்து மனதைப் பிசைந்தது. மனமெங்கும் இயலாத்தனமான கோபம் வேறு. எரிச்சலாய் யோசித்தான்.

காசு வேண்டும். உடனே வேண்டும். எப்படி? எங்கே? கையிலிருப்பதைப் புரட்டினால் கூட தேறுவது தேவைப் படுவதில் பாதியளவே மீதி?

மீண்டும் வலித்த தலையை கைகளினால் தாங்கியபடி உட்கார்ந்து யோசித்தான். பிஸினஸில் ஈடுபட்டதே தவறோ என யோசித்து மனங் குழம்பினான். மூலதனமாக போட்ட பணம் போக மேலதிகமாகத் தேவைப்படவே மிகுந்த யோசனையின் பின் "உனக்கு மனைவியாக வரப்போகிறவளுக்கு இது மாமியார் பரிசாக ...." என அம்மா சொல்லிவைத்துப் போன நகைகளை வங்கியில் அடகுவைத்து பணம் புரட்டினான். லாபம் வரும். பின் மீட்கலாம் என்ற யோசனை.

லாபம் வந்தது. வந்த கணங்களில் நகைகளை நினைவில் அத்தனை அவசியமானதாகத் தோன்றவில்லை. பிறகு பார்ப்போம் என தோன்றவே வேறு பல விடயங்களில் முதலிட்டான். பிறகு பிறகு என காலங்கள் ஓடிய பிறகு ஒரு நாள்.....

இரவு வரும். பகலும் வரும் என்ற கவிஞரின் வரிகளின் படி நட்டமும் வந்தது. அதிர்ந்தான். பின் நிதானித்து சமாளிக்க முயல்கையில் வங்கியிலிருந்து 'நோட்டீஸ்' வந்தது.

நகைகளைக் குறித்த திகதிக்குள் மீட்காவிட்டால் ஏலம் விடப்போவதாக! கலங்கியே போனான். அப்பாவிடம் சொல்லிப் புலம்பினான். "என்னடா செய்யப் போற? பட்ட காலில் படும், கெட்ட குடியே கெடும் என்பாங்க. சரியாத்தான் இருக்கு. நட்டம் வேற, இது வேற. என்னால என்னதான் செய்ய முடியும்?" என பென்சன் போன அவர் சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறே தன் பாட்டிலே சொல்லிக் கொண்டு புலம்பினார். சோர்ந்து போனான்.

பிறகு அவர் தானாகவே அவனைக் கூப்பிட்டார். "உன் மாமன், மச்சான், பெரியப்பா, சித்தாப்பான்னு நிறையப்பேர் ஓகோன்னு இருக்காங்க. போய் ஏதாவது உதவமுடியுமான்னு கேட்டா எப்படிப்பா? கடனாகக் கேளு திருப்பிக் கொடுத்திடலாம். பரம்பரை நகைகள். ம்.....அவ மட்டும் இன்னைக்கு இருந்தான்னா ரொம்ப வேதனைப்படுவா." இறந்து போன தாயையும் நினைவு படுத்தி வேதனையைக் கூட்டினார்.

தலையைப் பிய்த்துக் கொண்டு குழம்பினான். பின் யோசித்தான். அப்பா சொன்னது சரியெனப் பட்டது. அதாவது உறவுகளிடம் உதவி கேட்பதுதான். ஆறுதலாக உட்கார்ந்து பத்திரிகை புரட்டியபடி மாமா. தயங்கியபடி போனான். அமர்க்களமாக வரவேற்றார். நாட்டைப் பற்றியும் உலகைப் பற்றியும் கதைத்து முடித்த அவரிடம் மெதுவாய் தன் நிலைமை பற்றி சொன்னான். உடனே அமைதியானார். யோசித்தார். தலையைச் சொறிந்தார். பத்திரிகையை நன்றாக மடித்து வைத்தார். பின்-

"ம்....ரொம்ப வருத்தமாத்தான் இருக்கப்பா. ஆனா என்கிட்ட ஒரு சல்லிக் காசுகூட கிடையாது. புதுசா ஒரு புடவைக் கடை எடுத்தேன் இல்லையோ அதில ரொம்ப நட்டம்பா. கையக் கடிச்சுட்டுது.



.... இருந்தா தராமலா இருப்பேன் நான்." ரகு எழுந்து கொண்டான். "பரவாயில்லை மாமா." அவனுக்குத் தெரியும். அவரின் கடையில் எப்படி, எத்தனை லட்சங்கள் லாபம் வருகின்றதென. இன்றைய தேதியில் கூட ஒரு லட்சம் வங்கிச் சேமிப்பில் இடவென அவர் வைத்திருப்பதும் தெரியும். தெரிந்தும் பயன்?

பெரியப்பா மாமாவைவிட மோசம். "உன் அம்மா இருந்த காலங்கள்ல ரொம்பத்தான் அலட்டிக்கிட்டா என்னவோ பெரிய்ய பரம்பரை நகைகள் பூராவும் அவ எடுத்துக்கிட்டா. அதுல அவ தங்கச்சிக்கும் பங்கிருந்ததாகச் சொல்வாங்க. அதான்.....நெருப்பு..... அவ தங்கச்சியோட மன நெருப்பு." கரித்துக் கொட்டினார்.

ஆவேசமானான்."பெரிப்பா.....அளந்து பேசுங்க. செத்துப் போனவங்களப் பத்தி சும்மா பழி சுமத்தாதீங்க. அம்மாவுக்கு சேரவேண்டியதுதான் சேர்ந்திருக்கு. சித்திக்குச் சேர வேண்டிய சொத்துக்களும் சரியா அவங்களுக்குச் சேர்ந்திருக்கு. யாரோ சொன்னாங்க.... சொல்றாங்கன்னு உங்க மனப்புகைச்சல..... பொறாமை விஷத்தக் கக்காதீங்க.....வர்றேன்." வெளியேறினான்.

'சீ... என்னடா உலகம்' என மனம் சலித்துப் போயிற்று. போனால் போகிறது என சித்தப்பா வீட்டுக்குப் போனான்.

"அவர்கிட்ட காசில்லப்பா. வேணும்னா யார்கிட்டாச்சும் புரட்டித்தரலாம். ஆனா நீ சொல்ற திகதியில திருப்பித் தருவேன்கிறது என்ன நிச்சயம்? உன் பிஸினஸ் வேற நட்டத்தில ஓடுது. அது வேற.... லாபம் வந்த நேரங்கள்ள அக்காட நகைகளை நீ திருப்பியிருக்கலாம். அதுவும் இல்ல..... சித்தியே சொல்லிக் கொண்டு போனாள். சித்தப்பா மௌனமாயிருந்தார். முகத்தில் ஓர் பரிதாபம் பிரதிபலித்தது. பெண்டாட்டி ராஜ்ஜியத்தில் அவர் ஓர் பணிவான குடிமகன்.

மனசு கசந்தது. அவனும் மௌனமாகவே விடை பெற்றான். உலகமே வெறுப்பாயிற்று. 'மன்னித்துக் கொள் அம்மா' என இறைவனடி சேர்ந்து விட்ட தாயை எண்ணி மானசீகமாக மன்னிப்பை வேண்டி நின்றான். அப்பா பெருமூச்சொன்றை வெளியிட்டார். அவரது மௌனத்திலே ஆயிரம் சோகம்.

"ஹேய்.....ரகு ...... எப்படியிருக்கே...?" நடுவீதியில் யாரோ உரத்து குசலம் விசாரிக்கவே வியந்து திரும்பினான்.

"நான் தாண்டா உன்னோட தோஸ்த்து ராஜா. என்ன? அடையாளம் கண்டுபிடிக்க முடியல்லியா? ம்....நெனச்சேன். முந்தி ஓமக்குச்சி போலிருந்த யான் இப்போ உசிலை மணியாட்டம் இருக்கேன்னா.... காரணம் யாவும் அந்த அராபிய நாட்டு சாப்பாட்டு வளத்தைச் சொல்லணும்." அவனாக அறிமுகப்படுத்திக் கொண்ட பின்னரே ரகுவுக்கு ஞாபகம் வந்தது. தொழில் பல செய்து கடைசியில் எதுவும் சரிவராது

ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி.

என கைகழுவி விட்டு அராபிய நாடு போனவன் போன பின் ரகுவுக்கு அவனை மறந்தே போய்விட்டது.

ரகு அவனை வீட்டுக்கு கூட்டிப் போனான். கதைகள் பல கதைத்தார்கள். ரகுவின் சோகம் ராஜாவுக்கு எப்படியோ புரிந்து போயிற்று. கேட்டான். சொல்ல வில்லை. மீண்டும்....மீண்டும் துளைத்தான். ரகு சொல்லவேயில்லை. ரகுவின் அப்பா சொல்லிவிட ராஜா மௌனித்து பின் சிரித்தான். பின் என்ன? அவன் கொண்டுவந்த பணத்தில் தேவை யானளவு ரகுவுக்கு கொடுத்தான். அவன் மறுக்கவே. "கடனாத் தர்ரேன்....முடியும் போது திருப்பித்தா....." என்றான். சொத்தில் பங்குகள் கேட்பவனல்லன் சொந்தக் காரன். துன்பத்தில் தோள் கொடுத்து உதவும் நண்பன் கூட உற்ற சொந்தமே......என ரகு உணர்ந்து பின் தெளிந்தான்.

# 'குடை'



கிண்ணியா அமீரலி

குடையைக் கையில் எடுக்கும் அவ்வப்போதைய அடை மழைகளில்..இருவர் ஞாபகத்துக்கு வருவார்கள் அதன் துளிகளில்....

ஒருவர்-எங்களூர் எஸ்ஸெஸ் பாவா. கவியோடு குடை கட்டும் வரகவி.

'எம்.பீ! நீ எனக்கு முறைக்குத் தம்பீ! நான் உன்னை நம்பி....வெய்யிலில் கிடந்து வெம்பி...இப்போது கட்டுறன் குடைக் கம்பி....'- என்று மூதூர்த் தொகுதி முன்னாள் எம்.பீ.மர்ஹூம் அப்துல் மஜீது அவர்களிடம் 'வேலை' கேட்ட விகடகவி.

ஒரு சிங்கள மதத் தோழருக்குக் குடை கட்டிக் கொடுத்தபோது- 'ஹொந்தநே' என்றாராம் அவர்.

"ம்...ஒனக்கும் குடை கட்ட வந்தனே".
என்றாராம் இவர்.

குடையை மடக்க.... எனக்கு வரும்-

அடுத்த ஞாபகஸ்தர். கவிஞர் கலைவாதி கலீல்.

"ஆங்கிலத்தில் 'அம்ப்றள்ளா' என்று குடைக்கு ஏன் பெயர் வந்தது?" என்று தமிழில் கேட்டார் என்னிடம்.

'தெரியாது....' என நான் காது 'குடை'ய- அம்ப்றள்ளாவை மொழி பெயர்த்தார் கலைவாதி:

'அம்ப்றள்ளா'...அவசரத்திற்கு 'அம்புர்றல்லா' (அகப்படுவதில்லை) அது தான்-அம்ப்றள்ளா.அம்புர்றல்ல'-உச்சரித்துச் சரித்துச் சிரித்தேன்.

எஸ்ஸெஸ் பாவாவையும் கலைவாதியை யும் ஞாபகித்ததால்.....குடை ஞாபகம் மறந்தே போய் விட்டது.

ஆ...ஞாபகம் வந்திருச்சி...

('ஜோடி நீ சின்ன ராணி' என்று பாடி விடாதீங்கோ)

எம். (எமது) சுரேஷாருக்கு 'மழை' வந்தால் -அமீரலி 'குடை' பிடிக்கக் கூடாதோ?

(தினமுரசின் ஆயுட்கால அபிமானிகள் அன்று பெய்த 'மழை'யில் நனைந்திருந்தால்....அவசியம் புரியும்!)

சரி, குடையை எடுத்துக் கொண்டு போக வந்த வி(ஜ)ஷயத்துக்கு வருகிறேன்.

நேற்றிலிருந்து மழை. மளமளன்னு மழை.

பூக்களுக்கு ஜலதோசம்.

என் மனைவி பிந்தாள் (பானு) உடுப்பெடுத்தாள். எல்லோரும் பெருநாளைக்கு உடுப்பெடுப்பாங்க. என் பானு மழை வந்தாலும் உடுப்பெடுப்பா. ('கொடி'யில் காயப் போட்டதை)

மழை. இன்றும் நேற்றைய தொடர்ச்சி... நல்ல மழை.

எங்கள் நஸீம் அங்கிளுக்கு 'வானம் மொங்குது'ன்னு பயம் கொடுக்கிற மழை. (மொங்குது-வெங்குதா? சொறி... மொங்குது- முழங்குது. நஸீம் அங்கிளுக்கு ரெண்டு வயது. வெங்குதா...?)

'சப்ஜெக்டுக்கு வாய்யா...சப்ஜெக்டுக்கு வாய்யா'ன்னு சில தங்கவேலர்கள் கத்துறது..இலேசாக் கேட்டிச்சு. இதோ குடை.

"எதை வேண்டும் என்றாலும் இரவல் கொடுக்கலாம். ஆனால்-சைக்கிளையும் குடையையும் மட்டும் இரவல் கொடுக்கவே கூடாது."-தகவல் இரவல்.

நல்லது. கதைக்கு வருகிறேன்.

குடை="அரசச்சின்னத்தொன்று; உடைவெல்; உட்டுளைப்பொருள்; கவிதை; மிதியடி முதலியவற்றின் குமிழ்; அரசாட்சி; குடைக்கூத்து; வேல்; அரி; கடை; துளை; வதை; உட்புகு; துருவு வேலமரம்; மனதை வருத்து."

இவைகள்-'குடை'க்கு அகராதியில் நான் கண்ட சில கருத்துக்கள்.

சும்மா என் குடை பிரயோசனமே இல்லை என்பீர்களே...அதுதான். சிலவேளை தினமுரசத்தாரே 'குடை'யைப் போட்டுக் குடையக் கூடும் கழுத்தறுப்புப் போட்டியில் சொறி...குறுக்கெழுத்துப் போட்டியில்.

குடையை இரவல் கொடுக்கக் கூடாது என்று சொன்னேன் அல்லவா..போன வாரம் ஒரு நண்பருக்குக் (குடை) 'கொடை' கொடுத்தேன்.

அடை மழை பெய்து கொண்டே இருக்கிறது..இலங்கைப் பிரச்சனையைப் போல..!

குடையைக் கொண்டுபோன என் நண்பரைக் காணோம்..

ஆகவே-இத்தால் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றால்...

எதை இரவல் கொடுத்தாலும் குடையை மட்டும் கொடை கொடுக்கவே கொடுக்காதீர்கள்-திரும்பக் கிடைக்குமா என்பதே சந்தேகம்-சமாதானத்தைப் போல.

இத்துடன் 'குடை' மடக்கம்.

வணக்கம்.



படிப்பகம்

www.padippakam.com



# அவள் சொன்ன பொருள்

## தருவது ரசிகன்



## இலக்கிய நயம்

**கா**லையில்தான் வந்தான் காளை. போர்க்களத்தில் கடமை முடியும்வரை நினைத்தாலே நெஞ்சினிக்கும் ஆசைக்கு போட்டு வைத்திருந்தான் அரணை!

இல்லத்துக்கு வந்தவுடன், எண்ண மென்னும் தேன்கூட்டில் சுமந்து வந்த ஆசைக் குழவியெல்லாம் குத்தி உடைத்தது அந்த அரணை.

காத்திருந்து தேக்கிவைத்த மோக மெல்லாம் அவள் முகத்தில், அந்த மோக முகத்தை கரத்தில் அள்ளி தாகம் தீரத் துடித்த உதட்டால் தேன் அருவி இதழ்களில் தேன் மொண்டு குடித்தான் காளை!

"வந்ததும் அவசரமா?"

என்றாள் வட்டமுக கட்டழகி.

"வந்ததே அவசரத்தில்தானே!"

என்றான், கன்னத்தில் உதட்டால் ஊர்ந்து சென்று, அவள் காதுக்குள்!

"இந்த அவசரம் இல்லையென்றால் இன்னும் தாமதமாய் வந்திருப்பீர்களாக்கும்."

"இல்லையில்லை....."

"என்ன, இல்லையில்லை, வாள் ஏந்திவிட்டால் போதும் மற்றதெல்லாம் உங்களுக்கு மறந்துதான் போகும்."

"அங்கே வாள் ஓசைதானே செவிக்கு சுவை."

"இங்கே?"

"உன் வளையோசைதான் செவிக்குள் மழை."

"பொய்!"

"மெய் என்று நீ நம்ப நான் என்ன செய்ய வேண்டும்?"

"சற்றே விலகியிரும் பிள்ளாய்! அது போதும்."

"தீண்டாதே என்று சொல்வதைவிட சிரச்சேதம் செய்துவிடு. அது இனிது, தினவெடுக்கும் தேகத்துக்கு உயிர் இன்றிப் போனால்தான் நிலவுன்னை தீண்டும் நிறையாசை மறைந்தழியும்"

அவனை இறுக்கி நெற்றியில் இதழ் பதித்து முத்தமிட்டு, அவன் விழிகளில் இதழ்களால் ஒத்தடம் கொடுத்தாள்.

கனி மரத்தில் சாய்ந்தவன் பசி தீர்க்க நினைப்பதில் வியப்பென்ன? நினைத்தான்; முகம் சரித்து மூச்சு விட்டான். பழுத்திருந்த கனிகளுக்கு வெப்பம் பட்டு வியர்த்தது.

"வேண்டாம் இப்போது..."

தழுதழுத்தது தோகையின் குரல். தவிப்பு அங்கும் இருந்தது. அதனால்தான் குரல் தழு, தழுத்தது.

"மாமரத்துக் கனிகள் என்றால் கொய்து சென்று தாமதித்துப் புசிக்கலாம். மங்கையுடல் கனிகளை கொய்து செல்ல முடியாதே, அதனால்-சமயம் கிடைக்கும் போது தானே இன்பச் சத்தான சுவை அறியலாம்."

குறும்பன் அவன் குனிந்த முகம் நிமிர்த்தாமல் உதடுகளை அசைத்துப் பேசினான். உதடுகள் அசைந்தபோது அவள் பட்ட அவஸ்தைக்கு பொருள் சொல்ல வார்த்தையில்லை.

நெளிந்தாள் கூச்சத்தால், அது அவன் குறுவாள் மீசை செய்த விஷமத்தால் விளைந்த கூச்சம்.

"முதலில் வயிறார உணவு, விடுங்கள் அத்தான் என்னை, வேலை இருக்கிறது உள்ளே!"

"நீ உள்ளே போனால் எனக்கென்ன வேலை இருக்கிறது இங்கே?"

"ஆளைப் பார், வஞ்சிரமீன் குழம்பாக்க வேண்டும். கொஞ்சுவதற்கு இதுவல்ல நேரம்!"

"வஞ்சிர மீன் ஆசைதான் எனக்கும். ஆனால் அதைவிட ஆசை இந்த வஞ்சியின் மேல் எனக்கு!"

கனியிரண்டில் குறிவைத்து புரண்ட அவன் முகம் தூக்கி, நோகாமல் தள்ளிவிட்டு, துள்ளிஓடி உள்ளே போனாள் தோகை.

கொடுங்களத்தில் நாடிழந்து, தன்படை அழிந்து நிற்கும் ஒரு மன்னன் போல, கன்னியவள் ஓடி விட, நெஞ்சைக் கிள்ளிக்கொண்டிருக்கும் ஆசையோடு தவித்து நின்றான் காளை.

□□

**சூ**ரியன் ஆட்சியில் சுடுகளமான வானம் நிலவின் ஆட்சியில் நிம்மதியாக இருந்தது.

நிலவுக்கு துகில் அணிந்து பார்ப்பதும், பின் துகிலை விலக்கி நிலவை ரசிப்பதுமாக மேகம் விளையாடிக் கொண்டிருந்தது.

"பார் அந்த நிலவை, மேகக் காதலன் செய்யும் குறும்பையெல்லாம் தடுக்காமல் அன்றோ ரசித்துக்கொண்டிருக்கிறது."

என்றான் காளை. இதழ் சுளித்து அவனைப் பழித்தாள் பாவை.

"இயற்கைக் காட்சியைக் காட்டி உங்கள் செய்கைக்கு சாட்சி தேடவேண்டாம்."

என்றாள் தேவதை, செந்தேன் இதழால் செந்தமிழ் மொழியில்!

அவனோ சளைத்தவன். வாள்வீச்சில் மட்டுமல்ல, அவன் வாய் வீச்சிலும் கெட்டிக்காரனல்லவா, அதனால் தமிழை மழையாய்க் கொட்டினான்;

"இயற்கையைப் பார்த்தேன் அங்கும் உன் எழில் உருவம்."

"மயக்கத்தில் பார்த்திருப்பீர்கள்."

"இல்லையடி, உன்னோடு கொண்ட மனநெருக்கத்தில் பார்த்தேன். கண்டதெல்லாம் நீயாகிப்போகிறாய். கரை காணா இன்பக் கடல், தளிர் மேனி இந்த உடல், இனி தடை சொல்லாதே, என் மனம் தாங்காதே!"

"வாழைத்தண்டுகளில் கரம் தொட்டான். அந்தக் கரம் மீது கரம் வைத்து மூடியபடி கேட்டாள்,

"என்ன வேண்டும்?"

"சொல்லவா?"

"....ம்."

"தேன் வேண்டும்-செவ்விளநீர் வேண்டும். தோள் வேண்டும், அங்கு என் முகம் தூங்க வேண்டும். தூங்கும் போதும் இனிப்பதற்கு தொங்கு மாங்கனிகள் நீ தரவேண்டும். மொத்தமாகச் சொல்வதென்றால் நீ வேண்டும்."

வெட்கத்தில் முகம் குனிந்து அவன் மார்புக்குள் புதைத்து மறைத்தாள்.

"எனக்கொரு சந்தேகம்?"

"என்ன..?"

"மதிவதனம் சிவக்கும் போது மறைத்துக் கொள்ள என் மார்புதான் உனக்கு வசதியோ?"

"திருவள்ளுவரைக் கேளுங்கள் அவர் சொல்வார் இதற்கு விடை!"

காளைக்குள் குழப்பம்.

"நீயே சொல், கற்றுத் தருவது நீயாக இருந்தால் அதிலுள்ள களிப்புக்கு நிகரேது சொல்லு, அதனால் நீயே அந்தக் குறள் எது சொல்லு"

**"இளித்தக்க இன்னா செயினும்**
**-களித்தார்க்குக்**
**கள்ளற்றே கள்வநின் மார்பு"**

குறள் சொன்னாள், அவன் அதன் பொருள் தேடிப்பார்த்தான்.

'இழிவு வரும் துன்பங்கள் கள் உண்டால் வந்து சேரும். ஆனாலும் கள் உண்டவர்கள் வெறி கொள் கள்மீது கொள்ளும் விருப்பம் குறைவதே இல்லை. கள்வா, உன் மார்பும் அந்தக் கள் போலத்தான்,

பொருள் உணர்ந்தான், பொற்தாமரையை தன் மார்போடு மேலும் இறுக்கிக் கொண்டான்.

கலக்கம் வரும்போதும், கலவி மயக்கம் வரும்போதும் தம் காதலர் மார்பில் முகம் புதைத்துக் கொள்கிறார்களே பெண்கள். அது ஏன் என்று ஆராய்ந்து திருவள்ளுவர் சொன்ன பொருள் என்றென்றும் பொருத்தம்தான் என்றுணர்ந்தான் காளை.

திருவள்ளுவருக்கு ஒரு பாராட்டு சொன்னான் மனதுக்குள்.

மறு நொடியே ஒரு குறும்பு சொன்னான் மங்கையவள் காதுக்குள்,

"நெஞ்சு வியர்க்கிறது நீ விடும் பெருமூச்சால்! நெஞ்சு வியர்ப்பதால் நெற்றி சுடுகிறது. மோகத்தில் தானும் வியர்க்க வேண்டுமன்றோ அதனால்! நெற்றி வியர்க்க வேண்டுமானால் யாருக்கு வெற்றியென்று கண்டறிய ஒரு களம் விரியட்டும் உடனே! அது என்ன களம்?"

அவள் விடை சொல்லவில்லை. அவன் இனி வினாவே தொடுக்க முடியாமல் அவன் உதடுகளுக்கு வேறு பணி கொடுத்தாள். கசக்குமோ காளைக்கு?

□□

-இடையில் இடம்பெற்ற குறள்-
அதிகாரம்- 129
பாடல்-1288

## சிந்தியா பதில்கள்

கை நிறைய சம்பாதிக்க என்ன செய்யலாம்?

என்.பி. ஆஸாட்-வறக்காமுற

கிடைக்கும் ஊதியம் நோட்டாக கிடைத்தால் சின்ன சின்ன சில்லறையாக்கிப் பாரும். கை கொள்ளாது.

□□

எம்.ஜி.ஆர்.மீண்டும் பிறந்தால் எப்படியிருக்கும்?

எஸ்.ரஞ்ஜித்குமார்-தெணியாய.

ஜெயலலிதாவை பத்திரமாக தூக்கிப் போய் ஒளித்துவிடுவார்.

□□

திருமணத்தின் பின் இம்ரானின் அரசியல் ஆசை எந்தளவில் நிறைவேறும்?

ஏ.ஜே.எம்.தௌபீக்-ஹொறொவபொதானை.

புது மாப்பிளைக்கு அந்த ஆசைக்கெல்லாம் இப்போது ஏது நேரம்? நேரம் காலம் தெரியாத ஆளாக இருக்கிறீர் தொளபீக்!



...ின் மனைவி

□□

அன்பான கணவன்-மனைவியிடத்தில் இருக்க வேண்டியது எது? இருக்கக் கூடாதது எது?

திருமதி வவீ மோகன்-மட்டக்களப்பு

### இலகுவாக கிடைப்பது எது?

ஒற்றுமை இருக்க வேண்டியது என்பதால், ஒருவருக்கொருவர் ஒற்றறியும் சந்தேகம் இருக்கக்கூடாது.

□□

இலங்கையில் சர்வாதிகார ஆட்சி வந்தால் எப்படி இருக்கும்? எங்கே பார்ப்போம் கற்பனையை?

எம்.யோகானந்த்-நுவரெலியா.

அப்படி வந்தபின்னர் ஜனநாயகம் வந்தால் எப்படியிருக்கும் என்று நீர் கேட்க நினைப்பீர். ஆனால் கேட்க மாட்டீர். மூச்!

□□

தற்போது நம் நாட்டு மக்களுக்கு இலகுவாகக் கிடைப்பது எது?

எச்.எம்.எம்.மஸ்னவி-புத்தளம்.

வதந்தி!

□□

எனக்கு அமெரிக்கா போவதற்கு சான்ஸ் கிடைத்து விட்டது. தங்கள் அறிவுரை?

எம்.லன்பர்-கின்னியா

அறம் செய்ய விரும்பு, ஆறுவது சினம் என்று சொல்ல நான் ஒன்றும் ஔவைப் பாட்டியல்ல ஸன்பர். உமக்கு வாழ்த்துக்கள். சொய்.....ய்.....ங்... பறந்து சென்று சிறந்து வருக. அல்லது அங்கேயே சிற்றிசனாகுக!

□□

உரையாடும் பொதெல்லாம் இரட்டை அர்த்தத்தில் பேசுபவர்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம்?

ரி.மதுரா-ஹட்டன்.

சிலருக்குப் பிடிக்கும். சிலருக்குக் கடிக்கும். பிடிக்காவிட்டால் பிடிக்காத உரையாடலை நீர் தவிர்க்கலாமே. இரட்டை அர்த்தத்தில் ரசிக்கக் கூடியவையும் உண்டு. உதாரணத்திற்கு "'விளக்குமாறா' கேட்கிறாய்?" இதில் அர்த்தம் இரண்டு. யோசித்துப்பாரும், புரியும்.

□□

ஆண்களுக்கு மீசை அழகென்றால் பெண்களுக்கு....?

க.சுதர்சன்-செங்கலடி.

மீசை இல்லாமல் இருப்பது. ஹி.ஹி.ஹி.

□□

சிந்தியா! வர வர வாழ்க்கை வெறுக்கின்றது; என்ன செய்யலாம்?

எஸ்.விஜயன்-அக்கரைப்பற்று-7

வெறுக்காதமாதிரி ஏதாவது செய்யலாமே.

□□

இடைக்கால நிர்வாகம் பற்றி என்ன நினைக்கிறீர்?

ஏ.அல்பிறட்-மட்டக்களப்பு

வரட்டும், வந்த பின்னர் பார்த்துக் கொள்ளலாம். பொதுவாக சொல்வதானால், மத்தியில் உள்ளவர்களிடம் உரியதைக் கொடுப்பதில் தயக்கமில்லாவிட்டால் பிணக்குகள் இருக்காது நிர்வாக விடயத்தில் மட்டுமல்ல, நாட்டு நிலவர விடயத்திலும் கவனிக்க வேண்டியது அதுதான்.

□□

டியர் சிந்தியா! மனதைத் தொட்ட புதுக் கவிதை ஒன்று?

கலைநேசன் ஜவாத்-புத்தளம்.

**பதவியிருந்தால் சுமங்கலி**
**பதவி போனால் விதவை**
**அரசியல்வாதி!** (எழுதியவர் பெயர் மறந்து போச்சு)

□□

படித்துப் பட்டம் பெற்று பல இலட்சம் சீதனம் வாங்கும் ஆண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஏ.ஏ.எம்.இக்ரம்-கல்ஹின்ன

'கல்வி உயர கரன்ஸி உயரும்' என்று தெரிந்த புத்திசாலி வியாபாரிகள்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-107

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | ■ | 3 |
| | ■ | ■ | | ■ | 4 | |
| 5 | 6 | | | | ■ | |
| | | ■ | | ■ | 7 | |
| ■ | | ■ | ■ | 8 | | |
| 9 | | | | | | ■ |
| ■ | | ■ | 10 | | | |

### இடமிருந்து வலம்

01. வம்சம் என்றும் சொல்வார்கள்.
04. இது கோவில்களில் இருக்கும்.
05. இதைக் குடிக்க முடியாது.
08. நமது உடலில் உள்ள இரத்தக் குழாய்.
09. சில நாடுகளில் இந்தத் தண்டனை இன்றும் நடைமுறையில் உள்ளது.
10. சந்திரனை இப்படியும் அழைக்கலாம்.

### மேலிருந்து கீழ்

01. இந்தியாவில் உள்ள முக்கிய நகரங்களில் ஒன்று.
02. இதன் மூலம் ஆற்றைக் கடக்கலாம்.
03. பட்டிமன்றங்களில் இது நடக்கும்.
06. மனைவியை இழந்துள்ளார் இவர்.
07. தூங்குபவனையும் தீவிரவாதியாக்கும் இது ஒரு நோய் காவி.
08. புல்லாங்குழலில் இருந்தும் இது வரும்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 08.07.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-107
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-105ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 உ | ழு | ந் | 2 து | ■ | 3 ச | 4 கா |
| த் | ■ | ■ | 5 வா | ன | ர | ர் |
| 6 த | ரா | 7 த | ர | ம் | ■ | த் |
| ர | ■ | த் | கை | ■ | 8 வெ | தி |
| வு | ■ | து | ■ | 9 கொ | ள் | கை |
| ■ | 10 யு | வ | ■ | ■ | ள | ■ |
| 11 சு | ய | ம் | வ | ர | ம் | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 105இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.**

1. செல்வி. பி.வேஜினியா, கொழும்பு-13
2. கே. ஜெயக்குமார், நீர்கொழும்பு.
3. ரி. மஞ்சுளா, இரத்தினபுரி.
4. செல்வி. எம்.எஸ். நூர்ஜகான், திருமலை.
5. எம். ரம்ழான், வட்டவளை.
6. திருமதி. சுகந்தி மனோகரன், கல்முனை.
7. எஸ். மோகன் ராஜ், கண்டி.
8. சிராஜ் முஹம்மட், கொலன்னாவ.
9. திருமதி. ஜே. எமில்டா, தெஹிவளை.
10. ஏ.எம். றமீஸ், நாவலப்பிட்டி.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.



படிப்பகம்

www.padippakam.com



# ஒரு தேவி என்னைத் தேடுகிறாள்

6

திகில் கதை மன்னன் ராஜேந்திரகுமார்

**பா**ர்ட்டி ஹோல் களை கட்டியிருந்தது. நிறைய நண்பர்கள்- பிராந்தி கோப்பைகளை 'கிளிங்' என்று தட்டினார்கள்.

மனநோயாளிகளுடன் வந்தவர்கள் கவனமாக அவர்களைப் பாதுகாக்கிற சாக்கில் கோழிக்கறியாக தின்றார்கள்.

கொஞ்சம் முற்றின கேஸ். 'மனிதக் கறி கிடைக்குமா?' என்று கேட்டு 'ஹிஹி ஹிஹி' என்று சிரித்தது.

நடுவில் சுற்றிச் சுற்றி வந்தாள் மெர்லின். சினேகிதர்களுக்கு நிறைய 'ஹாய்' சொன்னாள். நோயாளிகளிடம் விசாரித்தாள். 'போனவாரம் ஷாக் ட்ரீட் மெண்டுக்குப் போனீயா?' என்று தொட-

அந்த ஆள் நிஜமாகவே ஷாக் அடித்தது போல துள்ளினான்.

"என் அழகு அவ்வளவு தூரம் உன்னைப் பாதிக்கிறதா?" என்று கேட்டு பெருமையுடன் நிமிர்ந்து-

"இல்லே பயமுறுத்தறது" என்று அவன் சொன்னதும் துவண்டாள். அவசரமாக நகர்ந்தாள்.

நான் அந்த தேவியையே பார்த்தேன். அவள் ஆவலும் ஒருவித சோகமுமாக பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வையில்-எதிர்பார்ப்பு இருந்த அதே அளவு ஆவலுமிருந்தது.

சுற்றிச் சுற்றி வந்தாள்.

அவளை அழைத்து மைக்குக்குப் போனேன். 'ப்ரெண்ட்ஸ் மே ஐ ஹாவ் யுவர் அட்டெண்ஷன் ப்ளீஸ்' என்று ஆங்கிலத்தில் ஆரம்பித்து தமிழில் தொடர்ந்தேன். "இந்த இளம் பெண்ணைச் சந்தியுங்கள்! மிஸ். தேவி! இவள் ஒரு குறிப்பிட்ட நபரைத் தேடுகிறாள். அந்த நபர் இந்தக் கூட்டத்திலுமிருக்கலாம். அந்த நபருக்குச் சொல்லிக் கொள்ளுவேன். 'ஒரு தேவி என்னைத் தேடுகிறாள்!' இதற்காக நீங்கள் எந்தச் சிரமமும் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை."

இவள் கொஞ்ச நேரம் உங்களுக்கு முழுக்கதையைச் சொல்லுவாள். அதைக் கேட்டாலே போதும். அவள் தேடும் நபர் அவளுக்குக் கிடைத்து விடுவார்.

அவளை என் எதிரே இழுத்தேன். "மீட். மிஸ். தேவி"

போதை நிரம்பிய கூச்சல் எழுந்தது.

ஒரு மனநோயாளி 'இன்னாடி மினியம்மா' பாடியது.

போதையுடன் சினேகித வாலிபன், "நான் தான் நீ தேடுகிற ஆள்" என்று மேடையருகே. சட்டென்று "ஒரு தேதி கொடேன். ஐ லவ் யூ" என்றான்.

சிரித்துக் கொண்டே மறுக்கவே-

"அழகான பெண்களுக்கே திமிர் அதிகம்" என்று திட்டிக் கொண்டே போனான். "வெட்டணும் அவங்களை."

நான் தேவியைப் பார்த்தேன். அவள் சிரிப்பாலேயே அலட்சியப்படுத்தினாள்.

"நண்பர்களே! நான் சொல்லும் இந்தக் கதை நூறு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த உண்மைக் கதை."

"ஏய்! சரித்திரக் கதையா?"

"இல்லே நடந்த கதை. சம்பந்தப் பட்டவரே சொன்ன கதை."

"யார் அவர்?"

"லூசி என்ற பிரிடிஷ் பெண்"

"இங்கே வந்திருக்கிறாரா? என்ற சலசலப்பு ஓசை-

"ஆமாம் வந்திருக்கிறார்" என்றதும், சட்டென்று ஓய்ந்தது.

கொஞ்ச நேரம் கண்களை மூடி சட்டென்று விழித்துத் திறந்து சுற்றிலும் பார்த்த ஒரு பார்வையின் பாதிப்பினால்-

கூட்டம் வசியப்படுத்தப்பட்டது போல அமைதிகாத்தது.

அவளையே பார்த்தார்கள்.

"நீங்கள் உங்கள் மனதிலுள்ள மற்ற உல்லாசங்களை மறந்து முழுவதுமாக என் வசப்படுகிறீர்கள். நான் மட்டும் உங்கள் பார்வைக்குத் தெரிகிறேன். என் குரலை மட்டுமே நீங்கள் கேட்கிறீர்கள். மற்றவை அனைத்தும் உங்களால் மறக்கப்படும்.

கவனியுங்கள்! இன்றைக்கு சரியாக



நூறு வருஷத்துக்கு முன்னால் வனப்பு மிகுந்த கேரளத்தின் சூழ்நிலையில் -

அந்தக் குறிப்பிட்ட ஒரு கிராமத்திலேயே மூன்று கொலைகள் செய்யப்பட்டன.

அனைத்துக்கும் ஒரு ஒற்றுமையிருந்தது. கண்டு பிடிக்கத்தவறிய பிரிட்டிஷ் போலீசார் மூடி விட்ட வழக்கை நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

காரணமிருக்கிறது.

கொலை செய்யப்பட்டவர்களில் ஒருத்தி என் தாத்தாவின் அம்மா. தனக்கிழைக்கப் பட்ட கொடுமைக்காக இன்னமும் நியாயம் கேட்டு அலைகிறாள்.

அவளுக்காக அந்தக் கொலை செய்த நபரைத் தேடுகிறேன். நிரந்தர இளமைக்காக மூன்று அப்பாவிகளின் உயிரை நரபலி கொடுத்த அந்த பயங்கர மிருகம் இன்னமும் இருக்கிறது.

அதுவும் இந்தக் கூட்டத்தில் இருக்கிறது. அதைக் கண்டுபிடித்தே ஆகவேண்டிய கட்டாயம் எனக்கு இருக்கிறது. கண்டுபிடிப் பேன்; நான் கண்டுபிடிப்பேன்.

"கதைக்கு வருகிறேன்" என்று- எதிர் முகங்களை ஆராய்ந்தவாறு-

ஆரம்பித்தாள்.

□□

**கொ**ச்சி ஹார்பரில் கப்பலை விட்டிறங்கிய போது அந்த பிரிட்டிஷ் தம்பதிகளுக்கு இங்கே காத்திருக்கும் பயங்கரம் தெரியாமலிருந்தது.

"தெரியாமல் தான் கேட்கிறேன் என் மனைவியே" என்றான் எட்வர்ட். "பம்பாய் போய் அங்கேயிருந்து நேரே ரயிலேறி சென்னை போவதைவிட்டு எதற்காக இந்த ஊருக்கு வந்தாய்? அதிகம் வளர்ச்சியடையாத இந்த ஊரில் என்ன சுவாரஸ்யம் வந்து விட்டது உனக்கு?"

அந்த லூசி சிரிக்காமல் பார்த்தாள். கடல் காற்று தள்ளிக் கொண்டு போகப் பார்த்த தொப்பியை இடது கையால் அழுத்திக் கொண்டாள்.

"இந்த மலையாள மண்ணின் இயற்கை அழகு அற்புதம் என்று என் சினேகிதி சொன்னாள். போகிற வழியில் பார்த்து விட்டுப் போகலாமே என்று. எப்படியும் நீ வேலையில் சேர பத்துநாள் அவகாசமிருக்கிறதல்லவா?"

சென்னை கவர்னரிடம் செயலாளராக பதவி ஏற்க நாளிருப்பது உண்மை.

"அது சரி. ஆனால் இங்கே தங்குவதற்கு ஹோட்டல்கூட இருக்கிறதா, இல்லையா என்று தெரியவில்லையே."

"மிஸ்டர் எட்வர்ட்" என்ற குரலுக்குத் திரும்பிப் பார்த்தார்கள்.

கவர்ச்சி மிகுந்த வாலிபன் ஒருவன் இமைக்காமல் நின்றான். அவன் மெல்ல சிரித்த போது-

சற்றே கூர்மையான இரு பற்கள் ஒரு வினாடி தோன்றி மறைந்தது போலிருந்தது அந்த லூசிக்கு.

ஆனால் அதிலும் ஒரு கவர்ச்சியை உணர்ந்தாள்; ரசித்தாள்.

"மெட்ராஸிலிருந்து தகவல் வந்தது. நீங்கள் இங்கே தங்கியிருக்கும் வரை எல்லா உதவிகளையும் செய்ய உத்தரவாகியிருக்கிறது."

"ஹோட்டல்?"

"இல்லை. முன்பு இங்கேயிருந்த இங்கிலாந்து அதிகாரி அவருக்காக அவர் மேற்பார்வையில் கட்டிய வீடு இருக்கிறது. அதில் உங்க ஊர் வசதிகள் எல்லாமே இருக்கும் வாருங்கள்"

"கார்?"

"இல்லை.. இந்த ஊர்க்காரரின் சாரட் வண்டி கொண்டு வந்திருக்கிறேன்.

அருவருப்பாகப் பார்த்தார்.

"நடந்து போக முடியாதா?"

"தூரம் அதிகம். காட்டுக்குள்ளே உயரமான இடத்தில் நவீனமாகக் கட்டப்பட்ட வீடு. அதை விட்டால் வேறு வீடு உங்களுக்கு உதவாது."

வட்டமான சதுரமான பெட்டிகள் போன்ற சங்கதிகளை பின்னால் கட்டிப் பத்திரப்படுத்தியதும்-

சாரட்டில் ஏறிக் கொண்டார்கள்.

நான்கு குதிரைகளும் கால் மாற்றி கால் வைத்து நின்றவை அந்த ஆளின் ஒரே சவுக்குச் சுழற்றலுக்கு-

எடுத்த எடுப்பில் வேகமாயின. காற்றுப் போல பறந்தன.

நெடுஞ்சாலையில் போகும்வரை உற்சாகமாக இருந்த தம்பதிகளுக்கு சரேலெனத் திரும்பிக் காட்டுக்குள்ளே போக ஆரம்பித்ததும் மெலிதான பயம் வந்தது.

"இவன் நல்லவன் தானா? நம்பி ஏறியது சரியா?" என்றெல்லாம் அந்த எட்வர்ட் குழம்ப-

அவள் வேறு வகையில் குழம்பினாள்.

அடிக்கடி யாரோ தொலைவில்- மிகத் தொலைவில் 'லூசி....' என்று பெயர் சொல்லி அழைப்பது போன்ற பிரமை வந்தது.

'முன்பின் தெரியாத இந்த ஊரில் யார் பெயர் சொல்லி அழைக்கப் போகிறார்கள்? என்று அலட்சியமாக இருக்க முடியவில்லை.

"என்ன தவிக்கிறாய்? திரும்பித் திரும்பிப் பார்க்கிறாய்?"

"ஏதாவது அழைப்பு கேட்டதா?"

"இல்லையே. ஏன்?"

தயங்கினாள். "ஒன்றுமில்லை. யாரோ கூப்பிட்ட மாதிரி இருந்தது."

"ஏதாவது சவுக்குத் தோப்பு இருக்கும். அதில் காற்று புகுந்து வந்தால் மனிதக் குரல் மாதிரியேயிருக்கும்." என்று கணவன் சொன்னான்.

கொஞ்சம் நிம்மதியானாள்.

"டிரைவர்" என்ற எட்வர்ட், அவன் பதில் சொல்லாமலிருக்கவே முதுகைத் தட்டினான். "உன்னைத் தான் டிரைவர் கூப்பிடுகிறேன்."

"நான் டிரைவர் அல்ல; வழிகாட்டி" என்றான் கோபமாக.

"சரி. வழி காட்டியே! இந்தக் காட்டுப் பாதையை விட்டால் வேறு நல்ல பாதையே கிடையாதா?"

"இருக்கிறது. கொஞ்சம் தள்ளிப் போனால் வரும் பெரிய சாலை."

"பின்னே அதில் போவதற்கென்ன?"

"இல்லை. அது கொச்சி அரசரும் அவர் குடும்பத்தினரும் மட்டுமே பயன் படுத்தும் சாலை. மற்றவர்களின் வாகனங்கள் போக அனுமதியில்லை."

பள்ளத்தில் இறங்கி ஏறியதால் அவள் மேல் தள்ளப்பட்ட எட்வர்ட் கோபமாக அவனை அறைந்தவன், அவன் முதுகின் உரத்துக்கு மிக வியந்தான். இப்படி ஒரு வலுவான ஆண்மகன்? அதுவும் இந்தியாவில்!

மிளகுக் கொடிகள் படர்ந்த பெரிய மரம் ஒன்றின் திருப்பத்தில் திரும்பியதும் திடீரென்று தெரிந்தது அந்த மாளிகை.

உயர உயரமான தூண்களுடன் - வெள்ளை மற்றும் கறுப்பு சலவைக் கற்களாலான உயரமான கட்டிடம்.

"ஏன் இவ்வளவு காட்டுக்கு உள்ளே கட்டியிருக்கிறார்?"

"நகரத்தில் மன்னரின் மாளிகையைவிடப் பெரிதாகக் கட்ட அனுமதி இல்லை."

இறங்கினவர்களின் பார்வையில் பட்டது அது. இடிந்து சரிந்து போன பழைய கோயில்.

"என்ன அது?"

"எங்கள் கோயில், உங்கள் சர்ச் மாதிரி."

"அப்படியா? பார்க்க வேண்டுமே! போகலாமா?"

"வேண்டாம் பாழடைந்த நிலையிலிருக்கிறது. உள்ளே போவது நல்லதல்ல!"

"அதென்ன பக்கத்தில் இரண்டு மேடுகள்?"

"அது இரண்டு தலையில்லாத உடம்புகள் புதைக்கப்பட்ட இடம்."

அந்த லூசி பயத்துடன் கணவனோடு ஒட்டிக் கொண்டாள். நடுங்கினாள்.

"பயப்படாதே. ஒன்றுமில்லை. வா போகலாம்." என்று அந்த பங்களா உள்ளே போகக் காலெடுத்து வைத்த போது-

சரேலென்று குறுக்கே வந்து நின்றாள் அந்தப் பெண். இமைக்காமல் லூசியைப் பார்த்தாள். கண் இமைக்காமல் வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

"யார் இந்தப் பெண்? என்ன பைத்தியமா?" என்று எட்வர்ட் கேட்க-

அந்தப் பெண்ணை அறைந்து தள்ளினான் அந்த வழிகாட்டி.

"ஏய். அவளை அடிக்காதே." லூசி தடுத்தாள்.

"என்ன தப்பு செய்து விட்டாள்? ஏன் அடிக்கிறாய்?"

"அவள் வேலை எல்லாம் நான் செய்ய வேண்டி வருகிறது. நாயே போ. தொலைந்து போ!"

முரட்டுத்தனமாக அவன் பிடித்துத் தள்ளிய வேகத்துக்கு - கவிழ்ந்து தரையில் விழுந்து அழுது கொண்டிருந்தாள் அவள்.

அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு படி ஏறும் கணவனைப் பின் தொடர்ந்தாள். உள்ளே போனாள்.

"யார் அவள்?"

"சமையல்காரி. உங்கள் பக்கத்து சமையலை எல்லாம் திறமையாக செய்வாள். ஒன்று கேட்கலாமா சீமாட்டியே."

"கேளேன்"

"என் ஆங்கிலம் உங்களுக்குச் சிரிப்பை தருகிறதா?"

"இல்லையே! எங்கள் க்ரேட் பிரிட்டனைப் போலவே இலக்கண மொழி பேசுகிறாய். எனக்குப்பிடிக்கிறது."லூசி கேட்டாள். "அவளுக்கு ஆங்கிலம் வருமா?"

"அவளைப் பற்றியே பேசுகிறீர்கள்?"

"அவளை எனக்குப் பிடிக்கிறது. இந்தியாவில் சந்தித்த முதல் தோழி. அவளை உள்ளே அழைத்து வா."

"நேரம் வரும் போது வருவாள்."

"சமையல்காரி என்கிறாய்?"

"சமைத்து வைத்திருக்கிறாள். உங்களுக்குப் பிடித்தமானவகையில் உங்கள் பக்கத்து சாப்பாட்டை....."

"அவளுக்கெப்படி தெரியும் எங்கள் சமையல்?"

"அது பிசாசு மாதிரி. இருந்த இடத்திலிருந்தே உலகத்தைப் பார்க்கும்."

அவர்கள் சாப்பாட்டு மேஜையை நோட்டம் விட்ட போது நிறைய பீங்கான் பாத்திரங்கள் கச்சிதமாக மூடிவைக்கப் பட்டிருந்தன.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்:-சி. றியாஸ்
வயது:-18
முகவரி:-61/, செமட்ரி றோட், கண்டி.
பொ.போ:- பத்திரிகை வாசித்தல்.



பெயர்:-ரி. பரீட்
வயது:-23
முகவரி:-P.O.BOX NO. 54291 RAMJILBARID-85863 JLEEB- ALSHUYOURH, AL KUWAIT.
பொழுது-போக்கு:- கிரிக்கெட் விளையாடுதல்.



பெயர்:- ஏ. ராஜேந்திரன்
வயது:- 22
முகவரி:- போட்வ்லூட் டிவிஷன், கந்தப்பளை.
பொழுது போக்கு:-பத்திரிகை, வானொலி, கிரிக்கெட்.



பெயர்:-தி. செல்வமணி
வயது: 25
முகவரி: புளியங்குளம், சாம்பல் தீவு, திருகோணமலை.
பொழுது போக்கு:- வழமையானவை



பெயர்:- பி. கலைச் செழியன்
வயது:-25
முகவரி:- 193 RUE ROBESPIRRE, 93170 BAGNOLET, FRANCE.
பொழுது போக்கு:- ஓவியம் வரைதல்.

பெயர்:-வி. ஜீவராஜன்
வயது:-21
முகவரி:- 58, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12.
பொ.போ:-வானொலி பத்திரிகை.

பெயர்:-எச். சக்ரி
வயது:-23
முகவரி:-பள்ளிவாசல் துறை, புத்தளம்.
பொழுது போக்கு:-பேனாநட்பு, பத்திரிகை.

## மகாபாரதத் தொடர்.....?

ஞாயிறு தோறும் எம்.ரி.வி.யில் ஒளிபரப்பாகும் மகாபாரதத் தொடர் சில சமயங்களில் திடுதிடுப்பென திறுத்தப்படுவதால், நாம் தரும் தமிழாக்கத்துடன் காட்சியைக்காண ஆவலுடன் காத்திருக்கும் எமது வாசகர்கள் ஏமாற்றமடைகிறார்கள். இதற்காகவருந்துகிறோம்.

கடந்த 18ம் திகதி ஒளிபரப்பாக வேண்டிய 83வது அங்கமும் 25ம் திகதி ஒளிபரப்பாக வேண்டிய 84வது அங்கமும் முறையே முரசின் 106 மற்றும் 107ம் இதழ்களில் வெளியாகிவிட்டன. 18ம் திகதி ஒளிபரப்பாமல் விடப்பட்ட 83ம் அங்கம் 25.06.95ல் ஒளிபரப்பாகும் போது பயன்படும். அதே போல் 84ம் அங்கம் 02.07.95 ஞாயிற்றுக்கிழமை ஒளிபரப்பாகும் நேரத்தில் உங்கள் கைகளில் இருக்கட்டும்.

மகாபாரதம் 85வது அங்கம் (09.07.95ல் ஒளிபரப்பு) எமது 109வது முரசில் வெளிவரும் என்பதனை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

ஆசிரியர்.

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(PRO/7/95)

அருள் ஜுவலர்ஸ்
4 3 6 3 3 1

வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

## அதிகமில்லைக் கொஞ்சம் தான்



அழகும் ஆபத்தாகிவிடுவதுண்டல்லவா? இந்தக் காண்டாமிருகத்துக்கு கொம்பு அழகு. ஆனால் அதே கொம்புதான் ஆபத்தாகவும் முடிந்திருக்கிறது. காண்டாமிருகக் கொம்புக்கு பலத்த மவுசு. மருத்துவ ரீதியாகவும், கலைப்பொருட்கள் செய்யவும் என்று பல உபயோகங்கள் இருப்பதால் கொம்பு வியாபாரிகள் துப்பாக்கிகளோடு அலைகிறார்கள். ஏற்கனவே உலகில் அரிதாகிவரும் காண்டாமிருகங்களின் எண்ணிக்கை வியாபார வேட்டைகளால் மேலும் குறைந்து வருகிறது.


ஆபிரிக்க காடுகளில்தான் காண்டாமிருகங்களின் தொகை சற்றே அதிகம். வியாபார உலகில் விலங்குகளுக்கும் ஆபத்து!

Kala

JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
4 3 3 6 8 6
61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மட்டுமல்ல மேலை நாடுகளிலும் ஆடு புலி ஆட்டம் பழக்கத்தில் இருக்கிறது. விலங்கினம்போல் வேசம் போடுவது வேடிக்கை காட்ட மட்டும் என்றால் பரவாயில்லை. விலங்காகவே மாறிவிடுவதுதான் வில்லங்கம்; மாறுகிறவர்களுக்கல்ல, மற்றவர்களுக்கு!

## வேசம் மட்டும் தான்





தினமுரசு வாரமலர்

## இதில் என்ன விஷயம் இருக்கு?

அடடே...சிகப்பாக பெரிசு பெரிசாக என்ன இது. எங்கே இருந்து வந்தது? என்றெல்லாம் ஆச்சரியப்பட வேண்டாம்.

அடிக்கடி வந்து ஊசிபோட்டுச் செல்லும் நுளம்புகள்மீது கவனமாயிருங்கள். அவை காவிச் செல்லும் பற்றீரியாக்கள்தான் படத்தில் இருக்கின்றன. இவற்றை 'பிளஸ் மோடியம்' என்று அழைப்பர். கெட்ட காரியம் செய்வதில் வல்லவை! நமது இரத்தத்திலுள்ள செங்குருதிச் சிறு துணிக்கைகளை துளைத்துப் புகுந்து அவற்றை வீங்கவைத்து வெடித்துச் சிதற வைத்துவிடுகின்றன. மலேரியா நோய் வருவதும், ஆபத்தாவதும் இதனால்தான். இன்னொரு விசயம், 'அனோபிலிட்' எனப்படும் பெண் நுளம்புகள்தான் இந்தப் பயங்கரமான பற்றீரியாக்களை [illegible]

## நீருக்குள் மான்

பெயர்-கனெற் ஈவான்ஸ். அமெரிக்க நீச்சல் வீராங்கனை.

தரையில் மான். தண்ணீருக்குள் இறங்கிவிட்டால் மீன்.

1986 இலிருந்து நீச்சல் போட்டிகளில - இவரது கொடி பறக்கத் தொடங்கியது.

ஃபிரீஸ்டைல் நீச்சலில் புகுந்து தூள்கிளப்பி 800 மீற்றரை இவர் கடக்க எடுக்க நேரம் 8 நிமிடம் 16.22 செக்கன்கள். இது ஒரு உலக சாதனை.



### தருவது வியோவிடை

ஒலிம்பிக் போட்டிகளில் மானாய் நடந்து மீனாய் பாய்ந்து நீரைக் கிழித்துப் போய் சாதனை படைத்ததில் தங்கப்பதக்கம் இரண்டு கிடைத்தது.

மானும், மீனும் கலந்த ஈவான்சுக்கு இப்போது 23 வயது. எனவே, இன்னும் பல தங்கப்பதக்கங்களை தட்டிக்கொள்ளும் கனவோடு இருக்கிறார். பாருங்கள் கனவு தெரிகிறதல்லவா கண்களில்!



## மாதவம் செய்திட வேணுமப்பா

'பெண்களாகப் பிறப்பதே பாவம்' என்று சொல்லுகிறவர்களை அழைத்து இந்தப் படத்தைக் காண்பியுங்கள். அமர்ந்திருக்கிறார்கள் பாருங்கள், அத்தனைபேரும் ஆண்கள். வெள்ளை ஆடையில் இருப்பவர் மட்டும் அசலான பெண்! பெண்ணாகப் பிறக்கவில்லையே என்று இவர்கள் எல்லாம் ஏங்கும்போது பெண்கள் இனி கவலையை மூட்டை கட்டித் தூர எறியலாம் அல்லவா!



[illegible]

படிப்பகம்